www.tamilarangam.net

6 . 5 . 94

THAYAGAM

உண்மை:5 குடல்:4 75¢

# தாயகம்

## விடுதலைப் போராட்ட முன்னோடி பாரிஸில் படுகொலை

### புலிகளே காரணம் என சீன செய்தி தாபனம் தகவல்

ஐரோப்பாவில் புலிகளின் அலுவலகங்களை மூடும்படி ஐரோப்பிய பாராளுமன்றம் கோரிக்கை

தமிழ் அகதிகளை நெதர்லாந்து திருப்பி அனுப்பும்

மே தின விழாவில் ஐ.தே.க மோதல் விஸ்வரூபம்

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CD விற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

தரத்தின் சின்னம்
நிரு பிராண்ட்®
Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.
உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

போலிகளை வாங்கி
ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
Tel:(416) 299-4202

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

# தமிழ் விடுதலைப் போராட்ட முன்னோடி பாரிஸில் சுட்டுக்கொலை

## புலிகளே காரணம் என சீன செய்தி தாபனம் தகவல்

ஈழ விடுதலைப் போராட்ட முன்னோடியான சபாரத்தினம் சபாலிங்கம் பாரிசில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார். இரண்டு தமிழ் இளைஞர்கள் அகதி விண்ணப்பத்திற்கான மனு தயாரிக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு இவரது வீட்டுக்கு வந்தனர். இவரது மனைவியும் மகனும் வீட்டில் இருந்த போது முன்புறமாக இவர் இந்த இருவருடனும் பேசிக்கொண்டிருந்திருக்கிறார். அப்போது வெடிச்சத்தம் கேட்டு 'கம்பியூட்டர் வெடித்துவிட்டது' என்று நினைத்துக் கொண்டு இவரது மனைவி ஓடி வந்து பார்த்த போது இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். சுட்டவர்கள் தப்பியோடியுள்ளனர்.

சீன செய்தி நிறுவனமான ஸின்ஹுவா செய்தியின்படி இந்தக் கொலையை புலிகளின் ஏஜண்டுகளே செய்ததாக கூறப்படுகிறது. அத்துடன் இந்தக் கொலைக்கான ஆணையை பிரபாகரனே பிறப்பித்ததாக கூறப்படுவதாகவும் இச்செய்தி கூறுகிறது. இந்த கொலை சம்பந்தமான பொலிஸ் விசாரணைகள் பாரிஸை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் புலிகளுக்கு பிரச்சனைகளை உருவாக்கக் கூடும் என்றும் இச்செய்தி கூறுகிறது.

சபாலிங்கத்துடன் நெருக்கமானவர்கள் இக்கொலையை புலிகளே செய்திருக்கலாம் என்று கூறியுள்ளனர்.

ஈழவிடுதலைப் போராட்ட ஆரம்ப காலங்களில் இளைஞர் பேரவையுடன் இணைத்துக்கொண்ட பின்னர் பாலம் ஒன்றுக்கு குண்டு வைத்த குற்றச் சாட்டில் பொலிசாரால் தேடப்பட்டு கைது செய்யப்பட்ட இவர் நான்காம் மாடியில் சித்திரவதைக்குள்ளானவர். குட்டிமணி, தங்கத்துரையுடன் தொடர்புகள் இருந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நெருங்கிப் பழகியதுடன் ஒரு தடவை அவரது காலில் காயம் ஏற்பட்ட போது அவரை பராமரித்துப் பாதுகாத்தவரும் கூட. பிரபாகரனுக்கு கரிகாலன், தம்பி என்ற பெயர்கள் ஏற்படக் காரணமானவரும் இவர் என்று கூறப்படுகிறது.

பிரான்சில் வாழ்ந்த காலத்தில் தமிழ் அகதிகளுக்கான மனுக்கள் தயாரிப்பதில் உதவி புரிந்து வந்தார். ஆசியா பதிப்பகம்

ம.ப பார்க்க..

# அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில தோற்கடிக்கப்பட்டுள்ளது. அரசு ஊழல் மலிந்தும் நிர்வாக சீர்கேடுகள் காரணமாகவும் வீண்செலவுகள் காரணமாகவும் ஆட்சி செய்வதற்கான தகமையை இழந்து விட்டது என்று குற்றம் சாட்டி கொண்டு வரப்பட்ட இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 71 பேரும் எதிராக 111 பேரும் வாக்களித்தனர்.

'நாங்கள் ஊழலுக்கும் லஞ்சத்துக்கும் எதிரானவர்கள், நாங்கள் ஊழலற்ற நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கிறோம்' என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானத்தை முடித்து வைக்கும்போது தெரிவித்திருக்கிறார்.

ஊழல் செய்பவர்களை தண்டிக்க சட்டங்களை கடுமையாக்க முயல்வதாகவும் எதிர்க்கட்சிகள் யோசனைகளை சமர்ப்பிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நிமால் சிறிபால டி சில்வா பேசும்போது லஞ்சம் பற்றி விசாரணை செய்ய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அத்துடன் சகல பாராளுமன்ற உறுப்பினர்களதும் சொத்துக்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

லக்ஷ்மன் ஜெயக்கொடி பேசும் போது

ம.ப பார்க்க..

# ஐரோப்பிய பாராளுமன்றம் புலிகளின் அலுவலகங்களை மூடுமாறு கோரிக்கை

ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றம் தற்போது தனது அங்கத்துவ ஐரோப்பிய நாடுகளை தங்கள் நாடுகளில் உள்ள புலிகளின் அலுவலகங்களை மூடும்படி கோரிக்கை விடுத்திருக்கிறது. பிரான்சின் ஸ்ருஸ்பூர்க்கை தலைமையகமாகக் கொண்ட ஐரோப்பிய பாராளுமன்றம் ஐரோப்பிய அங்கத்துவ நாடுகளின் பொது அமைப்பாகும்.

இந்த அமைப்பு கடந்த வாரம் இந்த கோரிக்கையை விடுத்திருக்கிறது. இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பட்சத்தில் ஐரோப்பாவில் பரிஸ், லண்டன், சுவிஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் செயற்படும் புலிகளின் நடவடிக்கைகள் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கோரிக்கை விடப்பட்டு ஒரு வாரத்தின் பின்பே பாரிசில் வைத்து சபாலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாரிசில்...

என்ற நிறுவனத்தின் தாபகரான இவர் சமீப காலங்களில் பல கவிதை நூல்கள், வரலாற்று நூல்கள் என்பவற்றைப் பதிப்பித்து வந்தவர். சேரன், செல்வம், சோலைக்கிளி, அருந்ததி, ஜெயபாலன் போன்றோரின் கவிதை நூல்கள், யாழ்ப்பாண வைபவமாலை, புத்தள முஸ்லிம்கள் சரித்திரம் போன்ற புத்தகங்களை இவர் வெளியிட்டிருந்தார். சமீப காலங்களில் தமிழ் விடுதலை இயக்க முன்னோடிகளில் ஒருவருடன் சேர்ந்து தமிழ் விடுதலைப் போராட்ட வரலாறு பற்றிய நூல் ஒன்றை தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

இவரது கொலை நடந்ததும் உடனடியாகவே தங்களுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இல்லை என்று திலகர் மறுத்துள்ளார். அத்துடன் இக்கொலையை அவர் கண்டித்துமுள்ளார்.

பிரான்சுப் பொலிசார் இந்தக் கொலை குறித்து தீவிர விசாரணை செய்து வருவதுடன் இவரது வீட்டில் இருந்த ஆவணங்கள், நூல்கள் என்பவற்றைக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த மரணத்தின் மத்தியிலும் இவர் குறித்து பல பொய்யான தகவல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட வண்ணம் உள்ளன. இதில் சில பத்திரிகைகளும் சம்பந்தப பட்டுள்ளன.

## வவுனியாவில் ஜெயமகா

வவுனியாவில் நடைபெற்ற ஜயமக தாக்குதலின் போது ஆறு புலிகள் கொல்லப்பட்டதாகவும் இருபது பேர் காயமடைந்ததாகவும் இராணுவம் கூறியுள்ளது. வவுனியா தாண்டிக் குளத்தின் ஊடாக வவுன்யா வந்தவர்கள் முள்ளியான் பகுதியில் பதினைந்து புலிகளின் உடல்களை கொண்டு சென்றதைக் கண்டதாக தெரிவித்தாக இராணுவ பேச்சாளர் கூறினார்.

தாக்குதல் நடந்த பகுதியில் 435 குடும்பங்களைச் சேர்ந்த 1232 பேர் தொடர்ந்தும் அப்பகுதியில் வசிப்பதாகவும் இதில் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களில் 15 பேர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இந்த தாக்குதலில் பூவரசங்குளப் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

## நம்பிக்கையில்லாத்..

எண்ணிக்கையற்றபடி காணமல் போனோர், விசாரணையின்றி நீண்ட காலம் சிறை வைக்கப்பட்டோர், அரச நிறுவனங்களின் மர்ம ஒப்பந்தங்கள், பத்திரிகையாளர் மீதான தாக்குதல் போன்ற வடிவங்களில் இந்த மீறல்களை ஊக்குவித்தது என்று குற்றம் சாட்டினார்.

சுதந்திரக் கட்சி தலைமையில் நான்கு கட்சிகள் இந்த தீர்மானத்தை கொண்டு வந்திருந்தன. வடக்கு கிழக்கில் அமைதி ஏற்படுத்தப்படவில்லை, வாழ்க்கைச் செலவைக் குறைக்கவில்லை, மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவில்லை, உணவு, சுகாதார, கல்வி, உர, நீர்ப்பாசன மானியங்கள் நிறுத்தப்பட்டது மக்களுக்கு சுமைகளைச் சுமத்தியுள்ளது, அரச நிறுவனங்கள் அரசை ஆதரிக்கும் வெளிநாட்டாருக்கு விற்கப்பட்டிருக்கிறது போன்ற குற்றச் சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருந்தன.

மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன பேசிய போது 'அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை வெளிநாடுகளிடமிருந்து பெற்ற போதும் பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை, பட்டினியும் வேலையின்மையும் எங்கும் உள்ளது, கல்விச் சேவை சீர்கெட்டுவிட்டது, ஊழல், லஞ்சம் மலிந்துவிட்டது' என்று கூறினார். இலங்கையின் 17 மில்லியன் மக்களில் 21 லட்சம் பேர் வேலையின்றி உள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அரசின் சார்பில் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க மறுத்தார். தேர்தல் காலத்தை ஒட்டிய எதிர்க்கட்சியினரின் விளையாட்டு என்று அவர் வர்ணித்தார்.

# டச்சு அரசும் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும்

சுவிஸ் அங்குள்ள அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது குறித்து செய்திகள் வந்ததன் பின்னர் இப்போது நெதர்லாந்தும் அகதிகளை திருப்பி அனுப்புவது பற்றி யோசித்து வருகிறது. நெதர்லாந்தில் உள்ள பதினையாயிரம் அகதிகளும் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறக் காரணமான அரசியல்காரணங்கள் முடிவுக்கு வந்துள்ளதால் திருப்பி அனுப்பப்படலாம் என டச்சு அதிகாரிகள் கருதுகிறார்கள். ஐ.நா அகதிகள் ஸ்தானிகராலயத்தின் மேற்பார்வையில் இவர்களைத் திருப்பி அனுப்புவது குறித்த பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெறுகின்றன. அத்துடன் இலங்கையில் உள்ள நெதர்லாந்து தூதுவரை இலங்கை அரசுடன் இதுபற்றி தொடர்பு கொள்ளும்படி நெதர்லாந்து அரசு அறிவுறுத்தியுள்ளது.

டச்சு நீதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் பலவந்தமாக அனுப்பப்படுவார்களா என்பது பற்றி கருத்து தெரிவிக்க மறுத்த போதும் அதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன என்று தெரிவித்தார்.

எந்த வகையான அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் உண்மையான அரசியல் அகதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

## மீனவர்களைக் கொன்ற புலிகள்

22 சிங்கள மீனவர்களைக் கொன்றதற்கு தாங்களே பொறுப்பு என்றும் கடற்படையினர் தமிழ் மீனவரைத் தாக்கினால் தாமும் பதில் தாக்குதல் நடத்தப் போவதாகவும் புலிகள் உரிமை கோரியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன. உள்ளூர் பத்திரிகை ஒன்றுக்கு கடற்புலிகளின் பெயரில் அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில் மார்ச் 15ம் திகதி நடைபெற்ற கொலைகளுக்கு உரிமை கோரப்பட்டுள்ளது. குதிரைமலை முனையில் நடைபெற்ற இந்தக் கொலைகளின் போது கைகள் கட்டப்பட்டு வாள்களால் வெட்டி பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர்.

அந்தக் கடித்தின் பின்புறத்தில் எழுதப்பட்ட குறிப்புகளின்படி அக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதிக்கும் கடற்படை, இராணுவத் தளபதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

# விஜேதுங்க-கூரே லடாய் மே தினத்திலும் ஒலித்தது

மே தினத்தன்று பிரேமதாசவின் சிலை திறப்பு விழாவிற்கு வருகை தருவதாக இருந்த ஜனாதிபதி இறுதி நேரத்தில் வரவில்லை. சுகவீனம் காரணமாக அவர் வரவில்லை என்று அவரது செயலாளர் விஜேதாச தெரிவித்தார். கூட்டம் முடியும் தறுவாயில் விஜேதுங்கவின் உரை என்று பிரேமதாசாவைப் புகழும் அறிக்கை ஒன்றை விஜேதாசா வாசித்தார். தனது மேதினச் செய்தியில் வருமான வரி விலக்குகள், காப்புறுதி, ஓய்வூதியத் திட்டங்கள், உரமான்யம் வழங்குதல் பற்றி ஜனாதிபதி உறுதிமொழி அளித்திருந்தார்.

கட்சிக்குள் இருந்த பிரேமதாச ஆதரவாளர்கள் மத்தியில் ஜனாதிபதி வராமல் போனது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வைபவத்தில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பிரேமதாசா பிறந்த ஹல்ப்ஸ்டோர்ப் நீதிமன்றப் பகுதியிலேயே இந்த சிலை திறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சிலை திறப்பு விழாவில் பிரேமதாசாவின் மனைவி ஹேமாவும் கலந்து கொள்ளவில்லை. மேதினத்தை ஒட்டி புலிகள் தாக்குதலை நடத்தக் கூடும் என்ற அச்சத்தில் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. பல இடங்களில் தடைகள் அமைக்கப்பட்டதுடன் இராணுவத் தினரும் நிலை கொண்டிருந்தனர்.

விஜேதுங்க வராத போதும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் சிறிசேன கூரேயின் உதவியுடன் சிலையைத் திறந்து வைத்தார். சிலை திறந்து வைத்த பின்னர் சிறிசேன கூரே தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் சேர்ப்பித்தார். கூட்டத்தில் பேசிய கூரே 'குறிப்பிட்ட சிலர் பிரேமதாசாவின் கொள்கைகளை அழிக்க முயல்கிறார்கள்' என்று குற்றம் சாட்டினர்.

இந்த நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப இருந்த ரூபவாகினி இந்த நிகழ்ச்சிகளை ரத்துச் செய்து முன்பு பிரேமதாச கலந்து கொண்ட வைபவங்கள் பற்றி முன்னைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. அத்துடன் பின்னர் இந்த நிகழ்ச்சி பற்றிக் காண்பிக்கப்பட்ட போது கூரேயின் உரை காண்பிக்கப்படவில்லை.

கூரேயும் விஜேதுங்கவும் சமீப காலங்களாக பெரும் கெடுபிடிப் போரில் ஈடுபட்டிருந்தனர். காமினியை மீண்டும் கட்சிக்குள் கொண்டு வரும் ஜனாதிபதியின் முயற்சிக்கு கூரே ஆதரவளிக்கவில்லை. அனுரா பண்டாரநாயக்கவைக் கட்சியில் சேர கோரிய கூரே காமினியையும் அழைக்க வேண்டும் என்று விஜேதுங்க வற்புறுத்தியதாகவும் அதற்கு கூரே மறுத்ததாகவும் கூறப்படுகிறது. பின்னர் தென்மாகாணத் தேர்தலின் போது பிரசாரத்தில் பங்கு கொள்ளாது சிங்கப்பூர் சென்றதும் ஜனாதிபதியின் கோபத்திற்கு காரணமாகும்.

ஐ.தே.கட்சிக்குள் ஏற்பட்ட மோதல் காரணமாக 17 வருட ஆட்சியின் பின்னர் ஐ.தே.க தூக்கி எறியப்படலாம் என்று கருதப்படுகிறது. ஐ.தே.கவின் தனிப்பட்ட மோதல்களும் தேர்தல் தோல்விகளும் தற்போது சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு வழிகோலலாம்.

முன்னைய ஜனாதிபதிகள் போன்று விஜேதுங்கவிடம் வசீகரம் இல்லை. அத்துடன் நம்பகத்தன்மையும் ஐ.தே.கவிற்கு இப்போது பிரச்சனையாக உள்ளது.

விஜேதுங்க, கூரே மோதலில் கூரே அணியினர் ரணில் விக்கிரமசிங்கவையே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைக்க முயற்சிக்கின்றனர்.

ஜனாதிபதி தனது ஆதரவாளரை அப்பதவிக்கு நியமிப்பதற்கு வசதியாக தான் பதவியை விட்டு விலகப் போவதாகவும் அதற்கான காரணத்தை பகிரங்கமாக தெரிவிக்கப் போவதாகவும் கூரே தெரிவித்திருந்தார். கூரே பகிரங்கமாக தன்னை அவமானப்படுத்தக் கூடும் என்ற பயத்தில் ஜனாதிபதி கூட்டத்திற்கு வராமல் இருந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

தற்போது கூரேயின் இடத்திற்கு கலாநிதி காமினி விஜேசேகர நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கட்சிக்குள் ஏற்பட்ட மோதல் காரணமாக விஜேதுங்க தனது சீன விஜயத்தை பின்போட்டுள்ளார். கட்சி நெருக்கடியில் முக்கியமானவர்கள் இருப்பதால் ஆபத்துக்கள் நேரக் கூடும் என்ற பயமே இதற்கு காரணம். இதற்குள் சிங்களப் பத்திரிகையான ராவய வெளியிட்ட செய்தி ஒன்றில் இராணுவ அதிகாரி அல்கமையும் சிறிசேன கூரேயும் சேர்ந்து ஆட்சியைக் கவிழ்க்கக் கூடும் என்று செய்தி வெளிவந்தது.

# வடபகுதியில் நோய்கள்

யாழ் அரச அதிபரின் தகவல்படி இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் 32 பேர் கொல்லப்பட்டு 67 பேர் காயமடைந்துள்ளனர். குண்டுவீச்சுக்கள், ஹெலிகொப்டர் தாக்குதல்கள், ஷெல் வீச்சுகளால் இவர்கள் கொல்லப்பட்டனர்.

வடபகுதியில் மலேரியா, வயிற்றோட்டம் போன்ற நோய்களும் பரவி வருகின்றன. பலர் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்கு செல்ல முடியாத நிலையில் மரணமாகின்றனர். பலர் வருமானத்தை இழந்துள்ளனர்.

# சு.கவின் மேதினக் கூட்டத்தில் மக்கள் வெள்ளம்

சுதந்திரக்கட்சியினர் நடத்திய மேதின விழாவில் லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டது அரசியல் அரங்கில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அறிகுறி என்று கருதப்படுகிறது. சுதந்திரக்கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் சேர்ந்து நடத்திய இந்த மேதினக் கூட்டமே கொழும்பில் நடைபெற்ற பெரிய கூட்டமாகும்.

வழமையில் இந்திய நட்சத்திரங்களை அழைத்து காலி முகத்திடலில் கூட்டம் நடத்தும் ஐ.தே. கட்சி இம்முறை ஊர்வலம் எதையும் நடத்தவில்லை. மாறாக மே தினத்தன்று கொல்லப்பட்ட பிரேமதாசா நினைவாக சமய சடங்குகளை இம்முறை நடத்தியது.

சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் சுமார் ஐந்து லட்சம் பேர் வரை கலந்து கொண்டிருக்கலாம் என்றும் இது தங்களது ஆதரவு அதிகரிப்பதற்கான அறிகுறி என்றும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறிமாவோ சுகமடைகிறார்

எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ குடலிறக்க நோய்க்கான சிகிச்சையின் பின்னர் குணமடைந்து வருகிறார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அறுவைச்சிகிச்சையின் பின்னர் இரண்டு நாட்கள் வைத்தியசாலையில் அவர் தங்கிய பின்னர் இரண்டு வாரங்கள் ஓய்வு எடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

# பங்கு சந்தையில் திருப்பதி

இந்தியாவில் அதிக வருமானம் பெறும் ஆலயமான திருப்பதி தேவஸ்தானம் தனது அபிவிருத்தித்திட்டங்களுக்காக பங்கு சந்தையில் பங்குகளை விற்று ஐம்பது கோடி ரூபாய்களைத் திரட்டவுள்ளது. பதினைந்து வருட பிணைப் பத்திரங்களை எட்டு வீத வட்டிக்கு விற்று இந்தப் பணம் திரட்டப்படும். சென்ற வருடம் தேவஸ்தானம் 154.6 கோடி ரூபா சம்பாதித்தது. இதில் 148 கோடி ரூபா செலவிடப்பட்டது. இந்த வருமானத்தில் மூன்றில் ஒரு வீதம் பக்தர்களால் காணிக்கையாகவும் மீதிப்பணம் தங்குமிட வசதிகள், லட்டு விற்பனையாலும் பெறப்படுகின்றது.

அங்குள்ள விமான நிலையத்தை விஸ்தரிக்கவும், பாதைகளைத் திருத்தவும் கழிவு வாய்க்கால்களை நிர்மாணிக்கவும் இந்த பணம் பயன்படுத்தப்படவுள்ளது.

# ரஷ்யா இந்திய விமானங்களை திருத்தும்

இந்தியாவின் நூறு மிக் 21 விமானங்களை திருத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றை ரஷ்யா பெற்றிருக்கிறது. ரஷ்ய நிறுவனமான மிக்கோயான் நிறுவனம் இந்த ஒப்பந்தத்தை பெற்றிருக்கிறது. தற்போதைய நவீன கருவிகள், ஆயுதங்களை கொண்டு செல்லக் கூடியதாக இந்த மிக் விமானங்கள் மாற்றியமைக்கப்பட உள்ளன.

அமெரிக்கா, இஸ்ரேல், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள போட்டியிட்டன.

# புகலிடங்கள் வரை நீளும் "அநீதியின் கரங்கள்"

தமிழ் விடுதலைப் போராட்டத்தின் வேண்டத்தகாத பக்க விளைவுகளே இன்று போராட்டத்தின் உண்மையான நோக்கத்தை விழுங்கி விட்டன. இவற்றின் கொடிய கரங்கள் தாயகத்தில், மட்டுமல்ல புகலிடங்களிலும் இரத்த வெறி கொண்டு அலைகின்றன. இதன் எதிரொலி தான் இன்று சபாலிங்கத்தின் படுகொலை.

யார் மீது சந்தேகம் என்று குற்றம் சாட்டுவதற்கு முன்னதாகவே தங்களுக்குத் தொடர்பில்லை என்ற மறுப்புகள் வெளிவந்து விட்டன. கொலையாளிகள் யார் என்பதை விட, கொலைக்கான காரணங்கள் முக்கியமானவை. விடுதலைப் போராட்ட வரலாற்றை திரித்து எழுதிக் கொண்டிருப்பவர்களுக்கு அவற்றின் ஆவணப்படுத்தல் அச்சுறுத்தலாகியிருக்கக் கூடும் என்பது உண்மை.

மாற்று அமைப்புகளின் இயக்கங்களின் தலைவர்கள், உறுப்பினர்களின் படுகொலைகளுக்கு 'இனத்தை விற்று விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும்' குற்றச் சாட்டுக்களுடன் 'துரோகிகள்' பட்டம் சூட்டப்பட்டு நியாயப்படுத்தப்பட்ட வேளையில், ராஜினி போன்றோரின் படுகொலைகள் இன்னொரு காரணத்தின் அடிப்படையில் நடைபெற்றவை. விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் நடத்தப்பட்ட அராஜகங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்கள் அம்பலப்படுத்துவதை நிறுத்துவதற்காக நடத்தப்பட்ட கொலைகள் இவை. அடிப்படை மனித உரிமையான கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெரிக்கின்ற முயற்சிகள் இவை. இந்த கொலைகள் ஒரு இனத்திற்கு மட்டுமல்ல, முழு மனித இனத்திற்குமே எதிரான குற்றங்கள். இதனால் தான் இவை இலகுவில் உரிமை கோரப்படுவதில்லை.

இந்தக் கொலைகளின் வரிசையில் பாரிசில் நடந்த சபாலிங்கத்தின் படுகொலை புதிய அத்தியாயம் ஒன்றைத் தொடக்கியுள்ளது. 'தமிழ் ஈழப் போராட்டத்தின் 'அநீதியின் கரங்கள் வெளிநாடுகள் வரை நீளக் கூடிய வலிமை கொண்டன என்பதற்கான ஒரு சமிக்ஞை இது. போரினால் விரட்டப்பட்டு அன்னிய மண்ணில் நிம்மதி தேடி வந்தவர்களுக்கு விடப்பட்ட மிரட்டல் இது. இது வெறுமனே புலிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளை விமர்சிக்கின்றவர்களுக்கான பயமுறுத்தல் அல்ல. புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்கின்ற அனைத்து தமிழர்களுக்குமான ஒரு அச்சுறுத்தல்.

எமது மண்ணில் எமது அன்றைய மௌனம் தான் இன்று பலவந்தமாக குரல்வளை நெரிக்கப்பட்டு எல்லோருமே மௌனிப்பதற்கு காரணமாய் அமைந்தது. அன்றைய 'துரோகி ஒழிப்புகளின்' போது காட்டப்பட்ட மௌனம்தான் சகோதரப் படுகொலைகளுக்கு வழி சமைத்தது.

புலம் பெயர்ந்த மண்ணிலும் இந்த நிலை தொடங்கும் போது மௌனம் சாதிக்கப்பட்டால், எமது குரல்வளை இங்கும் நெரிக்கப்படும். தற்போதைய மௌனம் எமது நிரந்தர மௌனத்திற்கு வழி சமைக்க விடப் போகிறோமா? துப்பாக்கிக் குண்டுகளால் கருத்துக்களை அடக்க முடியாது என்பதை உணர வைக்க வேண்டிய கடமை தமிழ் மக்கள் முன் இருக்கிறது. இல்லையேல், இங்கும் விலங்குகளின் கைகளில் உள்ள ஆயுதங்களின்முன் அடிமைகளாக வேண்டிய நிர்ப்பாக்கிய சூழ்நிலைதான் ஏற்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மௌனமாய் அழும் இதயம் ஒன்று...

**-மொனிக்கா-**

உருகிப்போன அந்த தாய் இன்னும் அழுது கொண்டுதான் இருக்கின்றாள். தன் குழந்தைகளுக்காக தன்னையே அர்ப்பணிப்பவள் தாய் என்றால் மிகையாகாது. அந்த தாய் பிள்ளைகளை வளர்க்க எத்தனை சுமைகளை சுமக்கின்றாள். சிலரது வாழ்க்கை ஒரு போராட்டமாக கூட அமைந்து விடுகின்றது. அந்த போராட்டத்தின் மத்தியில் எதிர் நீச்சல் போட முடியாத பெண்கள் இன்று அதிகம் எனலாம். கனடாவில் தற்கொலைகள் வேகமாக நடைபோடுகின்ற காலம் இது. அருந்ததி தற்கொலை செய்ய முயன்று தோல்வியுற்றவர் இவரது அப்பீல் வழக்கு 5ந் திகதி Osgoode மேன்முறையீடு நீதிமன்றத்தில் 10.30க்கு நடைபெறவிருந்தது. நீதிபதிகள் வந்துவிட்டனர். திருமதி டயான் மார்டின் (அருந்ததிக்காக வாதாடும் வக்கீல்) சூசன் விச்செக் (அரசு தரப்பு வக்கீல்) அனைவருமே வருகை தந்துவிட்டனர் ஆனால் அருந்ததி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் அழைத்து வரப்பட்ட வேன் இன்னும் வந்து சேரவில்லை.

வக்கீல் டயான் மாட்டின் அருந்ததி 30 நிமிடங்களில் இங்கு வந்து விடுவார் என நம்புகிறேன். அவர் வரும் வரை வழக்கை தொடங்க வேண்டாம். அவர் வந்த பின்பு வழக்கை ஆரம்பிக்கலாம் என நீதிபதிகளிடம் தாழ்மையுடன் வினவினார். நீதிபதிகளும் இன்னும் ஒரு மணித்தியாலத்துள் அவர் வராவிட்டால் அருந்ததியில்லாமல் வழக்கை தொடரலாம். அப்படி அருந்ததி வந்துவிட்டால் தங்களுக்கு அறிவிக்கும்படியும் தாங்கள் வந்து வழக்கை தொடர்வதாக கூறி உள்ளே சென்றுவிட்டனர்.

அருந்ததியை பார்க்க வேண்டும் என்ற ஆவல் என்னை மேலும் தூண்டியது. நான் அருந்ததிக்கு பல மாதங்களுக்கு முன்பு கடிதங்கள் எழுதினேன். அதற்கு அருந்ததி எந்த பதிலுமே எழுதவில்லை. கதை புத்தகங்கள் அனுப்பினேன். பத்திரிகைகள் அனுப்பினேன் அருந்ததி வாசித்து முடித்து விட்டார் என அறியமுடிந்தது. அருந்ததியை சந்திப்பதற்காக அவர் சிறை வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலைக்கு சென்று அனுமதி பத்திரம் கிடைக்காததால் 2 மணித்தியாலம் வெளியே பெஞ்சில் அமர்ந்திருந்து திரும்பிய அன்று இரவுதான் என் அன்பு தந்தை இறந்த செய்தியறிந்து துடித்தேன். அந்த துயரில் அருந்ததியையும் மறந்து போனேன். ஆனால் இன்று அருந்ததியின் வழக்கு. துயரின் நடுவே அவரைப் பார்ப்பதற்காக அதிகாலையிலிருந்து காத்திருக்கிறேன். 20 நிமிடங்கள் ஓடிமறைந்திருக்கும். ஒரு பொலிஸ் பெண்மணி அருந்ததியை அழைத்து வந்தார். மீண்டும் நீதிமன்றம் கூடியது. உருகி உருகி உருக்குலைந்து மெல்லிய உருவமாய் அருந்ததி மௌனமே உருவாக அமர்ந்திருந்தார். அவரது கண்களில் இன்னும் கண்ணீர் கசிந்து கொண்டிருக்கின்றது. வழக்கு தொடர்கிறது.

வக்கீல் டயான் மாட்டின் அருந்ததியின் வழக்கின் நியாயதனை எடுத்துரைத்தார். ஆறு வருட சிறைதண்டனை இவருக்கு அதிகம். அத்தோடு இவர் கிங்ஸ்டன் சிறைச்சாலைக்கு அனுப்பபட்டால் அச் சூழ்நிலை அருந்ததிக்கு அவர் மனோநிலையை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும். மொழி, கலாசாரப்பிரச்சனை அங்கு அவருக்கு சிறைச்சாலை அனுபவத்தை தீவிரப்படுத்தும் காயங்கள் ஆறிவரும் சூழ்நிலையில் அவருக்கு இடம் கொடுங்கள் நீதிமன்றம் கொடுக்கும் தீர்ப்பை விட அருந்ததி தனக்கு கொடுத்துள்ள தண்டனை பெரிது என்றார்.

அரசாங்க தரப்பு வக்கீல் சூசன் விச்செக் 6 வருட சிறைதண்டனை கூடியதல்ல. இவர் உதாரணம் காட்டிய வழக்குகள் யாவும் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டதாக கூறப்பட்டன. இதுவும் அதேமாதிரியானது. திட்டமிட்டு செய்யப்பட்ட கொலை என வாதாடினார். இவருக்கு 6 வருட சிறைதண்டனை கூடிப்போகவில்லையெனவும் மீண்டும் வாதாடினார். ஏற்கனவே அருந்ததி 2 வருடம் சிறையில் வாழ்ந்து விட்டார். இடையில் நீதிபதி அரசாங்க வக்கீல் சூசன் விச்செயிடம் எதிர்தரப்பு வக்கீல் கூறியதுபோல் அருந்ததி சமுகத்துக்கு ஒரு ஆபத்தானவர் இல்லை என்பதை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? என கேட்க. அரசாங்க வக்கீல் "ஆம் ஆபத்தில்லை"யென ஏற்றுக் கொள்கின்றார். வக்கீல் டயான் மாட்டின் வாதாடுகையில் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையிலும்கூட ஒருவர் திட்டமிட்டு செயல்படலாம் அருந்ததியும் இதைதான் செய்திருக்கின்றார் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் வேறு எந்த வித வழியும் தெரியாமல் இம்முடிவுக்கு வந்திருக்கிறார் என்றார். இவர் கிங்ஸ்டனுக்கு அனுப்பபட்டால் அந்த சூழல் சாதகமாக அமையாது. அது இவருக்கு நன்மை செய்வதை விட பாதகமாகவே அமையும் என வாதாடினார். அவர் தொடர்ந்து ரொரன்ரோவில் இருந்தால் பாக்டேல் சமுகசேவை அமைப்பு மனிதாபிமான ரீதியாக அவருக்கு வழங்கிய ஆதரவை தொடர்ந்து வழங்கும். தென்னாசிய பெண்கள் அமைப்பும் அவருக்கு ஆதரவளிக்க தயாராகவுள்ளது. இரண்டு மனோதத்துவ டாக்டர்களும் தமிழ் பேசுபவர்கள் ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளார்கள். டாக்டர் Cairn அருந்ததியை மனோதத்துவ ரீதியாக சோதனை செய்தவர். "அருந்ததி பிள்ளைகளை அன்பாகவே பேணி வளர்த்து வந்தார் இவர் வேறு வழியில்லாமல் மனம் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இவ் தீர்மானத்தை எடுத்துள்ளார்" என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அருந்ததி இப்போது பிராம்டனிலுள்ள வனியர் பெண்களுக்கான சிறைச்சாலைக்கு அனுப்பபடுவார். இது கிங்ஸ்டன் சிறைச்சாலை போன்றதல்ல. இரண்டு வருடத்துக்கு குறைவான தண்டனையை பெறும் கைதிகள் இங்கு அனுப்பபடுவார்கள். தற்சமயம் அருந்ததி 2 வருடம் வனியர்க்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு இரண்டு வருடம் முடிந்த பின்பு 3 வருடம் கண்காணிப்புடன் நன்னடத்தை பிணையில் (Probation) க்கு அனுப்பபடுவார். அந்த இடம் இன்னும் குறிப்பிடப்படவில்லை. அந்த மூன்று வருட கண்காணிப்புடன் ஆலோசனைகளும் வழங்கப்படவேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த கண்காணிப்பு எப்படி பட்டதாகயிருக்க வேண்டும் என இருதரப்பு வக்கீல்களும்

33ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இவ்வார சூரிய அழகன்



☎ புகலிடங்களிலும் துப்பாக்கிக் கலாச்சாரத்தை வளர்த்துவரும் புலிகள் உலக மக்களிடம் இன்று வேகமாய் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்கின்றனரே! முனிவா இதை இவர்கள் என்று உணரப் போகின்றார்கள்?

சுரேஷ், ஸ்காபரோ

உமது கேள்விக்கு பதிலளிக்கப் போகும் இந்நேரத்தில் பாரிஸில் திரு.சபாலிங்கத்தை 'இனம்' தெரியாத நபர்கள் சுட்டுக் கொன்றுவிட்டதாக இன்று செய்தி வருகிறது. யார் இந்த இனம் தெரியாததுகள்? தங்கள் துப்பாக்கிகள் தமது இனத்தைத்தான் அழிக்கின்றன எனத் தெரியாத இனங்கள் இவை! எமக்கு வந்து சேர்ந்திருக்கும் ஈனங்கள் இவை!! யார் இந்த சபாலிங்கம்? எமது வரலாற்றில் மறக்கப்பட்ட பக்கங்களை அல்லது மறைக்கப்பட்ட பக்கங்களை ஆவணப்படுத்திய, அதற்காக மேலும் முயன்ற தமிழ் அபிமானி இவர், அந்த தமிழனைத்தான் ஆணவம் பிடித்த சில கொடிய மிருகங்கள் கொன்று விட்டன. மிகக் கேவலமான இக் கொலையைச் செய்தவர்களும், அக்கொலைக்குத் துணை நின்றவர்களும், அக்கொலையை நியாயப்படுத்துவது போல திரித்து எழுதிவரும் இங்குள்ள சிலரும் என்றோ ஒரு நாள் தர்மத்தால் தண்டிக்கப்பட்டே தீருவார்கள். சபாலிங்கத்தின் ஆன்மா சாந்தியடையட்டும்.

☎ ஜே.ஆருக்கு பின் பிரேமதாசா, பிரேமாவுக்கு பின் விஜயதுங்க, இவர்கள் மூவரினதும் ஆட்சியிலுமே எந்தவிதமான சமாதான நிகழ்வுகளும் நடைபெறாமல் அழிவுகளே பெருகிவருகின்றன. இனி ஈழத்திற்கு ஒரு விடிவு வராதா?

ராஜன் ரொரன்ரோ

விதியே விதியே
தமிழ்ச் சாதியை
என் செய நினைத்தாய்
எனக் குரையாயோ?
கற்பக தருவோ?
காட்டிடை மரமோ??
விதியே, தமிழ்ச் சாதியை
எவ்வகை விதித்தாய் என்பதன்
மெய் எனக்
குணர்த்துவாய்...
விதியே விதியே...
தமிழ்ச் சாதியை
என் செயக்
கருதியிருக்கிறாயடா?

☎ அடைக்கலம் தேடி ஓடி வந்த நாட்டிலும் அடிதடி செய்து புகழ்பரப்பி வரும் வீரத் தமிழினத்தை என்ன செய்யலாம்?

ரி.விக்னேஸ்வரன் ரொரன்ரோ

ஒரு ஜோக் சொல்லட்டுமா? தமிழரல்லாத ஒரு கனேடியர் தன் நண்பர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் பற்றி சொல்லிக் கொண்டிருந்தாராம். "இலங்கைத் தமிழர்கள் பண்பாடற்ற வர்களாயும், படிக்காதவர்களாயும், புலிகளை ஆதரிப்பவர்களாயும் இருக்கிறார்கள்" என அவர் 'விளங்கப்படுத்தி' கொண்டிருக்கும் போது பக்கத்திலிருந்தவர் 'அப்படியில்லை' என ஆட்சேபித்தாராம். அதற்கு "அப்படியானால் அவர்கள் வேறு எந்த இயக்கத்தை ஆதரிக்கிறார்கள்?" என வியப்புடன் கேட்டாராம் அந்தக் கனேடியர்.

☎ கனடாவிற்கு வந்தபின் தமிழ்ப் பெண்கள் தண்ணியடிப்பதைபற்றி என்ன நினைக்கிறாய்?

ரி. விக்னேஸ்வரன் ரொரன்ரோ

தமிழ்ப் பெண்கள் தண்ணியடிப்பதோ, புகைப் பிடிப்பதோ பெரிய விஷயமா என்ன? ஊரிலேயே பெண்கள் கள்ளுக் குடிப்பதையும் சுருட்டு அடிப்பதையும்

## முனிவரின் பதில்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டிருக்கிறேனே, நீர் காணவில்லையா?

☎ பண்பாட்டு மாநாடு கூட்டுவதற்காக ரொரன்ரோவிலுள்ள கொமிட்டியுள் கசமுசாவாமே? இதைப்பற்றி விபரம் சொல்வாயா முனியா?

தமிழ்க் குடிமகன், ரொரன்ரோ

தமிழர்கள் சங்கம் வைப்பதும் சண்டை பிடிப்பதும் "ஈழத் தமிழ் பண்பாட்டுக்கு" ஒப்புடையதே எனும் வகையில் இதை நோக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது. தமிழை வளர்க்கிறோம்... வளர்க்கப் போகிறோம் என்றெல்லாம் பேசுபவர்கள் ஒன்றை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்களெல்லாம் சேர்ந்து வளர்க்கும் அளவுக்கு தமிழ் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. இந்தக் கோஷ்டிகள் வள....வள என்று பேசுவதை விட்டுவிட்டு தமிழில் தாங்கள் அறியாத விடயங்கள் இன்னும் எவ்வளவு இருக்கும் என அறிய ஆசைப்படட்டும். அதுபோதும். பண்பாடாம் பண்பாடு.

☎ விபூதி பூசிய முனிவரான நீர் அரசியல் கேள்விகளுக்கு பதிலளிப்பது எந்தவகையில் ஒப்புடையது. சமய சின்னங்களை உமது அரசியல் கொள்கைகளுக்கு உபயோகிக்கிறீர் அல்லவா!

செ.மகேந்திரன், ஸ்காபரோ

காந்திமகான் தனது சுயசரிதையில் கூட "அரசியலுக்கும் சமயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று கூறுவோர் சமயம் என்பது என்னவென்பதை அறியாதவர்கள்" என்று எழுதியிருப்பதை படித்திருக்கிறேன். காந்தி மட்டுமா, கார்ல் மார்க்ஸும்கூட இதையே சொல்லியிருக்கிறார். எனவே எனது விபூதியானது அரசியல் பேசுவதற்கு ஒரு தடையாக இருக்காது என்றே நம்புகிறேன். ('சமயோ'சிதமான பதிலோ?)

☎ அன்பின் முனி அவர்களே சில நாட்களுக்கு முன்பு என்னிடம் புலிகள் காசுகேட்க வந்தார்கள். உங்களிடம் வரவில்லையா.....

ராஜா ரொரன்ரோ

They are Just as smart as they can be...... unfortunately

☎ இங்கு தமிழர்கள் அடிக்கடி கடைகள் திறப்பதும் மூடுவதுமாயிருப்பதன் மர்மம் என்ன?

வசந்தன், ரொரன்ரோ

கடையில் எதை விற்கலாமோ இல்லையோ முழுக் கடையையுமே விற்று விடலாம் என்ற 'வியாபார' ரகசியத்தை தெரிந்து கொண்டதுதான் போலும்...

☎ வீரமிக்க தமிழர்களை கோழைகளாக மாற்றிய புலிகளுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?

நகுலன், ரொரன்ரோ

போராட்டம் என்ற பெயரில் புலிகள் தமிழ் மக்களை எலிகள் போல அஞ்சி வாழும் அளவிற்கு மாற்றி விட்டனர். ஒரு காலத்தில் கம்யூனிஸ்டுகள் கட்டியாண்ட அடக்குமுறை போன்றதொரு கொடுங்கோல் வலைப்பின்னல் இப்போது ஈழத்தமிழ் மக்கள் மீதும் வீசப்பட்டிருக்கிறது. பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பவற்றுடன் கருத்துச் சுதந்திரமும் மறைந்து போய்விட்டிருக்கிறது. "பீலி பெய் சாகாடும் அச்சு இறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்" என்பதை புலிகள் உணரவேண்டும்.

☎ கனடாவில் பிறந்து வளரும் குழந்தைகள் ஈழத்தில் பிறந்து வளரும் குழந்தைகளைவிட புத்திசாலிகளாக தென்படுகிறார்கள் என்பது எந்த அளவுக்கு உண்மை?

பஞ்சு, ரொரன்ரோ

யார் சொன்னது? இங்கு வளரும் பிள்ளைகளுக்கு நிறைய விடயங்களை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு சுலபமாக கிட்டுகின்ற படியாலும், பல பெற்றோருக்கு உண்மையிலேயே பல விடயங்கள் தெரியாமலிருப்பதாலும் நீங்கள் சொல்வது போன்றதொரு மயக்கமான தோற்றப்பாடு பலருக்கு இருக்கலாம். ஆனால் புத்திசாலியாக இருக்கும் குழந்தைகள்கூட இங்கு கெட்டுப்போகக் கூடிய சூழலும் இருக்கிறதே......!

காதலைப்பற்றி எழுதும் முனியண்ணை, உங்கள் காதலியான முனியண்ணியினைப் பற்றி எங்களுக்கு ஏன் எழுதக்கூடாது.....? (ஹி.....ஹி.....ஹி..... சிரிப்பு)

காயத்திரி, சுபத்திரா, ஸ்காபரோ

மானென்ன அவளைச் சொன்னால் மருளுதல் அவளுக்கில்லை மீன்விழி உடையாளென்றால் மீனிலே கருமையில்லை தேன்மொழிக்குவமை சொன்னால் தெவிட்டுதல் தேனுக்குண்டு கூன்பிறை நெற்றி என்றால் குறைமுகம் இருண்டு போகும் (யார் இது....? அமலாவோ குஷ்புவோ, பானுப்பிரியாவோ அல்லது......)

முனியண்ணை, எங்கள் அபிமான ரஜனிகாந்த் போல நீங்கள் 11.3. 94 தாயகத்தில் நடந்துவரும் படத்தைப் பார்த்து நாங்கள் சிரித்து.

காயத்ரி சுபத்திரா ஸ்காபரோ

(ஆன்ஸரிங் மெஷினில் விடப்பட்ட உங்கள் கேள்வி இதற்கு மேல் புரியவில்லை) தங்கைகளா சிரிக்கிறீர்களா? ரஜனிகாந்த் என்று நீங்கள் சொன்னபடியால் 'வீரா' படத்தைப்பற்றி சொல்லப் போகிறேன். ரோஜாவையும், மீனாவையும் கல்யாணம் பண்ணிக்கொண்டு ரஜனிகாந்த் படும் அவஸ்தையை 'வீரா' படத்தில் சில இடங்களில் ரஜனி அழுத்தமாக நன்றாகவே நடிக்கிறார். பல இடங்களில் ஜாலியாக நடித்து சிரிக்க வைக்கிறார். இல்லையா? (தங்கைகாள் நீங்கள் ரோஜாவையும், மீனாவையும் போல இருப்பீர்களா? அதாவது அழகாக...)

☎ தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா வெற்றி பெற்றால்...?

எம். பாஸ்கரன் நியூயோர்க்

வெற்றி பெற்றுவிட்டார். தென்னாபிரிக்காவில் கறுப்பு இன மக்களின் ஆட்சி வந்துவிட்டது இதன்மூலம் ஆபிரிக்காவின் ஒரு இடத்தில் ஜனநாயகம் புன்னகை பூக்கிறது. ஆனால் மண்டலோவின் வெற்றி உடனடியாக நிறப் பிரச்சனையையோ தென் ஆபிரிக்காவின் பிரச்சனைகளையோ தீர்க்கப்போவதில்லை என்பது மண்டேலா உட்பட அனைவருக்கும் தெரியும். இப்போது தீர்க்கப்பட்டிருப்பது ஒரு உலகப் பொதுப்பிரச்சனை.

☎ தாயகம் எங்களுக்கு மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிந்தித்தான் தபால் மூலம் கிடைக்கிறது. இதை உங்கள் ஆசிரியரிடம் சொல்லி 'கூரியர்' சேர்விஸில் அனுப்பச் சொல்வீரா? முனிவரே?
எம். பாஸ்கரன் நியூயோர்க்

"அமெரிக்கா" பக்கத்திலிருக்கும் நாடு... நீங்களே இப்படிச் சொன்னால் ஜேர்மனி பிரான்ஸ், சுவிஸ், இந்தியா, இலங்கை நாடுகளிலுள்ள எமது சந்தாக்காரர்கள் அப்படிக் குறை சொல்வார்கள் என்று யோசித்துப் பார்க்கவும்", என்கிறார் ஆசிரியர். உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு.....

☎ சூரியன் பத்திரிகையில் வரும் சூரிய அழகி பற்றி ஏன் கிண்டல் செய்கிறீர்கள்? உண்மையை சொன்னால், உங்களுக்குள்ள பொறாமைதான் இப்படி எழுத வைக்கிறது.....
(பெயர் சொல்லவில்லை)

அன்பு வாசகரே! நீங்கள் பெயரைச் சொல்லாவிட்டாலும் உங்கள் குரல் புரிகிறது. ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்.. ஆரோக்கியமான பத்திரிகைகள் வாரா என உண்மையிலேயே ஏங்குபவர்கள தான் நாங்கள் என்பதை உமக்கு நாங்கள் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை. Sun பத்திரிகையை முன்மாதிரியாக வைத்து தமிழ்ப் பெண்களை காட்டும்போது ஏற்படும் அருசை எமது பல வாசகர்களை மட்டுமல்ல எம்மைக் கூட உசுப்பி விடுகிறது. ஒருமுறை எமக்கு ஒரு வாசகர் 'விளையாட்டுப் பையன்' அழகிகள் வரமாட்டார்களா என கிண்டலாக கேள்வி அனுப்பியதையும் இப்போ நினைத்துப் பார்க்கின்றேன். இத்தோடு சேர்த்து ஒரு விடயம். சமீபத்தில் மொன்றியாலில் நடந்த வள்ளுவர் விழாவில் தாயகம் பத்திரிகையுடன் எழுத்தால் நெருங்கிய ஒருவர் நன்றியுரை சொல்லியிருந்தார். இது பிடிக்காததாலும் அந்த விழா நடந்ததால் காழ்ப்புக் கொண்டதாலும் எழுதப்பட்டதுபோல ஒரு விசேட நிருபர் சூரியனில் செய்திக்கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். விழாவை ஒழுங்கு செய்தவர்களால்தான் அந்த விழாவிற்கு அதிக மக்கள் வருகை தரவில்லை என்பது போன்ற பொய்யான பிரமை தரும் வகையில் எழுதிய 'தமிழ்' 'சண்' சூரியனுக்கு ஒன்று சொல்ல வேண்டும்.
ஓடி விளையாடு பாப்பா......
விஷய் நம்ப தோட்டத்திலே
விளையாடாதே பாப்பா......

☎ சங்கலி லேசர் இசைத்தட்டு பற்றி உமது அபிப்பிராயம் என்ன முனிவரே!
கிறிஸ்டினு, ரொரன்ரோ

இசைத்துறையில் எதையாவது சாதித்துக் காட்டவேண்டும் என்ற துடிப்பில் சூர்யகிரண் ஆர்ட்ஸ் வெளியிட்ட இந்த லேஸர் இசைத்தட்டு ஒரு பாராட்டத்தக்க முயற்சி. இசையமைப்பை கவனித்த குணரட்ணம் கிரிதரன் இன்னும் சிறப்பாக முயலவேண்டும். பாடிய குரல்களில் ஆனந்த பிரசாத்தின் குரல் அசர வைக்கிறது. நடா ஜெயதேவன் பிரமிக்க வைக்கிறது. சுந்தர் சொக்கவைக்கிறது. ராணிசங்கர் கிளுகிளுப்பூட்டுகிறது. கௌரி மயக்குகிறது. சுஹல்யா லயிக்கவைக்கிறது.

☎ தாயகத்தில் ஜெயந்தீசன் எழுதும்போது குடிப்பழக்கத்தையும் பெண்களையும் பற்றி ஏன் அடிக்கடி எழுதுகிறார். முனிவரே?
கிறிஸ்டினு, ரொறன்ரோ

'குடி'க்கதைக்கார... மன்னிக்கவும் 'குட்டி'க்கதைக்கார மன்னிக்கவும் 'புட்டி'க்கதைக்கார சீ... மன்னிக்கவும் 'சுட்டி'க்கதைக்கார.. ஐயோ... 'கார'க்கதைக்கார ஜெயந்தீசனைத்தான் கேட்கவேண்டும் அம்மணி.

☎ அண்ணன் முனி அவர்களே ..... தாழ்மையான கேள்வி ஒன்று வெகுகாலமாக நான் உங்கள் வாசகனாக கனடாவில் வாழ்ந்து வருகிறேன். உங்கள் எழுத்து ஒவ்வொன்றும் L.T.T.E க்கு எதிராகவேயுள்ளது. அதற்குக் காரணம் முன்பின், என்னமாதிரி அப்பன், புலிகளிடம் அடிவாங்கினீரோ?
சுகிர்தன், ஸ்காபரோ

(நீங்கள் கருணாநிதியின் குரல்போல பேசி கேள்வியை ஆன்ஸரிங் மெஷினில் விட்டபடியால் பதிலும் அவ்வாறான குரலிலே தருகிறேன்)

இல்லையப்பா இல்லை... வான்பொய்யா யாழ்குடா நாடு... மான்துள்ளும் வன்னிக்காடு.. தேன்மொழியும் மட்டு வீடு எங்கள் ஈழமண்டலம். அங்கே விடுதலை கமண்டலம் ஏந்தி வந்தவர்கள், சூழ்ச்சி பல வகுத்து பலரின் சுந்தர வாழ்வை சூறையிட்டததால்தான் இப்படி எழுதுகிறோம்.. ஆள்வதற்கு நான், மாள்வதற்கு நீ என ஆணவம் பேசும் அக்கிரமக்காரர்களுக்கு ஆரத்தியெடுக்க முடியாமல்தான் இப்படி எழுதுகிறோம். புலியிடம் அடிவாங்கியதால் அல்ல ஐயனே!

☎ முல்லா எங்கே முனிவரே! காணவில்லையே?
ஜோ, மொன்றியல்

முல்லா சுத்துப்பயணம் போனபடியால் சில நாட்களாக காணவில்லை. இதோ முல்லா கதை.: முல்லா பிற்ஸா கடைக்குப் போயிருக்கிறார். 'ஒரே பசி, ஒரு முழுப் பிற்ஸா தாங்கோ.. முழுதையும் தின்னப் போறேன்' என்றார் முல்லா. கடைக்காரர் எட்டுத் துண்டாக வெட்டித்தரவா என்று கேட்க.. 'அவ்வளவு பசி இல்லை, நாலு துண்டாக வெட்டித் தாரும், போதும்' என்றாராம் முல்லா.

☎ பாட்டுக்களில் நல்ல பாட்டுக்கள் என சினிமாப்பாட்டுக்களை சொல்லும் முனிவரே, நீர் சமீபத்தில் பார்த்த படங்களில் நல்ல படங்களைச் சொல்வீரா?
திருமதி நகுலேஸ்வரி, ஸ்காபரோ

சமீபத்தில் பார்த்த நல்ல படம் என்றால் ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க்கின் 'ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' என்ற ஹொலிவூட் படத்தைச் சொல்ல வேண்டும். இரண்டாம் உலக யுத்தத்தின் போது யூதர்களை ஹிட்லர் பூண்டோடு அழித்த நேரத்தில் போலந்திலிருந்த கொஞ்ச யூதர்களை காப்பாற்றிய ஒரு ஜேர்மன் வர்த்தகர் பற்றிய இந்த கறுப்பு வெள்ளைப்படம் உண்மையில் ஒரு காவியம். கொலைகள் நிறைந்து 'கொலைப்படமாக' இருக்கும் என நினைத்துப் போனால் அற்புதமான ஒரு கலைப்படம் என சொல்ல வைத்து விட்டது. எத்தனையோ அரசியல்வாதிகளால் சொல்ல முடியாத பெரிய அரசியல் இந்த படத்தின் மூலம் சொல்லப்பட்டு வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கண்ணீர் அஞ்சலி
# சபாரத்தினம் சபாலிங்கம்



**1.14.1952** **1.5.1994**

ஓர்மம் பிடித்தவன் நீ
உண்மைக்கு விளக்கேற்ற
தர்மத்தின் வழிவந்தாய்

தடுத்து நிறுத்த வந்தவர்
துப்பாக்கி குண்டுகளை
பரிசாகத் தந்தார்

ஆறாது ஆறாது
அழுது நின்றால்
துயர் தீராது

நீ சரிந்த நிலத்தினிலே
நாம் நடப்போம் நெடும் தூரம்

தீ உமிழும் கண்களிலே
துயரத்தை தொலைக்கின்றோம்

**கனடா நண்பர்கள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறனாய்வு

## சுபைர் இளங்கீரன்

***எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் 1993 மே மாதம் வெளியிட்ட 'தேசிய இலக்கியமும் மரபுப் போராட்டமும்" என்ற தொகுப்பு நூலில் இருந்து இக்கட்டுரை மறுபிரசுரம் செய்யப்படுகிறது. தனது முன்னுரையில் 'இந்நூலில் அடங்கியுள்ள கட்டுரைகள் அனைத்தும் முப்பது வருடங்களுக்கு முன் ஈழத்து தமிழ் இலக்கிய அரங்கில் சர்ச்சைக்குள்ளான விசயங்களையும் படைப்பிலக்கியங்களைப் பற்றிய சிந்தனைகளையும் எத்துக் காட்டுவன, இன்றைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு இவை ஒரு வகையில் ஆதர்சமாகவும் அமையலாம்' என்கிறார்.***

***இளம் எழுத்தாளர்களுக்கும் திறனாய்வாளர்களும் இவ்வியங்கள் சேர வேண்டும் என்பதற்காக பதுமை இலக்கியம் மலரில் 1962ல் வெளிவந்த இக்கட்டுரையை தாயகம் நன்றியுடன் மறுபிரசுரம் செய்கிறது.***

பொருள், செயல் இவை இரண்டும் வாழ்க்கையோடு கலந்திருப்பவை. பொருள் என்கின்றபோது இயற்கைப் பொருட்கள் மட்டுமின்றி செயற்கைப் பொருட்களும் அதனுள் அடங்கும். செயல் என்கின்றபோது மனிதன், இயற்கை, பிற ஜீவராசிகள் முதலியவற்றின் செயல் அதனுள் அடங்கும்.

ரசனை என்பது மனிதனுக்கே சொந்தமான ஒரு நுண்ணிய உணர்வு. அவனுடைய இயற்கையான சுபாவங்களிலே அதுவும் ஒன்று. அதற்கேற்ப அவன் பொருளையும், செயலையும் கண்டு ரசித்தான். அவற்றை ஆராயவும் விமர்சிக்கவும் செய்தான். இதோடு நின்று விடாமல் தன் ரசனையையும், விமர்சனத்தையும் உருவகப்படுத்தி மனத்திருப்தி அடைவதற்காகவும் பிறருக்கு வெளிப்படுத்தி மனக்களிப்பு அடைவதற்காகவும் கலைகளையும் சிருஷ்டித்தான். கலைகள் தோன்றியவுடன் தன் சுபாவத்திற்கேற்ப அவற்றை ரசிக்கவும் விமர்சிக்கவும் செய்தான். எனவே திறனாய்வு என்பது புதிய விஷயமல்ல.

வாழ்க்கை என்பது கஞ்சா போதையில் காணும் கனவுமல்ல, பிரபஞ்சக் கூட்டுக்கு வெளியே உள்ள பிரமையுமல்ல, வெறும் மயக்கமுமல்ல, அது இயற்கையையும், மனிதனையும், பிற ஜீவராசிகளையும் கொண்டு தன்னைத்தானே திரும்பத்திரும்ப புதிய கோலத்துடன் சிருஷ்டித்துக் கொண்டு நம்மை நவரச உணர்ச்சிகளிலும் மூழ்கி முழுக வைத்து, உணர்வித்து அனுபவிக்கச் செய்யும் பிண்டப்பிரமாணமான யதார்த்தம். முழுமையின் சத்தியம், இச்சத்தியத்தின்– யதார்த்தத்தின்– கதையை கலையுணர்வு செழித்துக் கொழிக்க இனிமையும், அழகும் ரசமும் சொட்டச் சொட்டச் சொல்லவும், விமர்சிக்கவும் செய்கிற எழுத்தின் செயல்தான் இலக்கியம். இவ்வாறு வாழ்க்கையின் முழுத்தேற்றத்தையும், அதனுள் அடங்கியுள்ள ரசனையையும், ரகசியத்தையும் புலப்படுத்த வேண்டிய இலக்கியம் தன் தொழிலைச் சரிவரச் செய்திருக்கிறதா என்று பரிசீலனை செய்ய, அதன் குறைநிறைகளை ஆராய்ந்து எடைபோட முற்படும் முயற்சிதான் இலக்கியத்திறனாய்வு.

பழங்காலத்திலும் வாழ்க்கை ரசிக்கப்பட்டிருக்கிறது: விமர்சிக்கபட்டிருக்கிறது. இவற்றின் விளைவுகளில் ஒன்றுதான் பண்டைய இலக்கியங்கள் இவ்விலக்கியங்கள் அக்காலத்திலும் திறனாய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

**வாழ்க்கை என்பது கஞ்சா போதையில் காணும் கனவுமல்ல, பிரபஞ்சக் கூட்டுக்கு வெளியே உள்ள பிரமையுமல்ல, வெறும் மயக்கமுமல்ல, அது இயற்கையையும், மனிதனையும், பிற ஜீவராசிகளையும் கொண்டு தன்னைத்தானே திரும்பத்திரும்ப புதிய கோலத்துடன் சிருஷ்டித்துக் கொண்டு நம்மை நவரச உணர்ச்சிகளிலும் மூழ்கி முழுக வைத்து, உணர்வித்து அனுபவிக்கச் செய்யும் பிண்டப்பிரமாணமான யதார்த்தம். முழுமையின் சத்தியம், இச்சத்தியத்தின்– யதார்த்தத்தின்– கதையை கலையுணர்வு செழித்துக் கொழிக்க இனிமையும், அழகும் ரசமும் சொட்டச் சொட்டச் சொல்லவும், விமர்சிக்கவும் செய்கிற எழுத்தின் செயல்தான் இலக்கியம். இவ்வாறு வாழ்க்கையின் முழுத்தேற்றத்தையும், அதனுள் அடங்கியுள்ள ரசனையையும், ரகசியத்தையும் புலப்படுத்த வேண்டிய இலக்கியம் தன் தொழிலைச் சரிவரச் செய்திருக்கிறதா என்று பரிசீலனை செய்ய, அதன் குறைநிறைகளை ஆராய்ந்து எடைபோட முற்படும் முயற்சிதான் இலக்கியத்திறனாய்வு.**

முன்பு முச்சங்கங்கள் இருந்ததையும், அக்காலப் புலவர்களின் நூல்கள் அச்சங்கங்களில் அரங்கேற்றப்பட்டு வந்ததயும் நாம் அறிவோம். ஆராய்ந்து பார்க்கும்போது ஒவ்வொரு அரங்கேற்றமும் ஒவ்வொரு விமர்சன விழாவாக இருந்திருக்கிறது என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

திருக்குறளைப் பற்றிய கதை பலருக்குத் தெரிந்திருக்கும். வள்ளுவரின் குறள் அரங்கேற்றத்திற்கு வந்தபோது அது ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்றும், சங்கப் புலவர்களுக்கிடையில் பலத்த சர்ச்சையை உண்டாக்கி விட்டதென்றும், இறுதியில் சங்கப் பலகையில் வைத்துச் சோதிக்கப் பட்டதாகவும், அப்பலகை திருக்குறளைத் தகுதியுடையது என்று ஏற்றுக் கொண்டதால் அந்நூல் அரங்கேறப்பட்டதாகவும் அக் கதை கூறுகிறது. இதன் உண்மை பொய் ஒருபுறமிருக்கட்டும். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் சங்கப் புலவர்கள் வள்ளுவரின் குறளைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார்கள் என்பதுதான்.

இக்கதை உண்மையோ பொய்யோ என்பது வேறு விஷயம், ஆனால் இக்கதையும் இலக்கியத் திறனாய்வும் அக்காலத்திலும் இருந்திருக்கிறது என்ற

26ம் பாக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அளவிற்கதிகமான கொலஸ்திரோல் என்ன செய்யும்?

பத்ம மனோகரன்

நன்றி: அஆஇ

அன்றாட உரையாடலிலும் பத்திரிகைகளிலும் 'கொலஸ்திரோல்' என்றசொல் அடிக்கடி பாவிக்கப்படுவதை நாம் அறிவோம். நாம் சுகதேகிகளாக இருப்பதற்கு கொலஸ்திரோலின் அளவைக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதையும் நம்மிற் பலர் அறிந்துவைத்திருக்கிறோம்.

நாம் இக்கட்டுரையில் கொலஸ்திரோல் என்றால் என்ன? ஏன் கொலஸ்திரோலைத் தவிர்க்க முடியாது? அளவுக்கு மிஞ்சிய கொலஸ்திரோல் எவ்வாறு எம்மைப் பாதிக்கிறது என்ற கேள்விக்குப் பதிலளிக்க முனைகிறோம்.

## கொலஸ்திரோலின் பங்கு என்ன?

நம் உடலில் ஈரல் நாளொன்றுக்கு ஒரு கிராம் கொலஸ்திரோலை உற்பத்தி செய்கிறது. கொலஸ்திரோல் நமது உடலை சரிவர இயங்க வைப்பதுடன் கலச்சுவர்களை அமைப்பதிலும் சில ஓமோன்களை உற்பத்தி செய்வதிலும், பித்தத்தைச் சுரக்கச் செய்வதிலும் முக்கிய பங்கினை வகிக்கிறது. பித்தமானது இரைப்பையில் உள்ள உணவு சிறு குடலைச் சென்றடைவதற்கு உதவுகிறது. வழக்கமாக ஈரலைச் சென்றடையும் கொழுப்புக்கும் கொலஸ்திரோலுக்கும் அதேவேளை ஈரலில் இருந்து குருதியைச்சென்றடையும் கொழுப்புக்கும் கொலஸ்திரோலுக்கும் இடையில் ஓர் சமநிலை காணப்படுகிறது. ஈரல் தான் தயாரிக்கும் கொலஸ்திரோலின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் குருதியிலிருந்து எடுக்கும் கொலஸ்திரோலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும இச்சமநிலையை தானே ஒழுங்கு செய்து கொள்கிறது. கொலஸ்திரோல் கூடிய உணவுப்பொருட்களை உட்கொள்வதன் மூலமோ அல்லது சலரோகம் போன்ற நோய் இருந்தாலோ எம்மில் மேலே குறிப்பிட்ட சமநிலை குழப்பப்பட்டு விடுகிறது.

கொலஸ்திரோலானது நம் உடலில் வேறுபட்ட புரதங்களுடன் பிணைக்கப்பட்ட நிலையில்குருதியினூடாகக் கடத்தப்படுகிறது. இப்புரதங்களை லிப்போ புரதங்கள் (Lipo protein) என்று அழைக்கலாம். இப்புரதங்கள் இரண்டுவகைப்படும்.

1. அடர்த்தி குறைந்த லிப்போ புரதங்கள்(IDl) LOW DENSITY LIPO PROTEIN
2. அடர்த்தி கூடிய லிப்போ புரதங்கள் (HDL) HIGH DENSITY LIPO PROTEIN

இந்த LDL கொலஸ்திரோலுக்கும் HDL கொலஸ்திரோலுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் மிக முக்கியமானது. ஏனெனில் இவை இரண்டும் மாறுபட்ட வழியில் தொழிற்படுபவையாகும்.

LDL கொலஸ்திரோல் குருதிக்கலன்களிற் படிந்து தீங்கு ஏற்படுத்தவல்லன. இவ்வாறு இந்த கொலஸ்திரோல் இரத்த நாளங்களில் படிந்து அதன் சுவர்களைத் தடித்துப் போகச்செய்வதை arteriosclerosis' என்று கூறுவர். இதனால் குருதிக்கலன்களின் விட்டம் குறைந்து ஒடுக்கமாயோ அல்லது அடைக்கப்பட்டோ போகவும் கூடும். இதுவே இருதய நோய்களுக்குக் காரணமாயுள்ளது.

இதற்கு மாறாக அடர்த்தி கூடிய ழDL கொலஸ்திரோல் நன்மை தரக்கூடியதாகும். இது குருதிக்கலன்களின் சுவர்களில் படிந்துள்ள LDL கொலஸ்திரோலை அகற்றி மீண்டும் ஈரலுக்குக் கொண்டு செல்லும். ஆகவே ஒருவரது குருதியில் உள்ள மொத்த கொலஸ்திரோலும் அடர்த்தி கூடிய HDL கொலஸ்திரோலுக்கும் அடர்த்தி குறைந்த HDL கொலஸ்திரோலுக்கும் இடையில் உள்ள விகிதாசாரமும் முக்கியமானதாகும்.

## ARTERIOSCLEROSIS காரணமாக ஏற்படும் அபாயங்கள்

நாடிகள் ஒடுக்கமாவதால் தேவையான அளவு ஒட்சிசன் எல்லா அவயங்களுக்கும் கிடைக்கமாட்டாது. ஒட்சிசனைக் கொண்டு செல்லும் குருதியின் அளவு குறைவதால்தான் இந்நிலை ஏற்படுகின்றது. இதயத்தைப் பொறுத்தமட்டில் வேலை செய்யும்போது நெஞ்சில் நோ (angina pectoris) ஏற்படலாம். காலில் இரத்த ஓட்டம் குறைவாக இருந்தால காலில் நோ ஏற்படலாம். நாடித்துவாரங்களின் விட்டம் குறைந்து முற்றாக அடைபட்டுப்போனால் இழையங்களுக்குக் குருதி கிடைக்காமற் போய்விடும். இதனால் அந்த இழையங்கள் இறந்துவிடும் இதனை ஆங்கிலத்தில் infarct என்பர். இது இதயத்தில் நடைபெற்றால் heart infarct என்றும் மூளையில் நடைபெற்றால் brain infarct என்றும் அழைக்கப்படும்.

அளவிற்கதிகமான கொலஸ்திரோல் heart infarct நோய்களுக்குக் ஒரு காரணமாகும். புகைப்பிடித்தல், சலரோகம், உயர் இரத்த அழுத்தம் என்பன இதற்கான பிற காரணங்களாகும், உடலின் உடை கூடுதலாக இருப்பதுவும் போதுமான தேகாப்பியாசம், விளையாட்டுப் பயிற்சியின்றி உடலைத் தேவையான அளவு இயக்காமல் வைத்திருப்பதுவும் இதற்கு இன்னும் துணை போகும். சில குடும்பங்களில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய காரணங்கள் எதுவும் இல்லாத நிலையிலும் கூட இந்நோய்கள் குடும்பத்துக்குள் அறுபது வயதுக்கு முன் Heart intarct நோயால் தாக்கப்பட்டிருந்தாலும் அக்குடும்பத்திலுள்ள இன்னொருவருக்கு இந்நோய் ஏற்படலாம். தாக்கப்பட்ட குடும்பத்தின் மருத்துவ சரித்திரத்தைப் பொறுத்ததே இது. ஆகவே அதிக கொலஸ்திரோலும் மேற்கூறிய காரணிகளும் சேர்ந்து நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களை அதிகரிக்கச் செய்கின்றன.

இந்நோயைத் தடுப்பதற்கு அளவிற்கதிகமான கொலஸ்திரோலைக் குறைப்பதும் வேறும் இந்நோயை ஏற்படுத்தவல்ல காரணிகளைக் கண்டறிந்து அவற்றை நீக்குவதும் அவசியமாகும்.

23 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மயக்கங்கள்

அருண்

குடியானவனோ முடி வேந்தனோ எவரெனினும் மனைவி, மக்களை விட்டு துறவு பூண்டால் அவன் குடும்பம் உளவியல் ரீதியாகப் பாதிக்கப் படுவதுடன் மனைவியானவள் உடலியல் ரீதியாகவும் பாதிப்புற நேரும்.

இத்தகைய பாதிப்புகளை பிறருக்குச் சுமத்தி விட்டு தான் பற்றற்ற வாழ்வு நோக்கிச் செல்வதாகக் கூறிக் கொள்வது கூட ஒரு வகையில் சுயநலமே.

சன்மார்க்கம் கொண்டாலும், தத்துவங்கள் சொன்னாலும் இவர்கள் சொல்லும் பற்றற்ற வாழ்வின் ஆரம்பம் சுயநலத்தில் இருந்தே முளைவிட்டது. இங்கு எங்கும் பொது நலம் தென்படவில்லை.

சுயநலமி ஒருவர் அவதாரம் ஆக்கப்பட்டது எங்ஙனம்?

இளவரசன் சித்தாத்தனாய் இருந்து கௌதம புத்தர் என ஆக்கப்பட்ட மனிதனைப் பற்றியே வினவுகிறேன்.

முனிவர்கள் சித்தர்கள், ஞானிகள், யோகிகள் முன்பும் இந்தக் கேள்வி பிரசனனமாகிறது.

இவர்கள் மார்க்கம் தான் உன்னதமென்று உடன்பட முடியவில்லை. ஏனெனில் இந்து, பௌத்த மதங்களில் இல்லறம் தவறு என்று சொல்லப்படவில்லை. ஆனால் சிற்றின்பம் துறந்து பேரின்பம் அடைவது மானிடத்தின் மிகப்பெரும் பேறு என போதிக்கப்படுவது எதனால்?

பேரின்பம் பெற சிற்றின்பத்தை மானிடர் யாவரும் கைவிட்டால் நிலமை என்ன?

மானிடத்தின் இடையறு அசைவு முற்றுப் புள்ளிக்கு வந்துவிடும். ஔவை சொன்ன அரிய பிறப்பான மானிடப் பிறப்பு அஸ்தமித்து விடுமன்றோ.

மறுபுறம் புராணங்களில் எந்த விடயமும் காமலீலைகளுடனே சொல்லப்படுகிறது. தேவர்களும் ஏன் கடவுள் அவதாரங்களும் இந்தச் சிற்றின்பத்துக்காக அலைந்ததாகவே ஏராளம் கதைகள் இருக்கின்றன.

பெண் வேடத்தில் இருந்த திருமாலை சிவன் மோகித்து ஐயனார் பிறந்ததாகவும் கதை.

இவை தத்துவங்களை விளக்க என்றாலும் கூட விளக்கப்பட்ட வழி சிற்றின்ப ஆணி வேராகக் கொண்டதே.

அப்போ பற்றற்ற வாழ்வு வாழ்ந்தவர்கள் புராணங்களுடன் முரண்படுகிறார்களா?

★ ★ ★

உயிர்த்து எழுதல் என்பது மரணித்த ஜீவராசி மீண்டும் அதே உடலுடன் வாழத் தொடங்குவதையே குறிக்கும்.

உயிர் என்பது தொடர்பாய் ஒவ்வொரு மதமும் குறித்த கருத்துகள் கொண்டுள்ளன.

கிருத்துவ மதத்தில் மறுபிறப்போ அதாவது உயிர் இன்னொரு உடல் எடுப்பதோ, முன்னய பிறப்பின் கர்மவினைப்படி அடுத்த பிறப்பு அமையும் என்பது பற்றியோ கருத்து இல்லை.

யேசு நாதர் உயிர்த்து எழுந்தார் என கிறிஸ்தவ வேதத்தில் சொல்லப்படுகிறது.

உயிர்த்து எழுந்ததாகக் கொள்ளின் அதே உடலுடன் மீண்டும் அவர் இவ் உலகில் வாழ்ந்திருக்க வேண்டும். அது நடக்கவில்லை. அவர் பரலோகத்திற்கு ஆரோகணமானார். அதாவது உடலுடன் மேலுலகு சென்றார் என்றே கூறப்படுகிறது.

மூவருக்கு காட்சியளித்ததாகக் கதை உண்டு.

காட்சியளித்ததிலும் உயிர்தெழுந்திருந்தால் கர்த்தாவால் அனுப்பப்பட்ட நோக்கம் நிறைவேறியிருக்குமல்லவா?

காட்சியளித்தது என்பது சொல்லப்பட்டது. உயிர்த்தெழுந்து வாழ்வது என்பது காணப்பட்டிருக்கக் கூடியது. சொன்னதை கேட்டுக் கொள்வதிலும், காண்பது பெறுமதியானது.

★ ★ ★

யேசுவின் பிறப்பு பற்றி ஆதாரமான தகவல்கள் கிட்டவில்லை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

யேசுநாதர் பெத்லேமில் பிறந்ததற்குக் கூட ருசு இல்லை.

யேசு பிறந்ததாகக் கூறப்படும் டிசம்பர் 25 என்பதில் கூட ஆணித்தரமான சான்றுகளில்லை

யேசு சிலுவையில் அறையப்பட்டு சில தசஆண்டுகளின் பின்பே மத்தியூஸ், லூக் போன்றோரால் கதைகள் தொகுக்கப்பட்டன.

யேசுநாதரின் பிரசங்கங்கள், பாவங்களை மன்னிக்கும் பக்குவம், தவறுகளை உணர்த்தும் லாவகம், அன்பு செய்ய வேண்டும் போதனைகள் போற்றுதலுக்குரியன.

மக்கள் நலனுக்காக, அவர்கள் அறியாமையை அகற்றும் சேவைக்காக அவர்கள் சுபீட்சத்திற்காக தன்னுயிரையும் தந்த ஒரு மகானின் மரணம் மகத்தானது.

இந்த உயர் தியாகத்தினை புனிதப்படுத்தவும் மக்களை அதில் ஒன்றுகச் செய்யவும் எனத்தான் யேசுநாதரின் உயிர்த்தெழுதல் சொல்லப்பட்டதோ?

★ ★ ★

கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள

ராஜி 796 2672

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில்
பெற்றுக் கொள்ளலாம்

Net, Colorful Flower Bouquet, Flower Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Scarborough Dental Office

- *Cosmetic Dentistry*
- *Crown & Bridges*
- *Gum Treatment*
- *Root canals*
- *Bleaching*
- *Dentures*
- *Surgery*

★ அவசர சிகிச்சைகளுககு
முன்னறிவிப்பு இன்றி
சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம்
பெறுபவர்களுக்கும் சிகிச்சை
வழங்கப்படும்




## Dr.Athi K.Somasundaram

## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
**•Wheel Chair Access**
**•Free Parking**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப்
பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல்
செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 Noon-5 PM**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொலைத் தொடர்பில் புதுப்புரட்சி

# கைகளில் தவழும் கம்பியூட்டர்கள்



அப்பிள் மக்கின்ரோஷ் கம்பியூட்டர்களை வடிவமைத்தவர்களில் முக்கியமானவர்களான அன்டி ஹேர்ட்ஸ்பீல்ட், பில் அற்கின்சன் ஆகிய இருவரும் தற்போது கைக்கடக்கமான கம்பியூட்டர் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். தற்போது அப்பிள் நியூட்டன் போன்ற இந்த கம்பியூட்டர் பல்வேறு புதிய உபயோகங்களைக் கொண்டிருக்கும். இந்த ரகக் கம்பியூட்டர்கள் Hand held communicators என்றழைக்கபடுகின்றன.

மக்கின்ரோஷ் கம்பியூட்டர்களில் உள்ள graphical user interface ஐயும் Hypercard எனப்படும் மக்கின்ரோஷ் புரோகிராமில் உள்ள விடயங்களையும் கலந்து புதிதாக உருவாக்கப்பட்டது தான் இந்த கையடக்க கம்பியூட்டர். (இதற்கு முன்னர் ஹைப்பர்காட் பற்றி... இது மேசைகளில் விலாசங்களை பதிவு செய்வதற்காக வைக்கப்பட்டிருக்கும் ரோலொடெக்ஸ் காட்டுகளின் தொகுப்பு போன்றது. உங்கள் தகவல்கள் ஒவ்வொன்றும் (பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் என்பன) ஒவ்வொரு அட்டையில் பதிவு செய்யப்படும். ஆனால் ஒவ்வொரு அட்டைகளும் மற்ற அட்டைகளுடன் தொடர்பு படுத்தப்பட்டிருக்கும்.)

ஜெனரல் மஜிக் என்ற பெயரிலான இந்த கம்பியூட்டர்கள் அப்பிள் நியூட்டன் போன்று கையெழுத்துக்களை வாசிக்காது. தற்போதைய கையடக்க கம்பியூட்டர்கள் கையெழுத்தை வாசிப்பதில் மிகவும் சிரமப்படுகின்றன. அப்பிள் நியூட்டனை அறிமுகப்படுத்திய போது நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் Meet Anne at 1 o'clock என்று எழுதிய போது Marry Anne at 1 o'clock என்று நியூட்டன் புரிந்து கொண்டதாம். (தாயகம் மாதிரி எழுத்துப் பிழையோ?) இதனால் கையெழுத்து வாசிக்கும் திறன் இந்த கம்பியூட்டர்களுக்கு இருக்காது. மாறாக, இவற்றின் திரையில் தோன்றும் கீபோர்ட்டில் எழுத்துக்களை தட்டச்சிக் கொள்ளலாம். அத்துடன் உண்மையான கீபோர்டுகளைப் பொருத்தியும் பயன்படுத்தலாம்.

சாதாரண கையடக்க கம்பியூட்டர்கள் தகவல்களைச் சேகரித்துக் கொள்ளவும் தொலைதொடர்புகளை ஏற்படுத்தவும் தான் பயன்படும். ஆனால் இந்த கருவி பல புதிய விடயங்களைச் செய்யக் கூடியது. இதன் திரைப்பகுதி ஒரு அலுவலக மேசையின் அமைப்புமுறையைக் கொண்டது. அதில் உங்கள் address book, தொலைபேசி (இதில் அழுத்தியதும் அந்த இலக்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்படும்), கலண்டர் (இதில் செய்ய வேண்டிய விடயங்களின் அட்டவணை இருக்கும்), குறிப்பு புத்தகம் (இதில் படங்கள், கருத்துக்கள் எதையும் பதிவு செய்யலாம்), மணிக்கூடு, ஃபாக்ஸ், இலத்திரனியல் கடிதப் போக்குவரத்து (e mail) என்று பல விடயங்கள் இந்த திரையில் படங்களாக உள்ளன. அவற்றில் விரலால் அழுத்தியதும் அவை திரையில் தோன்றும்.

மற்ற ரக கம்பியூட்டர்களுடன் கம்பியில்லாத் தொடர்புகள் ஏற்படுத்தப்படுவதால் நீங்கள் உங்கள் நண்பருக்கு கடிதம் அனுப்ப வேண்டுமாயின் அதை திரையில் பதிந்து விட்டு, விலாசப் புத்தகத்தில் அவரது பெயரைத் தேடிப் பிடித்து அவரது விலாசத்தை அழுத்தி அனுப்பும்படி சொன்னால் போதும். உடனடியாகவே உங்கள் நண்பரின் கருவியில் உங்கள் செய்தி போய் சேரும்.

இதில் உள்ள அலுவலக அறையின் அமைப்பை விட, மற்ற அறைகளின் அமைப்பும் உண்டு. விளையாட்டறை (கம்பியூட்டர் விளையாட்டுக்களுக்காக), களஞ்சிய அறை (தகவல்களைச் சேமிக்க), நூலகம் (புத்தகங்கள் உள்ள இடம்) என்றும் உண்டு. கம்பியூட்டர் விளையாட்டுக்களில் ஈடுபட வேண்டுமாயின் விளையாட்டறையில் அழுத்த வேண்டியது தான். கருவி வீடியோ விளையாட்டுக் கருவியாகி விடும்.

இதை விட நகரின் மத்தி (டவுன்ரவுன்) என்ற பகுதி உண்டு. இங்கு வியாபார நிலையங்கள், சேவை நிலையங்கள் உள்ளன. இங்கே நீங்கள் அழுத்துவதன் மூலம் லேசர் இசைத்தட்டு முதல் சீன உணவகங்களில் இருந்து உணவு வரை ஓடர் செய்து கொள்ளலாம். இதை விட மற்ற செய்திகளைச் சேகரித்து வைத்திருக்கும் பெரிய கம்பியூட்டர்களுடன் தொடர்பு கொண்டு செய்திகளை, தரவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். இலங்கை பற்றிய செய்திகள் தேவை என்றால் குறிப்பிட வேண்டியதுதான். கருவி தானாகவே உங்களுக்காக இலங்கை பற்றிய செய்திகளைச் சேகரித்து தரும்.

இந்த கருவி மூலம் பாக்ஸ் அனுப்பக் கூடியதாயிருப்பதுடன் உங்கள் தொலைக்காட்சி, ஸ்ரீரியோவை இயக்கும் றிமோட் கருவியாகவும் பாவிக்க முடியும்.

மற்ற கருவிகளை விட இந்த புதிய கருவியில் உள்ள அம்சம் ரெலிஸ்கிரிப்ட் எனப்படும் ஏஜண்டுகள் தான். நீங்கள் இன்னொரு கம்பியூட்டருக்கு இந்த ஏஜன்டை அனுப்பி விட்டு அதைப் பற்றி மறந்து விட வேண்டியதுதான். இந்த ஏஜண்ட் அங்கே இருந்து உங்களுக்கு வேண்டிய தரவுகள், செய்திகளைத்



விஞ்ஞானப்பிரகாசன்

26 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கீதவாணியின் நாத ஓவியத்தில்

## சிவப்பிரகாசம்

"ஞாயிற்றுக் கிழமை என்றால் பத்து மணிக்குப் பின்னர்தான் துயில்நீத்து எழும்பும் எத்தனையோ பேரை காலை ஆறு மணிக்கே வானொலிக்கு முன்னால் குந்த வைத்த பெருமைக்குரிய கீதவாணியை கேட்க நானும் வைகறையில் எழுந்துவிட்டேன்."

விமர்சனம் என்றால் நாலு கடி கடிப்பதற்கு பதிலாய் இப்படி ஆரம்பித்து விட்டேன் என்ற மன நெருடலோ தெரியவில்லை... ஏதோ யோசித்துக் கொண்டிருந்தேன். என்ன விஷயமாக? எம்.ஜி.ஆர். பற்றி... யதார்த்தமில்லாத சினிமாக்கள் மூலம் மக்களை ஒரு மாயையில் மயக்கி வைத்து தமிழினத்தைப் பின்னுக்குத் தள்ளியவர் என புத்திஜீவிகள் அவரை வைதுகொண்டிருந்தனர். அதே சமயம் அவருடைய சினிமாக்களைப் பற்றி இன்னொரு அபிப்பிராயம் இருந்ததை மறுக்க முடியாது. எத்தனையோ குடும்பச் சுமையையும் பிரச்சனைகளையும் தாங்கிக் கொண்டு வறுமையில் வாடும் மக்களுக்கு மனதுக்கு ஒரு குதூகலத்தைச் சில மணி நேரமாவது அந்தப்படங்கள் தந்ததை எப்படி மூடிமறைக்க முடியும்? ENTERTAINMENT என்று சொல்லும் போது அதற்கு எது அளவுகோல் என்றால்... அது எவ்வளவு தூரம் மற்றவர்களை குதூகலமாக வைத்திருக்கிறதோ அதுதான் அதன் அலகு. அவ்வாறானால் ENTERTAIN-MENT விஷயங்களில் ஈடுபட்டவர்கள் சமூகத்தைப் பற்றியோ கலாச்சாரம் பற்றியோ கருத்தில் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையா? வானொலி சினிமா என்பவை வெறும் பொழுதுபோக்குச் சாதனம் மட்டும்தானா? இதற்கான பதிலை கீதவாணியை (88.9 FMல் குறிப்பிட்ட நேரங்களில் ஒலிபரப்பாகும் வானொலி) உதாரணமாக வைத்துக்கொண்டு தேடுவோம்.

எங்கு போய் வாழ்ந்தாலும் இடியப்பம், தோசை, பிட்டு இல்லாமல் வாழ்வதற்கு கஷ்டமாக எமக்கு இருக்கிறதே. அது போல இலங்கை வானொலியில் ஊறிய இதயங்களுக்கு அது அப்படியே இங்கும் தேவைப்படுதலில் தவறு காணமுடியாது. இனிமையான பாடலையும் நிகழ்ச்சிகளையும் எதிர்பார்த்து வானொலிக்கு முன் உட்கார, அது புரியாத விஷயகனமான நிகழ்ச்சிகளை பிரசங்கித்துக் கொண்டிருந்தால் பலரும் வானொலியை கேட்காமலே மூடிவைத்துவிடக் கூடிய நிலையில்தான் கனடாத் தமிழ் சமுதாயம் இருக்கிறது. அவ்வாறான நிலையில் தரமான இரசிகர்களை உருவாக்கி படிப்படியாக அவர்களின் இரசனையின் தரத்தையும் உயர்த்த வேண்டிய கடமை வானொலி நிகழ்ச்சி ஆக்குனர்களுக்கு உண்டு. ஆனால் இரசனையின் தரத்தை உயர்த்துவதற்கு எவ்வித பிரயத்தனமும் இல்லாவிடில் இனத்தின் நாகரீக மேம்பாட்டுக்கும் அறிவு வளர்ச்சிக்கும் அடிக்கும் ஆப்புகளில் அதுவும் ஒன்று என்பதை கலை இலக்கிய தொடர்பு சாதன கர்த்தாக்கள் உணரவேண்டும். புதியவற்றை ஏற்றுக்கொள்ளும் தன்மை தமிழினத்தில் குறைவு என்பதால் பழசையே மீட்டிக் கொள்வதுதான் தலைவிதியா? அந்த இயல்நிறமூர்த்தங்களை நாமும் அப்படியே எம் வாரிசுகளுக்கு கடத்திச் சென்றால் எமது கலை இலக்கிய கலாச்சாரங்கள் மந்தித்துவிடும். அந்நிலை மாறவேண்டும். CREATIVITY என்பது புதுப்புது பரிமாணங்களில் புகுத்தப்படவேண்டும்.

வானொலி நிகழ்ச்சிகளில் விளம்பரப் பேட்டிகளுக்கும் நிஜ சந்திப்புகளுக்கும் வித்தியாசம் தெரிவதில்லை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் 'இது விளம்பரம்" என அறிவிக்கவேண்டிய கடமை தயாரிப்பாளருக்கு உண்டு. அல்லாவிடில் விளம்பரதாரரின் கருத்தை நடுவுநிலைக் கருத்து என்று நிகழ்ச்சியை கேட்போர் குழம்ப வேண்டியிருக்கிறது. தாமே காசு கொடுத்து தமது பேட்டியை தாம் விரும்பியவண்ணம் ஆக்கிக் கொள்வதற்குப் பெயர்தான் 'விளம்பரப்பேட்டி' நிஜ சந்திப்பின்போது நேயர்களையும் தொலைபேசி மூலம் கேள்வி கேட்க அனுமதித்தால் என்ன? அதற்கான தொழில்நுட்ப வசதி இருக்கிறது. ஆனால் பல பிரமுகர்கள் அதை விரும்பாமல் இருக்கலாம் என்பதும் உண்மை. கேள்வி கேட்பவர்களும் நம்ம பிரமுகர்களும் அவைக்கடக்கமாக நடந்து கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாதுதான். அந்த நாகரீகத்தையும் நாம் கற்கவேண்டும் அல்லவா!

இலங்கை இந்தியா போன்று இல்லாமல் அனேகமானவரிடம் 'ஸ்ரீரியோ செட்டு'களோ அல்லது 'கசட் பிளேயர்' களோ உள்ளது. பாடல் பதியப்பட்ட நாடாக்களும் உள்ளது. சினிமாப் பாடல்களை விரும்பிய நேரத்தில் விரும்பிய வண்ணம் கேட்கும் வசதியும் உள்ளது. எனவே இங்கு பாடல்களை ஒலிபரப்பும் போது கிடைத்தற்கரிய பாடல்களை தேர்ந்தெடுங்கள். பாடல்களை உபயோகித்து கருத்துக்கள், துணுக்குகள், நகைச்சுவை பண்பாட்டுக் கோலங்கள் போன்றவற்றை சுவைபடத் தாருங்கள். இலக்கிய நயங்களை அலுப்புத்தட்டாத முறையில் தாருங்கள்.

கவிதை இலக்கியம் சாதாரண மக்களின் கவனத்தில் இருந்து எடுபட்டுக் கொண்டு இருக்கும் இவ்வேளையில் இரசிக்கும் வண்ணம் கொடுங்கள். 'இசையும் கவிதையும்' என இலகுநடைக் கவிதைகளை கதம்பமான இசைத் தூறல்களுடன் நடமாடவிட்டால் சிலவேளை கவிதையார்வம் துளிர்விடலாம். கவிதையின் வரிகள் புதுப்புதுக் குரல்களில் கருத்துக்களை ஆகர்சித்த வண்ணம் உணர்வுபூர்வமான வரும்போது கவிதையைக் கண்டு வெறுப்போரும் அதில் காதல் கொள்வர்.

'எம்மொழி எம் இனம்' என்று மேலைத்தேசத்தைவிட நாம் கொண்டுள்ள உயர்வுகளை மட்டுமன்றி கீழ்மைத்தனங்களையும் அவை செப்பனிடப்பட வேண்டிய முறை பற்றியும் பாடல்கள் சினிமா வசனங்கள் கலந்துரையாடல்கள், நாடகங்கள், மேலைத்தேசத்தவர்கள் கூறிய கருத்துகள் போன்ற சாதனங்களால் தெளிவுபடுத்தினால் ஒரே கல்லில் பல மாங்காய்கள் ஆச்சே!

'இசையும் கதையும்' போன்ற நிகழ்ச்சிகளை நடத்தும் போது பாவனை கலந்து இருக்க வேண்டும்: வாசிப்பவர் அந்த அந்தப் பாத்திரங்களாகவே மாறிவிடவேண்டும்: குரல் தாழ்ந்து நெகிழ்ந்து சந்தர்ப்பங்களுக்கு அமைவாக வேண்டும்: இதை நிகழ்ச்சி தயாரிப்பாளர் புரிந்து கொள்ளவும் வேண்டும். ஆரம்ப காலத்தைவிட இப்போது வளர்ச்சி இருப்பினும் கதையுடன் பல இடங்களில்

22 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.ஆர் ஜெயவர்தன அவர்களுக்கு

## அன்பான ஜே. ஆர்.!

தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மண் கவ்வியதைக் கண்டதும், சாய்வு நாற்காலியில் இளைப்பாறிக் கொண்டு தர்மபோதனைகள் அடங்கிய நூலைப் புரட்டிக் கொண்டிருக்கும் வயோதிபம் அடைந்த இராஜதந்திரியை திடீரென எமக்கு ஞாபகம் வந்ததாலேயே இதனை எழுதுகிறோம். 1977 பொதுத்தேர்தல் முடிந்தவுடன் பொலீசாருக்கும் ஒரு வருடகாலம் விடுமுறை வழங்கி ஆரம்பமான யூஎன்பியின் வெற்றிப்பானம் பருகல், அதுவரை காலமும் இரு கால்களில் நின்ற எமது மக்களை தலைகளில் நிற்க வைத்த பின்னரேயே முடிவுற்றது.

ஆட்சித் தலைவன் ஒருவன் தான் செய்த அதர்ம, அநாகரீக வெறுப்புக்குரிய வேலைகளின் அளவுக்கு ஏற்பவே மகான் ஆகின்றான் என்றால் அண்மைக்கால இலங்கையில் அதற்குத் தகுதியான முதலாவது நபர் ஜே.ஆர் அவர்களே ஆகும். தனது முதலாவது பகைவனின் எலும்புகளை நொருக்கி மூலைக்குள் போடுவதுதான் ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடு என நிரூபித்துக் காட்டியதும் நீங்கள் தான். தேர்தலில் வெற்றி பெறுவதற்கு கொள்கைகளும், அறிவும், மனித தன்மையும் அவசியம் அல்ல, பணக் குவியலும் காடைத் தனமும் மட்டும் போதும் என்னும் தத்துவத்தை முன்வைத்த கௌரவமும் உங்களையே சாரும்.

திருடுபவன் தனது கட்சியைச் சார்ந்தவன் என்றால் திருட்டைப் பிடித்துக் கொடுப்பவனை குற்றவாளியாக்கும் சட்டத்தையும், கொலைகாரர்கள் பெண்களை கற்பழிப்பவர்கள் போன்ற தமது நீச இயந்திரத்தின் உதிரிப்பாகங்களுக்கு சிறை விலங்கு மாட்டப்படும்போது விசேட மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவிக்கும் மரபை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய வரலாற்று நாயகனும் நீங்களேயாகும்.

## ஜே.ஆர். அவர்களே!

இவ்வாறாக உங்களால் நிர்மாணிக்கப்பட்ட புதிய தார்மீக ஜனநாயகத்திற்கு உங்களுக்குப் பின்னர் பிரேமதாச அவர்கள் மெருகூட்டிய விதமும் ஞாபகத்தில் உள்ளது. ஜே.ஆர் திரைக்குப் பின்னால் மறைந்து கொண்டு செய்த அனேக வேலைகளை வெளிப்படையாகவே செய்யும் அளவுக்கு பிரேமதாச துணிச்சல் பெற்றது ஜே.ஆர் அவர்களால் உருவாக்கப்பட்ட நீச அரசியல் இயந்திரத்துக்கு மிகவும் பொருத்தமான மனிதன் பிரேமதாச என்பதாலேயாகும். பிரேமதாசவின் கையினால் தாளிக்கப்பட்ட இந்நாடு விஜேதுங்கவின் கையினால் இன்று சம்பல் ஆகிவருகிறது. ஆனால் ஜே.ஆரும் பிரேமதாசவும் ஒன்றுகூடி வளர்த்த யானை இன்று இடையில் வெகுண்டுள்ளது. வெகுண்ட யானையை விஜேதுங்கவால் கட்டுப்படுத்த முடியாத நிலைமையே உருவாகியுள்ளது.

இடையில் வெகுண்ட யானைக்கு தென்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து வடக்கயிறு போட்டதே தெற்கில் நேர்ந்ததாகும். ஆம். ஜே.ஆர் அவர்களே, பதினேழு வருடங்களுக்குப் பின்னர் முதலாவது தடவையாக மக்கள், பணபலத்தால், காடைத்தனத்தால், கள்ள வாக்குகளால் ஆட்சி செலுத்திய யூ. என்பிக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கக்கூடியவாறு கன்னத்தில் அறைந்துள்ளனர். அரசியல் செப்படி வித்தைக்காரர்களுக்கு எமது தாய்நாட்டை அழிக்க மேலும் இடமளிக்க முடியாது என்னும் குரலை தென்பகுதி மக்கள் எழுப்பியுள்ளனர். சுருக்கமாக கூறுவதாயின் அதர்ம யுகத்தின் முடிவின் ஆரம்பம் இப்பொழுது தொடங்கியுள்ளது. முடிவின் ஆரம்பத்தைக் கண்டது போன்றே அதன் இறுதியைக் காண்பதற்கும் உமக்கும் சந்தர்ப்பம் அளிக்குமாறு நாம் காலையும் மாலையும் இறைவனை பிரார்த்திக்கிறோம். ஏனென்றால் இவ் அதர்ம யுகத்தின் சிருஷ்ட்டி கர்த்தா என்னும் ரீதியில் அதன் முடிவைக் காணும் உரிமை உமக்கு உள்ளது என்பதனாலேயாகும்.

ஜே.ஆர் அவர்களே, ஒரு மனிதனுடைய பதவி வெறி, அகந்தை, அறிவின்மை காரணமாக முழு மக்களுக்கும் தேசத்துக்கும் எவ்வளவு பெரும் அழிவு ஏற்படலாம் என்பதையும், அவ் அழிவை தவிர்ப்பதற்கு எவ்வளவு பெரும் நட்ட ஈடு வழங்க நேரிடும் என்பதையும் சாய்வு நாட்காலியில் இருந்து இளைப்பாறிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் திரும்பத் திரும்ப யோசித்துப் பார்க்கவும்

**விஷ்வமித்திர**


***(நன்றி ராவய ஏப்பிரல் 03,1994 ..***
***தமிழாக்கம் செ.லோகநாதன்)***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூர்வீக இந்தியர்கள்



ரொரன்டோவில் பூர்வீக இந்தியர்களைப் பார்க்க வேண்டுமானால் ரொரண்டோ பஸ்நிலையத்தை அண்டிய பகுதிகளில் இரவில் போனால் அதிகமாகக் காணலாம். குறிப்பாக எட்வேர்ட் வீதியிலிருந்து எல்ம் வீதி வரை வடக்காகச் செல்லும் சிறு வீதியிருக்கின்றதே.. அந்த வீதியில் ஆடியபடி போத்தலும் கையுமாக சில இந்தியர்களை அநேகமாகக் காணலாம். அங்கு அவர்களைக் காணவில்லையென்றால் எட்வேர்ட் வீதி வழியாக நேராக மேற்காகச் செல்லுங்கள். யுனிவேர்சிடி அவன்யூ எதிர்ப்படும்.. ரொரன்டோப் பெருநகரின் அழகான வீதி இந்த யுனிவர்சிடி அவென்யூ தான். இந்த வீதி இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நடுவில் சிலைகளும், நீரூற்றுக்களும், அழகிய மரங்களும் நிறைந்த பகுதி கொலிஜ் வீதியிலிருந்து, குயீன் வீதிவரை நீண்டிருக்கின்றது. வடக்காகத் திரும்பினால் ஒண்டாரியோ மாகாணச் சட்ட சபைக் கட்டடம் அழகாகத் தென்படும். வட்ட வளைவுகளைக் கொண்ட 'ரொமான்ஸ்கியூ' வகைக் கட்டடக்கலை. ஒளிரும் கட்டட அமைப்பு. இரவில் மிக அழகாகத் தெரியும். அழகான இந்த அவென்யூவும், எல்ம் வீதியும் சந்திக்கும் பகுதியில் நிச்சயமாக சில இந்தியர்களை நீங்கள் காணலாம். அநேகமாக ஏழெட்டு இந்தியர்களை, ஆண்கள் பெண்களுட்பட ஒன்றாகக் கூடித் துயின்றபடியிருப்பார்கள், உடனடியாக ஆதிகால மனிதர்களின் நினைவுதான் வரும், மழையோ கடும் பனியோ அநேகமாக இவர்களைக் காணலாம். இவை தவிர வேறு சில இடங்களிலும் இவர்களைக் காணலாம். 'சிட்டிஹோல்' பார்க்கிங் அதாவது 'அண்டர்கிரவுண்ட்' பார்க்கிங் பகுதியிருக்கின்றதே... நிலத்திற்குக் கீழ் நாலு அடுக்குகளைக் கொண்ட மிகப்பெரிய வாகன தரிப்பிட வசதிகளை உள்ளடக்கிய பகுதி. இந்தப் 'பார்க்கிங் லொட்டின் அடியிலுள்ள 'ப்ளோரிற்குச்' சென்றால் எங்காவது ஒதுக்குப் புறமான தூண்களிற்குப் பின்னால் தூங்கிக் கொண்டிருக்கும் பூர்வீக இந்தியர்கள் சிலரைப் பார்க்கலாம். ஒரு முறை நான் பாதுகாவலன் உத்தியோகம் பார்த்த பொழுது இந்த 'பார்க்கிங் லொட்டிலும் கடமை புரிந்துள்ளேன். இவ்விதம் ஆங்காங்கே படுத்திருக்கும் ரொரண்டோவின் பூர்வீக மனிதர்களையோ, ஏனைய வறிய மனிதர்களையோ அகற்ற வேண்டிய கடமை என்னுடையது. சொந்த மண்ணையிழந்து ஆனந்தமாகத் தூங்குபவர்களின் தூக்கத்தைக் கலைத்து, நள்ளிரவில் வெளியில அனுப்ப சொந்த மண்ணை விட்டு நெடுந்தூரம் ஓடிவந்த எனக்கு மனம் வருவதில்லை. பேசாமல் போய்விடுவேன். அந்தப் பார்க்கிங் லொட்டில் யூகோஸ்லாவிய நாட்டைச் சேர்ந்த கிழவனொருவன் கிளீனராக வேலைசெய்து கொண்டிருந்தான். நல்லவன். இரண்டாவது உலகயுத்தத்தில இராணுவத்தில் இருந்தவன். ஆங்கிலம் அதிகமாகத் தெரியாது. அரை குறை ஆங்கிலத்தில் பழைய கதைகளைக் கூறுவான். அவனது பிள்ளைகளெல்லாம் டாக்டர், என்ஜினியரென்று வன் கூவர், மொன்றியலென்று நல்ல நல்ல வேலைகளில் இருந்தார்கள். வீட்டில் அடைந்து கிடக்கப் பிடிக்காமல் இரவில் இந்த வேலை செய்பவன். ஒரு முறை அந்தக் கிழவன் ஒரு விடயத்தை எனக்குக் காட்டியபொழுது பொதுவாகவே இறுகிக் கிடக்கின்ற என் இதயம் கூட ஒரு முறை இளகிப் போனது. நாலாவது ப்ளோரில் ஒரு ஒதுக்குப் புறமாகவிருந்த, பழுதடைந்து பாவிக்கப்படாமலிருந்த 'டிக்கற் பூத்' தொன்றினுள் ஒரு பூர்வீக இந்தியத் தம்பதிகள் குடும்பமே நடத்திக் கொண்டிருந்தார்கள். ஒரு காலத்தில் வட தென் அமெரிக்கக் கண்டத்தில் கொடிகட்டிப் பறந்த இனம். இன்று இவர்களின் நிலை?

இவர்களைக் காணக்கூடிய இன்னுமொரு இடம்.. ஜோர்ஜ் வீதியிலுள்ள ஆண்களிற்கான அரசினால் பராமரிக்கப்படும் விடுதியை அண்டியுள்ள பகுதி.. இது தவிர குயின் வீதியும் சேர்போன் வீதியும் சந்திக்குமிடத்திற்கருகிலுள்ள ஆண்களிற்கான விடுதியை அண்டிய பகுதியிலும், இவர்களை அதிகமாகக் காணலாம். அழுக்கு மண்டிய கந்தலும் ஆட்டமுகமாக வரும் பொழுதே இவர்களை அடையாளங் கண்டு கொள்ளலாம். அருகில் வந்தால் மதுபான நெடி வீசும். உடனே கைகளை நீட்டி விடுவார்கள்.

இருபத்தி ஐந்து சதக் குற்றியொன்றைப் போட்டு விட்டால் சந்தோஷமாகச் சென்று விடுவார்கள். பொதுவாகக் குடியும், கந்தலும், ஆட்டமுமாகச் செல்லும் பூர்வீக இந்தியர்களைத் தான் கண்டிருக்கின்றேன். இவர்களில் அவன் மட்டும் வித்தியாசமானவன். ஜெராட் வீதியில் அமைந்திருக்கும் புகழ்பெற்ற ரொரண்டோ ஆஸ்பத்திரியிருக்கின்றதே. அந்த ஆஸ்பத்திரியின் 'அட்மிட்டிங்' வாசலிற்கு அருகாமையில் அடிக்கடி இவனைக் காணலாம். 'அட்மிட்டிங்' வாசலிற்கு அண்மையில், நடைபாதைக்கு அண்மையிலிருந்த 'மான்ஹோல்' தான் இவனது இருப்பிடம். இவனைத் தொடர்ந்து பல நாட்கள் அவதானிக்கும் சந்தர்ப்பம். எனக்கு என் தொழில் நிமித்தம் கிட்டியது. ஆஸ்பத்திரியில் டாக்டராக வேலை பார்க்கின்றேனென்று எண்ணி விட்டீர்களா? நிச்சயமாக நீங்கள் ஏமாந்து விட்டீர்கள், அப்பொழுது நான் டாக்ஸி டிரைவராக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ரொரண்டோ ஆஸ்பத்திரி நான் ஓடிக்கொண்டிருந்த 'மெட்ரோ' டாக்ஸி

**வ.ந.கிரிதரன்**

19ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜெயந்தீஸன் தாயகத்தை விமர்சிக்கின்ருர்

## இது பிழை.. பிழை... பிழை....

புகலிடப் பத்திரிகைகளில் பிழைகள் குட்டி குட்டியாக போட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்காக புதுப் பத்திரிகை தொடங்குவதிலும் பார்க்க, தற்போதைய தரமான பத்திரிகைகளில் வெளிவரும் பிழைகளை 'நிவர்த்தித்தல்' மேலானது என்ற அர்த்தம் கொண்ட முனியின் கருத்துடன் (தாயகம் 25.3.94) எனக்கு நூறு வீத உடன்பாடு உண்டு. கியூறியஸ், தனது புகழ் பெற்ற வாராந்த நீள் chronique இல் ஓர் அங்கவீன சட்டத்தரணியின் பத்திரிகை பற்றிய வரைவிலக்கணத்தை பின்வருமாறு தருகின்ருர். " a journal to expose the faults of the world and the typographical errors of its staff" (தாயகம் 11.3.94) என்ற கருத்துடன் எனக்கு துண்டாக உடன்பாடில்லை. பத்திரிகைகளில் வேலை செய்பவர்கள் தங்களது வேலைகளை ஒழுங்காகச் செய்தால், எழுத்துப் பிழைகளை உண்மையில் நிவர்த்தி செய்யலாம்.

எழுத்தப்பிழைகள் வாசகர்களை அஸ்பிரின், டிஸ்பிரின், டொலிபிறின் வாங்க பார்மஸிகளுக்கு அனுப்பும். எழுதுபவனுக்கு அபகீர்த்தியை உண்டாக்கும்.

எழுத்துப் பிழைகளுக்கு ஆதரவான அனைத்துப் பத்திரிகை ஆசிரியர்களும் பார்மஸி முதலாளிகளிடம் கிம்பளம் வாங்குபவர்கள் என்பது என் அபிப்பிராயம்..

---

## என்னடி இது மெய்யே?



இது உண்மைதான். முடிவில், வாசகர்களிடமே தாயகம்காரரைப் பிடித்துக்கொடுப்பதென முடிவெடுத்து விட்டேன். இரண்டு வருடங்களுக்கு மேலாக வாரா வாராம், என் அபிமான பத்திரிகை தாயகத்திலே நான் எழுதி வரும் குட்டிக்கதைகளில் இடம்பெறும் எழுத்துப் பிழைகளைத் தொகுத்து அவைகளுக்கு அரும்பத உரையும் வழங்கிஞல் அவை நிச்சயம் பல பாகங்களாக அமையும். "பிசகு" எனும் குட்டிக்கதையின் ஒரு பக்கம் கணனியில் பதிவு செய்யாமலேயே பிரசுரமானது. பின்னர் தொலைந்து போன அந்த ஒருபக்கத்தை அனுப்பிப் பிசகைப் பிசகில்லாமல் வெளியிடுமாறு கேட்டுக்கொண்டேன். தாயகத்திலே அநேகமான எழுத்துப் பிழைகளுடன் பிரசுரமாகும் ஒரேயொரு பகுதி என்ற பெருமை எனது குட்டிக்கதை தொடருக்கு மட்டுமே உண்டு என மார்தட்டிச் சொல்லும் உரிமை எனக்கு உரியது. ஏனைய தொடர் எழுத்தாளர்களுக்கும் இந்தப் பெருமையில் கொஞ்சமாவது இருக்கும் என்பது என் நம்பிக்கை. எப்போதாவது, அருமை பெருமையாக எழுத்துப் பிழைகள் இடம் பெற்ருல் அதை ஓரளவுக்கு விளங்கிக் கொள்ளலாம்.. பொறுத்தும் கொள்ளலாம்... ஆனுல் வாரா வாரம் என அமையும்போது பொறுத்தது போதும் பொங்கி "எழுதடா" எனச் சொல்லிக்கொள்ள வேண்டியதுதான்.

கியூறியஸின் தம்பியும், எனது ஒன்றை விட்ட மச்சானுமான பெண் கூரியன் எனும் Goodடிக் கதைஞன் (இவன் ஓர் கராட்டி வித்துவான் என்பது குறிப்பிடத்தக்கது. என்னை யாரும் வெருட்டிஞல் கூரியன் என இழுப்பேன்..... பிச்சை வேண்டாம் நாயைப்பிடி என அவர்கள் ஓடித் தப்பிவிடுவர்....) பிரான்ஸ் வந்து, எனக்குச் சொல்லாமல் கனடா போஞன்.... தாயகம்காறரை வெருட்டி, எழுத்துப் பிழைகள் இல்லாமல் எனது குட்டிக்கதைகள் கவிதைகள் பிரசுரமாக வழி செய்வான் என்று நினைத்தேன்.. அவஞே, குட்டிகளைச் சுண்டியிழுக்கும் கதைகளையல்லவா எழுதுகின்ருன்..... முனியும் என்னைக் கைவிட்டு விட்டார். புலிக்கொடியோடு வீதிகளில் திரிவதும், குஷ்பு எனப்படும் குண்டம்மாவின் தோள்களில் கைபோட்டுத் திரிவதும் வேறு சிலவேளைகளில் பொக்கெட்டுக்குள் கையை வைப்பதும் (ஏதோ எம்.ஜி.ஆர் பாணியில் கனடியன் டொலர்களைத் தூக்கித் தரப் போகின்ருர் என நினைத்தால் துப்பாக்கியை அல்லவா எடுக்கின்ருர்!) புதிசா வந்த பாட்டுக்கு இளம் பெட்டையள் அர்த்தம் கேட்டா அரும்பத உரை கொடுப்பதிலுமல்லவா காலம் கழிக்கின்ருர்... இவ்வளவு பிஸியில் வாழும் என் பட்சத்திற்குப் பாத்திரமான கம்பியூட்டர் முனியிடம் போய் நான் எப்படியாம் உதவி கேட்பது....?

எழுத்துப் பிழைகள் பற்றி என்ருல் பக்கம் பக்கமாக எழுதிவிடமுடியும். 15.03.1994 தாயகத்திலை "எங்கே என் நிலம்?" எண்ட என்ரை கவிதை வந்ததல்லவா. ... அதிலை வந்த பிழையளைப்பற்றி ஒரு குட்டி ஆராய்ச்சி செய்வம்....

"ஞாயிறு என் நிலம்
நாறுது இன்று" என
அமையவேண்டியது
"ஞாயிறு என் நிலம்
நானுது இன்று" என அமைந்துள்ளது.

நான் + உது = நானுது எண்டுதான் புணர்ச்சி செய்யும் என நான் நினைக்கிறன். அப்பிடிப் பார்த்தா என் நிலம் ஜெயந்தீஸஞகிவிட்டது (நாஞகிவிட்டது) என்றுதான் வரும். உந்த அர்த்தத்திலை நான் கவிதையை எழுதவில்லை... என்னுடையது சூரிய நிலம். ஒரு காலத்திலே அங்கு பிண வாடை வீசவில்லை... இப்ப என்னெண்டா பிண நாற்றம் வீசுகிற ஒண்டாகிவிட்டது என்ற அர்த்தத்திலைதான் நான் "நாறுது இன்று" என்ற வரியை எழுதினஞன்.

"ஆயுதம் தூக்கி
வாழ்வினை அழிக்கு....." என
வரவேண்டியது
"ஆயுதம் தூக்கி
வாழ்வின் அழிக்கும்" என வந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"காத்த என் குதிரைகள்" என வரவேண்டியது
" காத்து என் குதிரைகள்" என வந்துள்ளது.

"மனிதரை மனிதர்
கொல்வதை எவரும்
வீரமென லாமோ?" என
வரவேண்டியது

'மனிதரை மனிதர்
சொல்வதை எவரும்
வீரமென லாமோ?" என வந்துள்ளது.

25.03.94 இல் பிரசுரமான 'கவிஞர் கீர்த்தியும் திருகுதாளங்களும்' என்ற கதையில் கூட பல பிழைகள். ஒரேயொரு பிழையை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன்.

'அவவும் ஒரு இலக்கியவாதியோ?" என அமையவேண்டியது "அதுவும் ஒரு இலக்கிய வியாதியோ?" என்று என வந்துள்ளது. நலலகாலம், "சரி, காதல்தான் செய்ய முடியவில்லை, பேசிவரும் பெண்களில் ஒருத்தியையாவது கட்டி முற்போக்குச் செய்து துலையுங்களேனடா" என்பது, "தட்டி முற்போக்குச் செய்து துலையுங்களேனடா" என வராது விட்டதையிட்டு எனக்கு நல்ல நல்ல சந்தோசம்.

ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்" என்ற ஔவையாரின் கவிதைவரியை நான் ஒருபோதுமே தாயகத்தில் எழுத மாட்டேன். நீங்கள் நினைப்பதுபோல, ஓவன்னாவுக்கு அருகில் வரும் தாவன்னாவின் இடத்தில், அந்த "எழுத்து" தவறுதலாகச் சேர்ந்து விடுமோ என்ற பயத்தால்தான்.

"கிறிஸ்டினாவின் முகம் வட்டமானது" என நான் எழுதுகின்றேன் என்பதை ஒரு எக்ஸ்சாம்பிளுக்கு எடுப்போம். 'வாட்டமானது", 'வாட்ட சாட்டமானது" எனத் தவறு ஏற்படின் கிறிஸ்டினாவின் மென்மனது எப்படித் துடித்துப்போகும் என ஒரு தடவை நினைத்துப் பாருங்களேன்.....

இன்னொரு எக்ஸாம்பிளையும் எடுப்பம். "ஐயாவின் கவிதை இளமைத் துடிப்பானது" வரிக்குள் வரும் "கவிதை"யில் உள்ள "க" காணமல் போனால் எப்படி இருக்கும்? 'திட்டம் போட்டு 'க'வை வெட்டினவங்கள்" எண்டெல்லோ பிலாக்கணம் வைச்சுப்போடுவார்.

என்ன இருந்தாலும் பேப்பர் புத்தகமெண்டு நடத்திறவை... எழுத்துப் பிழைகள் விஷயத்திலை கவனமா இருக்கவேணும். எழுதிறவை விடுகிற பிழையளைத் திருத்திறதும் பத்திரிகை ஆசியர்மாற்றை கடமையள்லை ஒண்டு. என்ரை கதையளிலை சிலதுகளைப் படிக்கேக்கை அதுகளுக்கை நான் விட்ட பிழையளைக்கண்டு வியந்தனான்.... ஒரு கதையிலை ஒரு பாத்திரம் தன்னிட்டைக் "காட்" இருக்கெண்டு முதலிலேயே சொலலாது. கதை முடியிற கட்டத்திலை அது தன்னிட்டை "நாஷனலிட்டி" இருக்கெண்டிது... பாத்திரத்திலை ஒரு பிழையும் இல்லை.. . அதை உருவாக்கின என்னிலைதான் பிழை......

இவ்வளவு காலமும் எனது குட்டிக்கதைகளில் இடம்பெற்ற பிழைகளை வைத்து ஓர் ஆராய்ச்சி செய்ய வேண்டுமெண்டது தான் என்ரை ஆசை. ....

"ஜெயந்தீஸன் ஆராய்ச்சி செய்கின்றாராம் என்னடி இது மெய்யே?"

சில வாரங்கள் பொறுத்திருங்கள்.. எனது ஆராய்ச்சிக் கட்டுரையை வாசிக்க.. ராம...ராம.. ஏன்தான் பேனாவைத் தூக்கினேனோ? எங்கே போய் முட்ட... எங்கே போய் முட்ட. . சிகரெட் இருக்கிறது.. லைட்டர் இல்லை.. ஒரு பிரெஞ்சுக்காரி, அழகிய பிரெஞ்சுக்காரி சிகரெட் புகைத்தபடி வருகின்றாள்.. அவளிடம் போய் மூட்டி விடுமாறு கேட்பேன்.. மூட்டுவதோடு மட்டும் நில்லாமல், ஒருவேளை Mood ஊட்டியும் அவள் விடலாம். விடாமலும் விடலாம் ...ராம...ராம..

## பூர்வீக இந்தியர்கள்..

கம்பெனியின் முக்கியமானதொரு 'போஸ்ட்'. அடிக்கடி அந்தப் 'போஸ்ட்'டை நான் பயன்படுத்திக் கொண்டிருந்தேன். சிலவேளைகளில் ஒரு மணித்தியாலம் ஏன் அதற்கும் கூடக் கூட 'ஓர்டரி'ற்காகக் காத்து நிற்க வேண்டிவரும். அத்தகைய சமயங்களில் அந்த இந்தியனை அவதானிப்பதை ஒரு பொழுது போக்காகவே கொண்டிருந்தேன். அவ்விதம் தொடர்ச்சியாக அவதானித்ததில் அவனைப்பற்றிய சில விடயங்களை அறியக் கூடியதாகவிருந்தது.

ஆஸ்பத்திரி வாசலிலும், எதிரிலிருந்த குழந்தைகளிற்கான 'சிக் கிட்ஸ்' ஆஸ்பத்திரி வாசலிலும், அங்கு வேலை செய்பவர்களால் 'பிரேக்' நேரங்களில் குடித்து விட்டு அரை குறையாகப் போடப்பட்டிருக்கும் சிகரட் அடித்துண்டுகளைப் பொறுக்கி வந்து குடிப்பான். அவனது இருப்பிடமான 'மான் ஹோலிற்கு" அண்மையில் யாராவது குப்பை கூளங்களைப் போட்டுவிட்டால் அவற்றையெல்லாம் பொறுமையாகச் சேகரித்துக் கொண்டுபோய் கார்பேஜ் கூடைகளில் போட்டு விடுவான். இது தவிர ஆஸ்பத்திரி பாத்ரூமில் தான் இவன் பல் விளக்குவது, முகங்கழுவுவது அன்றாடக் கடன்களை முடிப்பது எல்லாம்.

ஒருமுறை வழமைபோல் நள்ளிரவு நேரம் இவனை அவதானித்துக் கொண்டிருந்தேன். 'மான் ஹோலின்' மேல் அமர்ந்திருந்தவன் சுற்றிவரப் பார்த்துவிட்டு, 'மான்ஹோல் மூடியை அகற்றினான் எனக்கு வியப்பாகவிருந்தது. என்ன செய்கிறானென்று புதினம் பார்த்துக் கொண்டிருந்தேன். மான்ஹோலினுள் குதித்துக் காணமல் போனவன், சிறிது நேரத்தில் போர்வையொன்றுடன் வெளியே வந்தான். 'மான்ஹோல் தான் இவனது குளோசட் என்பது புரிந்தது. அழுக்கு மண்டிய கறுத்துப் போன போர்வையால் மூடிக்கொண்டு இவன் குடங்கிப் படுத்தானென்றால் என்னைத்தவிர அஸ்பத்திரியில் வேலை செய்யும், அடிக்கடி 'பிரேக்' நேரங்களில் சிகரட் குடிக்க வெளியில் வரும் ஊழியர்களைத்தவிர வேறுயாரிற்குமே தெரியப் போவதில்லை. 'மான் ஹோலிற்கு' அருகிலிருக்கும் செடி கொடிகளின் நிழல்களில் ஒன்றாக இவன் உருமாறி விடுவான். நீண்ட நாட்களின் பின்னால் அண்மையில் அவ்வழியாகச் சென்ற பொழுது அவனது இருப்பிடத்தை நோக்கினேன். ஏமாற்றம் தான் ஏற்பட்டது. அவன் இருந்ததற்கான அடையாளமே தெரியவில்லை. சுற்றிவரக் குப்பைகள் நிறைந்திருந்தன. ஒருவேளை அவனது வாழ்க்கை முடிந்திருக்கலாம், அல்லது ஆஸ்பத்திரி நிர்வாகம் பலாத்காரமாக அப்புறப்படுத்தியிருக்கலாம். எங்கு போயிருப்பான்......? அப்பொழுது என் மனதில் ஒரேயொரு கேள்வி தான் எழுந்தது. இந்த மண்ணின் சொந்தக்காரனிற்கே உரிய இடம் கிடைக்கவில்லை. ஆயிரக்கணக்கான மைல்களிற்கு அப்பாலிருந்து ஓடிவந்திருக்கின்றேன். எனக்குக் கிடைக்குமா?

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

## ஜே.வி.பி யின் நடவடிக்கைகளுக்கான தாக்கத்தை ஏற்படுத்திய அரசியல் பின்னணி

விசேடமாக 1977ல் யூஎன்பி ஆட்சிக்குவந்ததன் பின்னர் அரசியல் அடக்கு ஒடுக்கு முறைகள் முன் எப்பொழுதும் இடம் பெற்றிராத அளவு கட்டவிழ்த்து விடப்பட்டன. யூஎன்பி 1977 பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் அதுவரை காலமும் இல்லாத அளவு அரசியல் கொடூர நடவடிக்கைகளை எதிர்க்கட்சியினர் மீது கட்டவிழ்த்து விட்டே தமது செயற்பாடுகளை ஆரம்பித்தனர். சரீர சித்திரவதை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு, சில இடங்களில் கொலைகள் கூட ஆகியவாறு இக் கொடூர நிலமை பரவியது. ஓரிரு வாரங்களுக்கு இப்பயங்கர நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்ட யூஎன்பி ஆட்சியாளர் அதன் பின்னர் தொழிலில் ஈடுபட்டிருந்தோரை வேட்டையாடத் தொடங்கினர். அரசியல் பழி வாங்கல் சகல துறைகளிலும் பரவியது. அரசாங்க ஊழியர்கள் அங்கும் இங்குமாக இடம் மாற்றப்பட்டனர். சில ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இம் மாபெரும் களைபிடுங்கல் இயக்கத்தின் பின்னர் தாம் செயல்படுத்த திட்டமிட்டிருந்த, உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் பூரண ஆலோசனையின் கீழ் தயாரிக்கப்பட்டிருந்த பொருளாதார மூலஉபாயங்களை எதிர்ப்புகள் எதுவும் இன்றி முன்னெடுப்பதற்காக, அல்லாவிடில் தோன்றக் கூடிய எதிர்ப்புக்களை முன்கூட்டியே அடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஒவ்வொன்றாக ஆரம்பமாகின.

அரசியல் ஸ்திரத்தன்மையையும் தொழிற்துறை அமைதியையும் ஏற்படுத்தலே இந் நடவடிக்கைகளின் நோக்கமாகும். தாம் செயல்படுத்த திட்டமிட்டிருக்கும்பொருளாதார மூல உபாயங்களை பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசாங்கம் அறிந்திருந்தது.

ஆதலால் எதேச்சாதிகார அடக்குமுறை இயந்திரத்தை கட்டி எழுப்புவதை மையமாகக் கொண்டே அரசாங்கத்தின் அரசியல் மூல உபாயம் தயாரிக்கப்பட்டது.

இதற்காக தனிநபரது கையில் பூரண அதிகாரங்கள் குவிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஏற்படுத்தப்பட்டது. அது ஏற்படுத்தப்பட்ட பின்னர் மாற்றுவது எவ்வளவு கடினமானது என்பதை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிரான குற்றச்சாட்டு மசோதா சந்தர்ப்பத்தின் போது தெளிவாக காண முடிந்தது. பாராளுமன்றம் ஜனாதிபதியின் ஆணைக்குட்படுத்தப்பட்டது. அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் அரசாங்கத்தின் எந்தவொரு செயலையும் தமது மனசாட்சிக்கேற்ப விமர்சனம் செய்ய முடியவில்லை. விமர்சனம் செய்தால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும். முன்னையைப் போன்று பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டே எதிர்கட்சிக்குச் செல்லமுடியாது. நிறைவேற்று அதிகாரங்களை தனிநபர் ஒருவரது கைக்குள் மத்தியப்படுத்தல் ஒரு நடவடிக்கையாகும். மக்களுக்கு சமாதானமாகவும் ஜனநாயக ரீதியாகவும் ஆர்ப்பாட்டம்செய்வதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு, போராடுவதற்கு இருந்த உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்தது மற்றைய நடவடிக்கையாகும்.

1978ம்ஆண்டு ஜனவரி மாதம் தொழிற்சங்கங்கள் தொடர்பான வெள்ளை அறிக்கை ஒன்று கொண்டு வரப்பட்டது. வேலை நிறுத்தங்களை தடை செய்வதே இதன் நோக்கமாகும். ஆனாலும் கடுமையான எதிர்ப்புக் காரணமாக இவ் அறிக்கை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

ஆயினும் வெள்ளை அறிக்கை இன்றியே அதில் பிரேரிக்கப்பட்டிருந்தவைகள் ஒவ்வொன்றாக செயல்படுத்தப்பட்டன.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக தோன்றிய எதிர்ப்புகளை அடக்குவதற்காக ஆட்சி அதிகார பலத்திற்கு மேலதிகமாக ஸ்தாபனமயப்படுத்தப்பட்ட காடையர் கோஷ்டிகளும் ஏவிவிடப்பட்டன. இவ் விடயத்தில் யூஎன்பி யின் தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கமே பிரபல்யமான குண்டர் கோஷ்டியாக இருந்தது. ஜாதிக சேவக சங்கத்தின் காடையர் கோஷ்டிகள் ஆட்சி அதிகாரத்தின் தெய்வீக பலனை தமது கையில் எடுத்துக்கொண்டு இக் காலகட்டத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு இயக்கங்கள் போராட்டங்கள் அனைத்தையும் தாக்கினர். இவர்களுக்கு இருந்த அதிகாரத்தின் முன்னால் பொலீசார் கூட சரணம் இழந்தனர். துறைமுகமும் இ.போ.ச.வும் யூஎன்பி காடையர்களின் மையமாக அமைந்தது.

ஒரு புறம் காடையர்களை ஏவிவிட்டு வன்முறை ரீதியாக எதிர்ப்புகளுக்கு முகங் கொடுத்த ஆட்சியாளர் மறுபுறம் பல்வேறு விதமான சட்டங்கள் மூலமாக வேலை நிறுத்தம் செய்தல், ஊர்வலம் செல்லுதல், ஆர்ப்பாட்டம் செய்தல் ஆகியவற்றுக்கான உரிமைகளைப் பறித்தனர். மக்களது எந்தவொரு கோரிக்கைக்கும் செவிசாய்க்க அரசாங்கம் தயாராக இருக்கவில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அனைவரும் எவ்வித நிபந்தனையும் இன்றி ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது. அடையாள வேலை நிறுத்தத்தை கூட அது பொறுத்துக் கொள்ளவில்லை. உதாரணத்திற்கு கூறுவதாயின் வாழ்க்கைச் செலவு உயர்வு, தொழிற்சங்கங்கள் மீதான அடக்கு முறை, ரூபா 150 சம்பள உயர்வு கோரி 1978 செப்டம்பர் 28ம்

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னாண்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்; செ. லோகநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திகதி நடைபெறவிருந்த உத்தேச அடையாள வேலைநிறுத்தத்தில் பங்கு கொள்பவர்கள் அனைவரையும் வேலையில் இருந்து நீக்குவதாக அரசாங்கம் மிரட்டியது. இம் மிரட்டல்கள் காரணமாக வேலை நிறுத்தம் நடைபெறவில்லை.

இக்காலகட்டத்தில் வடக்கில் வளர்ந்து வந்த நிலமைகளைப் பயன்படுத்திய அரசாங்கம் 1979 ல் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி வடக்கில் பெரும் அடக்கு முறை நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தெற்கிலும் அடக்கு முறைகளை அதிகரித்தது.

1979 டிசம்பர் அளவில் வடக்கிலிருந்து பயங்கரவாதத்தை முற்றுகத் துடைத்தெறிவதற்கான கட்டளையின்படி பிரிகேடியர் வீரதுங்க வடக்கை நோக்கிச் சென்றுர். அதன் பின்னர் அதுவரைகாலமும் இடம்பெற்றிராத அளவு அடக்குமுறைகளே அங்கு செயல்படுத்தப்பட்டன. இதன் விளைவாக வடக்கில் வன்முறைச் செயல்கள் குறையவில்லை, ஓரளவுக்கு பின்வாங்கி அதன் பின்னர் பாய்ச்சலில் வளர்ந்ததே இடம் பெற்றதாகும். கடந்த காலங்களில் தெற்கில் நிகழ்ந்த அரசாங்கத்தின் பயங்கர நடவடிக்கைகள் அனைத்தும் முதலாவதாக வடக்கிலேயே இடம் பெற்றன. ஆயினும் அங்கு இடம்பெற்ற அப்பயங்கர நடவடிக்கைகளுக்கு எதிராக தெற்கில் எதிர்ப்பைத் தெரிவித்தது மிகவும் சிறிய தொகையினர் மட்டுமே என்பதையும் கூறவேண்டியுள்ளது. வடக்கில் ஆரம்பிக்கப்படுபவை அடுத்த சந்தர்ப்பத்தில் தெற்கில் செயல்படுத்தப்படும் என்பதை அனேகர் மறந்தனர். அரசாங்கம் புலிச்சட்டத்தைக் கொண்டுவரும் போதும் பயங்கரவாத தடைச் சட்டத்தைக் கொண்டு வந்த போதும் அது வடக்குக்கு மட்டுமே என எண்ணி அனேகர் மௌனம் சாதித்தது இதனுலேயேயாகும். ஆனுல் அதிக காலம் செல்லுமுன்னரேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு ஏற்ப தெற்கிலும் அடக்கு முறை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதுதான் தாம் தவறு இழைத்து விட்டோம் என்பதை அனேகர் உணர்ந்தனர். ஆனுல் அதற்குப் பின்னரும் அச்சட்டத்தை வடக்குடன் மட்டுப்படுத்தாமல் தெற்கிலும் செயல்படுத்துவதே அனேகருக்கு பிரச்சனையாக விருந்தது.

தொழிலாளர், விவசாயிகள், மாணவர் ஆசிரியர் எழுதுவினைஞர் தாதிமார், வைத்தியர் ஆகிய சகல துறைகளிலும் இடம் பெற்ற எதிர்ப்பார்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் அரசாங்கம் அடக்கியது. வேலை நிறுத்தக்காரர்களை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தாக்கியதைப் போன்றே பல்கலைக் கழகங்களுக்குள் காடையர்களை ஏவிவிட்டு மாணவர் மீதும் பயங்கரத்தை கட்டவிழ்த்து விட்டனர். வித்தியலங்கார பல்கலைக் கழகத்துள் பாய்ந்து இவ்வாறுன காடைத்தாக்குதல் ஒன்றில் ஈடுபடும் போதுதான் 1978ல் களனி பிரதேசத்தை சார்ந்த கிறிஸ்தோபர் என்னும் காடையன் மாணவர்களால் கொல்லப்பட்டான், இக்காடையனின் மரணச் சடங்கில் ஜனுதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன கலந்து கொண்டதிலிருந்து காடையர்களுக்கு அரசாங்கம் எவ்வளவு அனுசரணை வழங்கியது என்பதை விளங்கிக் கொள்ளமுடியும். சகல பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களை காடையர்கள் தாக்கினர். மகரகமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை போன்றவற்றிலும் அவ்வாறுன தாக்குதல்கள் இடம் பெற்றன. புத்தி ஜீவிகள் தாக்கப்பட்டனர். பேராசிரியர் சரச்சந்திர எதிரிவீரவை சாக்கடையில் புரட்டிப் புரட்டித் தாக்கினர். பௌத்த கோவில்களைச் சுற்றி முட்கம்பி அடிக்கப்பட்டது.

அரசாங்கத்தால் அதிகார பலம் பாவிக்கப்பட்டு அடக்கப்பட்ட போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் சில பின்வருமாறு: 1978 ன் தொழிற்சங்கங்களுக்கான வெள்ளை அறிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டம், வங்கி ஊழியர் வேலை நிறுத்தம், அரசியல் யாப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம், உத்தேச அடையாள வேலை நிறுத்தம் 1979 ல் வைத்தியர்கள் வேலை நிறுத்தம், கட்டுபெத்தை மாணவர் போராட்டம் (இப்போராட்டம் அடக்குமுறையை வளர்க்கிறது என்று கூறி ஜே.வி. பியினர் மறைமுகமாக இப் போராட்டத்தை சீர் குலைத்தனர்) 1980ல் விடுமுறை தினங்கள் குறைப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம். (இவ் ஆர்ப்பாட்டங்களின் போது வங்கி ஊழியர் சங்கத்தின் நிமல் பெரேராவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொழிற்சங்க தலைவர் அலவி மௌலானவும், சரத்நாவான போன்ற தொழிற்சங்கத் தலைவர்களும் காடையர்களின் கத்திக் குத்துக்கு ஆளாகினர்) தாதிமார் வேலை நிறுத்தம், ஜூன் எதிர்ப்பு தினம், ஜூலை பொது வேலைநிறுத்தம், ஆகஸ்ட் சத்தியாக்கிரகம் 1982 கல்வி வெள்ளை அறிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டம், கல்னேவ விவசாயிகள் போராட்டம், 1983 ல் தனியார் மருத்துவ கல்லூரி உட்பட்ட பல பிரச்சனைகளுக்கு எதிரான மாணவர் ஆர்ப்பாட்டம், 1984ல் பேராதெனிய பல்லைக்கழகத்தில் பொலீஸ் நிலையம் அமைப்பதற்கு எதிராக தோன்றிய மாணவர் போராட்டம் (பேராதனையில் பொலிசார் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் பத்மசிறி அபேசேகர என்னும் மாணவன் கொல்லப் பட்டதோடு இச் சம்பவத்தைக் கண்டித்து கொழும்பு பல்கலைக் கழகத்தில் வெடித்துக் கிளம்பிய மாணவர் ஆர்ப்பாட்டங்களின்போது ரோகன இரத்ஞயக என்னும் மாணவன் பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக கொல்லப் பட்டார்.) இப் போராட்டங்கள் மத்தியில் 1980 ஜூன் 05 எதிர்ப்பு இயக்கமும் 1980 ஜூலை வேலை நிறுத்தமும் பிரபல்யமானவையாகும், ஜூன் 5ம் திகதி எதிர்ப்பு தினத்தன்று அகலவத்தை தொகுதியின் அன்றைய யூஎன்பி பாராளுமன்ற உறுப்பினராக விருந்தமெரில் காரியவாசம் காடையர் கோஷ்டி ஒன்றுடன் வந்து அரச வழங்கல் திணைக்களத்தின் முன்னுல் மறியல் போராட்டம் செய்தவர்களைத் தாக்கியதோடு சோமபால என்ற தொழிலாளி கொல்லப்பட்டார். இது தொடர்பாக பொலீஸ் சாட்சியங்கள் இருந்தும் இதற்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, இவ் எதிர்ப்பு தினத்திற்கு எதிராகவே ஜேவிபி செயல்பட்டது என்பதை விசேடமாக குறிப்பிட வேண்டியுள்ளது. மிகவும் மோசமாக அடக்கப்பட்ட வேலை நிறுத்தம் 1980 ஜூலை வேலை நிறுத்தமாகும். யுத்தம் ஒன்றுக்கு முகங் கொடுப்பதைப் போன்றே அரசாங்கம் இவ்வேலை நிறுத்தத்திற்கு முகங்கொடுத்தது. வேலை நிறுத்தம் சட்டவிரோதமானது எனப் பிரகடனம் செய்த அரசாங்கம்

23 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கீதவாணி..

ஒன்றிக்காத தன்மை காணப்படுகிறது. மேலதிக சிரத்தையும் ஈடுபாடும் கொள்வதுடன் சுய ஒத்திகைகள் மூலம் அத்திறமையை வளர்த்துக் கொள்ளலாம் அல்லது அத்திறமை உள்ள ஒருவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஏன் இந்தத் தயக்கம்?

குரல் வளத்துடன் புதுமை, விஷயச் செறிவு, வெளிக்கொணரும் விதம், சமூகத்துக்கு ஏதாவது நன்மை, கலாச்சாரத்துக்கு ஒரு அரண், அலுக்காத தன்மை... இவைகள் அனைத்தும் சேர்ந்தால் அதுதான் நிகழ்ச்சித் தயாரிப்பின் உன்னதம், அதேதான் நமக்கும் தேவை. அதை எவ்வளவு தூரம் கீதவாணி நிறைவேற்றி வைக்கும் என்பதற்கு காலம் பதில் சொல்லும்?

தொலைபேசி மூலம் நேயர்களின் நேரடிக் கருத்துகளைக் கேட்டு நேரடியாக ஒலிபரப்புதல் ஒரு நல்ல அம்சம். அண்மையில் ஒரு நிகழ்ச்சியில் சின்னஞ்சிறுசுகளின் பேச்சுக்களை தொலைபேசி அழைப்பில் கேட்டேன். அவர்களின் குரல்களும் நிகழ்ச்சியின் அங்கமாக ஒலிக்கும்போது அவர்களுக்கு உற்சாகம் ஒருபுறம் வருகிறது. தமது மொழி கலாச்சாரம் என்பதை நினைப்பதற்கு சந்தர்ப்பமாக அமைகிறது. அந்த நிகழ்ச்சியை கேட்ட ஒரு சிறுமி "அப்பா நானும் அந்த மாமாவுடன் கதைக்க வேண்டும். தமிழை அழகாக கதைக்க நானும் படிக்க வேண்டும்" என தந்தையிடம் ஆங்கிலத்தில் சொல்லி கவலைப்பட்டதாம். சிறுவர்களும் பங்கு கொள்ளக் கூடிய நிகழ்சிகளையும் சேர்ப்பது பிற்காலத்தில் பல நன்மைகளை விளைவிக்கும். அவ்வாறான நிகழ்ச்சிகளை தரும்போது அந்நிகழ்ச்சி பெரியவர்களுக்கு "போரிங்" ஆக அமையாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தமது குழந்தைகளையும் இவ்வாறான நிகழ்ச்சிகளைக் கேட்க வைப்பது மட்டுமல்லாமல் பங்குபற்றவும் வைப்பதற்கு பெற்றோர் முயலவேண்டும். "டான்ஸ் கிளாஸ்" சேர்த்து விடுவதாலும் தமிழ் வகுப்பில் வாரத்தில் சில நிமிடங்கள் உட்கார அனுமதிப்பதாலும் மட்டும் கனடாவில் வளர்ந்து வரும் இளைய தலைமுறைக்கு தமிழ் ஆர்வத்தை வளர்த்துவிட முடியாது. நம் குழந்தைகள் PARTICIPATION க்கு தயார் ஆகினாலும் தமிழ் உணர்வுடன் அந்தப் பங்களிப்புகளை ஏற்றுக் கொள்ள வர்த்தக வானொலிகள் தயாரா என்பது சந்தேகம்?

"தமிழுக்கு அமுது என்றுபெயர், உங்கள் குரலுக்கு மெழுகு என்று பெயர்" என நேயர் ஒருவர் கூறியதைக் கேட்டேன். உண்மை. ஆனால் உருக வைப்பதிலும் உணர வைப்பது இன்றய தேவை என்பது பூசி மெழுகப்பட முடியாத ஒன்று. புகழ் உரைகளில் புல்லரிப்பதில் நின்றுவிடாமல் வானொலி அறிவிப்பில் நீங்கள் தாண்ட வேண்டிய பாதை இன்னும் உள்ளது என்பதை இராஜ்குமார் அவர்கள் அறிந்திருப்பது அவசியம். அவை பற்றிய விபரம் பின்னர் அவருக்கு காலக்கிரமத்தில் கடித மூலம் அனுப்பிவைக்கப்படும்.

ஏராளமான நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவிட்டு போதிய நேரம் இன்மையால் அரைகுறையாக மறுவாரம் தொடர்வது சிலவேளை எரிச்சலைவரவழைக்கிறது. குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சி முடியுமா என திட்டமிடல் அவசியம். உதாரணமாக ஒரு நிகழ்ச்சியில் வில்லுப்பாட்டுத் தொடங்கி இடையில் திடீரென நிறுத்தப்பட்டது. இப்படி நிகழ்ச்சியை ஒலிபரப்பி என்ன பலன்? நேரத்தை நிரப்புவதற்கல்ல, நிகழ்ச்சிகள். வியாபார சமூகமும் விளம்பரதாரரும் ஒத்துழைத்து இரசிகர்களின் ஏகமனதான கோரிக்கை இருப்பின் நேர நீடிப்புக்கு அல்லது நாள் இணைப்புக்கு ஒலிபரப்பாளர்கள் மறுப்பார்களா என்ன?

மீண்டும் அடுத்த கீதவாணி நிகழ்ச்சி எப்போ வரும் என்ற ஆவல் எனக்கு இருக்கிறது.. பலதேவையான நல்ல நிகழ்ச்சிகள் உதயமாகும் என்ற நம்பிக்கையில். உங்களுக்கு?

# சுந்தரரை சுத்திய சம்பந்தர்

## பென் கூரியனின் குட்டிக்கதை

சுந்தரமூர்த்திக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. தன்னிடம் கடன் வாங்கிய ஞானசம்பந்தன் இன்னமும் காசைக் கொண்டு வந்து தரும் நோக்கமில்லை. போன் அடித்தால் ஆள் எடுக்கிற பிளானும் இல்லை. மனிசி போனை எடுத்தால் அவர் வெளியே போட்டார் என்றபடி. வந்தால் கோல் பண்ணச் சொல்லுங்கோ என்று மெசேஜ் லீவ் பண்ணினலும் ஆள் எடுக்கும் நோக்கம் இல்லை.

அவசரமாய் கைமாத்தாய் ஒரு பத்தாயிரம் தரச் சொல்லி வாங்கிப் போனவன் தான்.. ஆளைக் காணேம். சுந்தரமூர்த்தியும் பாவம், சம்பந்தன் பிள்ளை குட்டிக்காரன் என்று கொடுத்தால்... சுத்தித் திரியிறான். சுந்தரமூர்த்தி களைச்சுப்போயிட்டான். கடன்பட்டார் நெஞ்சம் போல சம்பந்தன் கலங்காமல் திரிய, கடன் கொடுத்த சுந்தரமூர்த்தி கலங்கிக் கொண்டான்.

சம்பந்தனை எப்படியெண்டாலும் பிடிக்கிறது எண்டு 'உவனை நித்திரைப் பாயிலை தான் பிடிக்க வேணும்' எண்டு பிளான் போட்டான். மறுநாள் அதிகாலை எழுந்து போய் பலமாகத் தட்ட நித்திரை வெறியில் கதவைத் திறந்த சம்பந்தன் அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு 'மச்சான், உனக்கு ரெண்டு தரம் போன் எடுத்தனன். பிசியாய் இருந்திச்சு. உனக்கு எடுக்க வேணும் எண்டு இருந்தனன். அதுக்கிடையில வந்திட்டாய்' என்று கதையை மாற்றினன். 'கதையை விடு, காசை வை, இல்லாட்டி நடக்கிறதே வேற' என்று சுந்தரமூர்த்தி கத்த, சம்பந்தனும் பிளேட்டை மாத்தினன்.

'நீ எப்ப எனக்கு காசு தந்தனி? என்ன எனக்கு காசு தந்ததுக்கு சாட்சி வைச்சிருக்கிறியோ? காசு தர மாட்டன். பண்ணிறதைப் பண்ணிப் பார்' என்றான் சம்பந்தன். சம்பந்தனின் பாரியார் காரைக்கால் அம்மையும் 'இவர் ஒருதரிட்டயும் காசு வாங்கிறேலை, ஏன் எங்கட வீட்ட வந்து மானத்தை வாங்கிறியள்' என்று ஆம்படையானுக்கு வக்காலத்து வாங்கினள்.

சுந்தரமூர்த்தி பொறுமையிழந்தான். 'அடே, காசைக்காசெண்டு பாராமல் பத்தாயிரம் ருபாயைத் தூக்கித் தந்தனன். ஒரு நூறு ருபாய் குடுத்து துவக்கு வாங்கிறது பெரிய வேலையோ'

★ ★ ★


மறுநாள் சம்பந்தன் சுந்தரமூர்த்தி வீட்டுக்கு நேரடியாகவே வந்து காசைக் கொடுத்துச் சென்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அட.. நீயுமா? ஆமா.. நானும் தான்!



நம்மில் பலர் ஆமாப் போடுவதில் விண்ணர்கள். மற்றவர்கள் என்ன சொன்னாலும் தானும் அதுதான் என்பதில் சிலருக்கு ஒரு கிக். இதைப் போல மற்றவர்கள் என்ன சொன்னாலும் அதை மறுப்பது இன்னும் சில பேருக்கு கிக்.

ஒருவர் எதையாவது சொன்னால், தானும் அவ்வாறே என்பதற்கு I also என்றோ, Me too என்றோ தொடங்குவர்.

உதாரணத்திற்கு I read Thayagam என்று ஒருவர் சொன்னால் மற்றவரும் I also read Thayagam என்றோ, Me too என்றோ சொல்வார். ஒரே நபரே இதைச் சொல்வாராயின்

He reads Thayagam and I read Thayagam too என்பார்.

ஒருவர் தாயகமும் மற்றவர் வேறு பத்திரிகையும் படிப்பார்களாயின்

He reads Thayagam but I read Virakesari என்றோ,

He reads Thayagam but I don't என்றோ

He doesn't read Thayagam but I do என்றோ சொல்லிக் கொள்வர். ஒருவரும் மற்றவரும் முரணான காரியங்களைச் செய்யும் போது 'ஆனால்' என்று சொல்லி மறுப்பர்.

★ ★ ★

ஆனால் இருவருமே தாயகம் படிப்பவர்களாகவோ, படிக்காதவர்களாகவோ இருப்பின் இதைச் சொல்வதற்கு இலகுவான முறை ஒன்றுண்டு.

இருவரும் படிப்பார்களாயின்

He reads Thayagam and so do I.

முதல் சொன்ன வசனத்தின் பின்னால் and so என்று விட்டு am, is, are, do, did, can போன்ற இன்னோரன்ன சொற்களைச் சேர்த்து அதன் பின்னர் எழுவாயைச் சேர்க்க வேண்டியதுதான்.

He can go and so can you

அவனும் போகலாம், அத்தோடு நீயும் தான்.

★ ★ ★

ஆனால் இரண்டு பேருமே தாயகம் படிக்காதவர்களாயின் so என்பதற்கு பதிலாக neither பயன்படுத்த வேண்டியது தான்.

He doesn't read Thayagam and neither do I. மொத்தத்தில் இரண்டு பேருமே மற்ற பத்திரிகைகளில் சோதிடம் மட்டும் படிக்கின்ற ரகம்.

You don't understand and neither does he. (Him அல்ல)

(so, neither இரண்டினது பாவனையின் போதும் எழுவாய் இறுதியாக வருவதை அவதானிக்கவும்)

**-மாஸ்டர் ரவி-**

## ஜே.வி.பியின் வரலாறு...

தொழிற் சங்க அலுவலகங்களுக்கு சீல் வைத்ததோடு வங்கி கணக்குகளையும் தடைசெய்தது. செய்திப் பத்திரிகைகள் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டன. இராணுவ தொண்டர் படை சேவைக்கு அழைக்கப்பட்டது. தெருக்களில் பொலிசாரும் இராணுவத்தினரும் பவனி வந்தனர். கூட்டம், ஊர்வலம் மறியல் போராட்டம் வேலை நிறுத்தம் பற்றி செய்யப்படும் பிரச்சாரங்கள் அனைத்தும் சட்ட விரோதமாக்கப்பட்டன. வேலை நிறுத்தம் செய்த அனைவரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். ஜேவிபி இவ் வேலை நிறுத்தத்திற்கு எதிராக செயல்பட்டது என்பதையும் விசேடமாக கூறவேண்டியுள்ளது. வேலை நிறுத்தத்திற்கு எதிராக பொதுக்கூட்டம் நடாத்துவதற்கு அரசாங்கம் ஜேவிபிக்கு அனுமதி வழங்கியது. வேலை நிறுத்தம் மோசமாக தோல்வி அடைந்தது. வேலை நிறுத்தம் தோல்வியில் முடிந்த பின்னர் பழிவாங்கல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின. தொடரும்

## கொலஸ்திரோல்..

### இருதய இரத்தக்குழாய் சம்பந்தமான நோயைத் தடுக்க என்ன செய்யலாம்?

நாளாந்த உணவில் குறைந்த அளவு saturated உணவு வகைகளையே சேர்த்துக் கொள்ள வேண்டும். பிஸ்கற், உருளைக்கிழங்கு, சிப்ஸ், சொக்கிளேற் போன்றவை அதிகம் saturated கொழுப்பைக் (இரண்டு காபன் அணுக்களுக் கிடையில் ஒற்றைப் பிணைப்புகள் கொண்டவை. ஒன்றுக்கு மேற்பட்ட பிணைப்புகள் இருப்பவை unsaturated) கொண்டவையாகும். இவற்றை அதிகம் உட்கொள்ளக் கூடாது. இறைச்சிக்குப் பதிலாக மீன் சாப்பிடுவது நல்லது. மீனில் உள்ள குறைந்த saturated கொழுப்பு மிகவும் நன்மை தருவதாகும்.

நாள்தோறும் நல்ல மரக்கறி, பழங்கள் சாப்பிட்டு வருவது மிகவும் நல்லது. தவிடு நீக்காத அரிசி, மண் நிறப்பாண் (தவிட்டுடன்) ஆகியன சிறப்பானதாகும்.

புகைப்பிடிப்பதை முற்றாக நிறுத்த வேண்டும். புகைத்தல் இரத்தக்குழாய்களுக்கு கூடாது. இதனால் ஏற்படும் தீங்குக்கெதிராக எந்த மருந்தோ பத்திய உணவுகளோ ஒரு நாளும் உதவமாட்டாது.

எந்த அசைவு இயக்கமுமின்றி வீட்டிற்குள் சும்மா இருப்பதை விட்டு உடலை இயக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். அதற்காக நீங்கள் உடனடியாக மரதன் ஓடத் தேவையில்லை ஆனால் நாள்தோறும் நடக்கலாம், சைக்கிள் ஓடலாம், வேறு விளையாட்டுக்களில் ஈடுபடலாம். இது உங்கள் இரத்தக்குழாய்களைச் சீரான நிலையில் வைத்திருப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. உடலின் நிறை கூடுவதும் இருதய இரத்தக்குழாய்களுக்குக் கூடாது.

நமது நாளாந்த உணவுப்பழக்கங்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதன் மூலமும் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கும் புகைத்தல் போன்றவற்றைக் கைவிடுவதன் மூலமும் தேகாப்பியாசத்தின் மூலமும் நாம் இந்நோய்க்கு எதிரான தற்காப்பு முறைகளைக் கைக்கொள்ளமுடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2 (23)

கடந்த இருவாரத் தொடர்களிலும் அமெரிக்காவின் பிரசன்னம் எத்தகைய நோக்குகளுடன் எமது பிராந்தியத்தில் தனது கால்களை ஆழமாக ஊன்ற வைத்தது என்பதையும், தடுப்பு நடவடிக்கைகளாக இந்தியா எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கச் சித்தமானது என்பது பற்றியும் விளக்கினேன். இந்த இரு பெரும் அரசுகளின் • சதுரங்கத்தில் நகர்த்தப்பட்ட காய்கள் தான் சிங்கள தமிழர் பிரச்சனையானது.

சிங்கள-தமிழ் பிரச்சனை ஒரு உண்மையான, நீண்ட காலப் பிரச்சனையாக இருந்த போதும் இப்பிரச்சனை தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய, தீர்க்க வேண்டிய தேவைகள் சம்பந்தப்பட்ட இனங்களிடமிருந்து கைமாறி சர்வதேச வல்லரசுகளின் கைக்குச் சென்றுவிட்டன.

அமெரிக்க, இஸ்ரேல் சீன, பாகிஸ்தானிய சம்பந்தங்களை முறியடிக்க இந்தியா ஈழத்தமிழ் இளைஞர்களைப் பயிற்றுவிக்கத் தொடங்கியது "ரோ" வின் சிறப்புப் பிரிவான "மூன்றாவது முகவர்" (Third agency) செயலாற்றத் தொடங்கியது. இதன் அறிக்கையின்படி "இலங்கையில் தனி இராஜ்யத்துக்காகப் போராடும் இளைஞர் இயக்கங்களைப் பலப்படுத்த வேண்டும். இது இலங்கைப் பிரச்சனையை தொடரச் செய்வதுடன் தமிழ் நாட்டைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்கவும் உதவும்." மேலும் இன்னொரு அறிக்கையில் "ரோ" பின்வருமாறு மதிப்பீடு செய்துள்ளது. "இளைஞர்களின் ஆயுத ரீதியான வளர்ச்சி இலங்கை அரசை இளைஞர்களுக்கெதிராக வடக்குக் கிழக்கில் ஒரு யுத்தத்தை நடத்த தூண்டும். அவ்வாறான யுத்தத்தில் அதிக பொதுமக்கள் கொல்லப்படுவார்கள். அப்போது இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீட்டுக்கு நியாயம் கற்பிப்பது சுலபம். இளைஞர்களின் கடுமையான தாக்குதல்கள், பகிரங்க அரசியற்தீர்வு ஆகிய இருவிடயங்களை வைத்துக் கொழும்பைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரலாம்."

சூர்யா, (இந்தியா செப்ரம்பர் 1994) ல் ஆய்வாளர் ராஜீவ் கே.பாஜாஜ் பின்வருமாறு தெரிவிக்கிறார். "கர்ண கொடூரமான சிங்கள இராணுவத்தின் தமிழர்களை ஆயிரக்கணக்கில் கொல்லும் செயலானது நீதி மறுக்கப்பட்ட அப்பாவி யாழ்ப்பாண மக்களின் ஆபத்பாந்தவனுக பேய்களை விரட்ட இந்தியா காலடி எடுத்து வைக்க வைத்துள்ளது. இதற்கான வரைபடம் பிகானர் இல்லத்தில் (Bikaner house) தீட்டப்பட்டுள்ளது. எப்படியிருந்தாலும் பங்களாதேஷின் கதாநாயகி (இந்திரா) தற்போது "தமிழ் ஈழத் தேவி" (DEVI OF TAMIL EELAM) என்கின்ற புதிய பாத்திரத்தையும் விரும்பியுள்ளார். "நன்ருக செய்வார்" என்கிருர். இங்கு BIKNER HOUSE என்பது "ரோ"வின் மூன்ருவது முகவர் தலைமையக முகவரியாகும். இது புது டெல்லி சாஜவஹன் ரோட்டில் அமைந்திருக்கும் அமைச்சரவைச் செயலகமான போதும் மறைமுகமாக இது ஒரு "பாதுகாப்புச் செயலகமே.

"மூன்ருவது முகவர்" பிரிவு, இலங்கை, தமிழ்நாடு, ஆந்திரா கர்நாடகம், பஞ்சாப் காஷ்மீர் ஆகிய பிரச்சனைக்குரிய இடங்களின் விவகாரங்களைக் கையாண்டு கொண்டிருந்தது. இலங்கை விடயங்களுக்குப் பொறுக்கி எடுக்கப்பட்ட நபர்களே பொறுப்பாயிருந்தனர். ரோமேஸ் சண்முகம், பீ, சருப் ரபீந்திர ஓரி, யு. என்.பீ.ராவ் என்போர் முக்கியமானவர்கள.

ஆர்.என்.காவ், கே.சங்கரன் நாயர், கிரிஷ்சந்திர சக்ஷேனுவுக்கு கீழ் ஏ.அர்ஜுனன் (இந்திய பொலிஸ் உத்தியோகத்தர் முகவராக செயற்பட்டவர்.) நக்ரானி ரோவின் விசேட பாதுகாப்புப்பிரிவு ஆகிய இருவர் கீழ் மட்டத்தில் இயங்கினர். நக்ரானி தான் இந்தியாவின் கறுப்புப்பூனைகள் என்ற கமாண்டோ பிரிவை ஸ்தாபித்துப் பயிற்றுவித்தவர் ஆவார்.

அர்ஜுன், நக்ரானி ஆகிய இருவர் தான் முதலாவது தமிழ் இளைஞர் அணிக்கும் இராணுவப் பயிற்சியளித்தனர். ராஜீவ் கே.பஜாஜ் அவர்களின் கூற்றுப்படி (சூர்யா" இந்தியா செப் 1984) "முதலாவது விஷேடபயிற்சி அணிக்கான முகாம்கள் 1983 நவம்பரில் நிறுவப்பட்டுள்ளன. சக்ருரா (CHAKRATA) தெஹ்ராதுன் வடக்கு (NORTH OF DEHRA DUN) ஆகிய இடங்களில் 2000 க்கு அதிகமான தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் ராஜூ பஸ் சர்வீஸ் மூலம் (ஆர்.கே புரம் புதுடெல்லி) 500 பேர்கள் கொண்ட பிரிவாக சென்னைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செப்ரம்பர் 1984ல் பஜாஜ் குறிப்பிடுகிருர். 1984 நவம்பர் 21ம் திகதி சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ரெலோ போராளிகளால் தாக்கப்பட்டு தரைமட்டமானது நன்கு பயிற்சி பெற்ற போராளிகளின் வேலையே அது என்பதை உறுதி செய்தது.

1984ல் இந்திரா காந்தி ரெலோ தலைவர் ஸ்ரீசபாரத்தினம், புளொட் தலைவர் உமா மகேஸ்வரன், ஈரோஸ் இரத்தினசபாபதி ஆகியோரை வெவ்வேறு கட்டங்களில் சந்தித்தாரெனவும் இதற்கான ஏற்பாடுகளை ஜீ.பார்த்தசாரதி ஒழுங்கு செய்தாரெனவும் தெரிய வருகிறது. மேலும் ஈ.பீ.ஆர்.எல்.எப் தலைவர் பத்மநாபவுடன் கடிதமூலம் தொடர்பு கொண்டாரெனவும் மேற்கூறிய தலைவர்களுக்கு தனது அனுதாபத்தை தெரிவித்து அவர்களுடைய சுதந்திரப் போருக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்ததாகவும் அறியக் கிடக்கிறது.

1984 ஒக்டோபரில் இந்திரா காந்தி அவரது சீக்கிய மெய்காப்பாளரால் படுகொலை செய்யப்பட்டதும்எல்லாமே தலைகீழாக மாறியது. இது இந்திய அரசியலில் மட்டுமல்லாது இலங்கை விடயத்திலும், ரோ விடயத்திலும் ஈழத் தமிழர் போராட்டத்திலும் கூடத் திருப்பங்களைக் கொண்டு வந்தது. இந்திரா காந்தி இறந்து மறு நாளே காவ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்தார். பார்த்தசாரதியும் ஓரம் கட்டப்பட்டார். "ரோ"வின் தலைவராயிருந்த சக்ஷேனு ராஜீவின் தேசிய

**சின்னத்தம்பி வேலாயுதம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதுகாப்பு ஆலோசகராஞர்.

"மூன்ருவது முகவர்" என்ற அதி இரகசியப் பிரிவு மீண்டும் "ரோ" விஞல் பொறுப்பேற்கப்பட்டது. இலங்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் என்பது "ரோ"வுக்கு ஒரு "கடப்பாடு" என்ற நிலைக்கு மாறியது. முன்னைய திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் கூட ராஜீவ் காந்தியின் சிந்தனைக்கு பொருந்தக் கூடியதாக மாற்றியமைக்கப்பட்டன.

ஆஞலும் ராஜீவ் காந்தி "ரோ"வின், இலங்கை நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கிஞர். அதாவது இளைஞர்களை திரட்டுதல், பயிற்சியளித்தல், ஆயுத வினியோகம், நிதி வழங்கலுடன் ஒரு தனிகூட்டுப் பிரிவினைக் கோரிக்கைக்கான நடவடிக்கைகளை அனுமதித்தார். இந்திரா காந்திக்கு இருந்த அதே காரணங்களே ராஜீவ் காந்திக்கும் இருந்த போதும் பொதுக் கொள்கை, நடவடிக்கை தந்திரோபாயங்கள் பற்றிய ஒரு தெளிவின்மை இருவர் காலத்திலும் தொடர்ந்துள்ளது.

மொத்தமாக எவ்வளவு போராளிகள் பயிற்றுவிக்கப்பட்டார்கள், எவ்வளவு நிதி உதவியளிக்கப்பட்டது, ஆயுதவினியோகம், இளைஞர் இந்திய தரப்பு பேச்சுவார்த்தை போன்ற ஏராளமான விடயங்கள் இன்னமும் இரகசியமாகவே "ரோ" விஞல் பாதுகாக்கப்படுகிறது.

ஆஞலும் "ரோ" வின் சில இரகசியங்கள் அம்பலத்துக்கு வரவே செய்தன. குமார் நாராயண் என்ற இந்திய உளவாளி 300 உளவு அறிக்கைகளை பிரெஞ்சு உளவு நிறுவனத்துக்கு விற்றபோதும் அதில் ஸ்ரீலங்கா பற்றிய ஏழு பக்க அறிக்கையும் கூடவே விற்கப்பட்டது. புது டெல்கியிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தில் பணிபுரிந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி லெப்.கேணல். அலியன் பொலே என்பவர் குமார் நாராயண்ணுக்கு பணம், போதை, பெண்களை வழங்கி இவ்வறிக்கைகளை வாங்கி விட்டார். இவர் சீ.ஐ.ஏ, நேட்டோ நிதியுதவியில் இயங்கும் மேற்கு நாடுகள் உளவு மையத்திற்காகப் பணிபுரிபவர்.

இந்த ஏழுபக்க அறிக்கைகளில் இந்தியாவின் இரகசிய நடவடிக்கைகள் பல பகிரங்கப் படுத்தப்பட்டன. "ரோ" வின் நடவடிக்கைகளை அப்போது பகிரங்கப்படுத்திய இன்னோர் முக்கிய பிரமுகர் சஞ்சேயின் மனைவியும் இந்திராவின் மருகளுமான மேனகா காந்தியாவார். 'த ரிபியூன் இந்தியாவில் (The Tribune india 13 sept 84) பின்வருமாறு மேனகா காந்தி குறிப்பிட்டார். 'தமிழ் கொரில்லாக்கள் பயிற்சியளிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் பிரச்சனை கிளப்புவதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். இதன் மூலம் அங்கு சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து இங்கு ஒரு மதிமயக்கத்தை ஏற்படுத்தித் தேர்தலில் வெல்ல முயற்சிகள் நடக்கின்றன. திருமதி. காந்திக்குத் தேர்தலில் வெல்ல இரு மார்க்கங்கள் உள்ளன. அவர் பாகிஸ்தான மீது படையெடுக்கவேண்டும் அல்லது இலங்கையில் கலவரத்தை ஏற்படுத்த வேண்டும்."

இளைஞர்களுக்கு ஆரம்ப பயிற்சி சக்ருரா (உத்தரபிரதேசம்) இராம கிருஷ்ணபுரம் (புது டெல்லி) புது டெல்லி சர்வதேசவிமான நிலையத்துக்கு அண்மையில் ஒரு முகாம் என மூன்று இடங்களில் கொடுக்கப்பட்டன. சக்ருரா மிக மிக இரகசியமான பகுதியாகும். இது முன்னர் ரோவும், சீ.ஐ.ஏயும் இணைந்து தீபெத்திய 'கம்பாஸ்' போராளிகளைப் பயிற்றுவித்த இடமாகும். சீஞ வசமிருந்த தீபெத்தை விடுவிப்பதற்காக இது நடைபெற்றது. சக்ருரா பின்னர் முழுநேர தமிழ் போராளிகள் பயிற்சி முகாமாக மாற்றப்பட்டது. அத்தோடு முகாம்களின் தொகையும் அதிகரித்தது. வட இந்தியாவில் மட்டும் எட்டு முகாம்களில் 350 ரெலோ, 200 ஈரோஸ், 100 ஈபிஆர் எல்எப், 70 புளொட் (கடவுள் பிரிவு) என 'ரோ விஞல் பயிற்றுவிக்கப்பட்டனர்.

"ரோ" விஞல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட போதஞசிரியர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. பெரிய கைலாஸ் (புதுடெல்லி முகாம் பொறுப்பாளர்) சேர் என போராளிகளால் அழைக்கப்பட்டார். இரண்டாவது போதஞசிரியர் கேரளா நாயர் என்பவர் இன்ஞெரு முகாம் சாட்ராஜென் அபிவிருத்தி மையம், கனல் பாக் புதுடெல்லியிலிருந்து இங்கு வெடிகுண்டுத் தயாரிப்பு, துவக்கு பயிற்சிகள் என்பனவும் கீறின்பாக், புதுடெல்லி முகாமில் ரெலோ போராளிகளுக்கு பயிற்சியும் நாராயண் என்பவருடன் இன்னும் மூவரால் வழங்கப்பட்டது.

இவைகளுக்கும் மேலாக இன்னும் உத்தரப்பிரதேசத்தில் இரு முகாம்களில் ஆயுதங்களை கையாளல், சேகரித்தல் யுத்த முறை, தொலைபேசி தொடர்பு, இராணுவ தந்திரோபாயங்கள் என்பன பற்றி ரெலோ புளட் ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த 700 வரையான போராளிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தொடரும்

## ஒரு சிறுகதை

"ரோ" வைப் பற்றி எழுதும் போது இயக்கங்களையோ இயக்கங்கள் பற்றி எழுதும் போது "ரோ" வையோ தவிர்த்து எழுத முடியாதபடி இரு பகுதியினரும் பின்னிப் பிணைந்து இருந்ததஞல் "ரோ" என்ற தலைப்பின் கீழேயே இயக்கங்களின் பல விடயங்களை நீங்கள் பார்க்க முடியும் ஆஞலும் இயக்கங்கள் பற்றி தனியான "ஆய்வு"ம் வரும்.

## தொலைத்தொடர்பில்..

தேடிக் கண்டுபிடித்து உங்களுக்கு அனுப்பும்.

உதாரணமாக செய்திப் பத்திரிகைகள் என்ற பகுதிக்கு ஒரு ஏஜண்டை அனுப்பி, ஈழம் மலர்ந்த உடன் உங்களுக்கு தகவல் தரும்படி அறிவுறுத்துகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். பத்திரிகைகள் பகுதியில் உறங்கிக் கொண்டிருக்கும் ஏஜண்ட் ஒவ்வொரு நாளும் செய்திகளை படித்து ஈழம் மலர்வது பற்றிய செய்திகள் வரும்வரை காத்திருக்கும். என்ருவது ஒருநாள் 'ஈழம் மலர்ந்தது' என்று செய்தி வந்தால் போதும். நீங்கள் எங்கே இருந்தாலும் உங்களுக்கு சுடச் சுட அந்தச் செய்தியை அனுப்பும். இது தான் இந்த ரெலிஸ்க்ரிப்டின் விசேட தன்மை.

அடுத்த செப்டெம்பரில் இந்தக் கருவிகள் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. Sony ஜப்பானிய நிறுவனங்களும் Motorola, AT&T போன்ற அமெரிக்க நிறுவனங்களும் இந்த கருவிகளை உற்பத்தி செய்யவுள்ளன. ஆரம்பத்தில் சுமார் ஆயிரம் டொலர் வரை இருந்தாலும் காலப் போக்கில் ஒரு சில நூறு டொலர்களுக்கு இந்த கருவியை வாங்கக் கூடியதாக இருக்கும். இப்போது கைகளில் வீடியோக் கசட்டுக்களுடன் அலையும் தமிழர்கள் கையில் அப்போது இந்தக் கருவிகளைக் காணக் கூடியதாயிருக்குமோ என்னவோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## திறனாய்வு..

உண்மையைப் பறைசாற்றுகிறது. ஆக தமிழ் இலக்கியத்திற்குத் திறனாய்வு புதியதல்ல.

வாழ்க்கையையும் சமுதாயத தையும் இயக்கும் உயிர் மூச்சுள்ள சக்திகள் என்றும் தேங்கி நிற்பன அல்ல. அவை காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே வருவன. இவை மாறுதலுறும்போது வாழ்க்கையும் மாறுகிறது. சமுதாயமும் அதன் சித்தாந்தங்களும் கூட மாறுதலடைகின்றன.

இவ்வகையில் வாழ்க்கை யையும், சமுதாயத்தையும், அதன் சித்தாந்தங்களையும் கலை வடிவில் நகலெடுக்கும் இலக்கியங்களும் இவ்வடிப்படை விதிக்கு உட்பட்டு மாறுதலடைகின்றன. ஒரு குறிப்பிட்ட வரைவிலக்கணங்களுக்குள் நிற்காமல் அவற்றையும் மீறி புதிய புதிய உருவங்களோடும் புதிய புதிய உள்ளடக்கங்களோடும் சித்தாந்தங்க ளோடும் மாறுதல் பெற்று வளர்கின்றன. இலக்கியத் திறனாய்வும் அப்படியே.

இக்கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மூல நூல்களுக்குத் தோன்றிய உரை நூல்களும் திறனாய்வுதான். ஒவ்வொரு உரையாசிரியரும் மூல நூல்களில் பிரதிபலிக்கும் வாழ்க்கைச் சித்தாந்தங்களையும் சமூகப்பண்பையும் தான் வாழ்ந்த காலத்தின் வாழ்க்கைச் சித்தாந்தங்களோடும் சமூகப் பண்போடும் பொருத்திப் பார்த்திருக் கிறார். விமர்சனத் துறையின் சிறப்புமிக்க அம்சமான ஒப்புநோக்கு (Comparative study) செய்திருக்கிறார். இந்த வகையில் ஒவ்வொரு உரையாசிரியரும் விமர்சகராகத் திகழ்கிறார்.

இன்றையத் திறனாய்வு இன்றைய இலக்கியத் சித்தாத்தங்களை அடிப்படையாகக் கொண்டது. எனவே, இன்றையத் திறனாய்வைப் பரிசீலனை செய்வதற்கு முன்பு தற்கால இலக்கிய சித்தாந்தங்களைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இன்றைய இலக்கிய உலகில் இருவகை இலக்கிய சித்தாந்தங்கள் இருந்து வருகின்றன. ஒன்று உருவவாத சித்தாந்தம் மற்றது யதார்த்தவாத சித்தாந்தம்! உருவவாத சித்தாந்தம் இலக்கியத்தின் உருவ அமைப்பைத்தான் முக்கியத்துவப் படுத்துகிறது. உள்ளடக்கத்தை அசட்டை செய்கிறது. ஓர் இலக்கியம் தான் எடுத்துக்கொள்ளும் விஷயத்தை பற்றி அதிகம் அக்கறை செலுத்த வேண்டியதில்லை. அது தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்றவகையில் எந்த ஒரு விஷயத்தையும் கருப்பொருளாக எடுத்துக் கொள்ளலாம். அது யதார்த்தமானதாயுமிருக்கலாம். புறம் பானதாயுமிருக்கலாம். எவ்விதமான விஷயத்தையும் எடுத்துக் கொள்ள அதற்குப் பூரண உரிமையுண்டு, அதன் உரிமையில், சுதந்திரத்தில் தலையிடக் கூடாது. இலக்கியத்தின் நோக்கம் ரசனையை அளிப்பதே தவிர பயனை அளிப்பதல்ல ஆதலால் எப்படிச் சொல்ல வேண்டும் என்பதுதான் அதற்கு முக்கியமே தவிர, எதைச் சொல்ல வேண்டுமென்பதல்ல, இந்நோக்கத்தின்படி இலக்கியத்திற்கு உள்ளடக்கம் பிரதானமல்ல, உருவம்தான் பிரதானம். ஓர் இலக்கியத்தின் உருவம் ரசிக்கத்தக்கதாயும், கட்டுக் கோப்புள்ளதாயும், வியக்கத்தக்கதாயும் இருக்க வேண்டும் என்று விவாதிக்கிறது. அதாவது கலை கலைக்காக இருக்க வேண்டுமென்பது தான் உருவாதத்தின் அடிப்படைத்தத்துவம்.

யதார்த்தவாத சித்தாந்தம் இக்கருத்துக்களை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் உருவாவதத்தின் சில கோட்பாடுகளை அப்படியே அங்கீகரிக்கிறது. இலக்கியம் ஒரு கலை என்பதை யதார்த்தவாத சித்தாந்தம் ஏற்றுக் கொள்வதால், உருவ அமைப்பை அது அலட்சியம் செய்யவில்லை, உருவ அமைப்பில்லாத இலக்கியத்தை அது கலைச் சிருஷ்டியாகவே மதிப்பதில்லை, இன்னும் ஒருபடிமேலே சென்று ஓர் இலக்கியம் அதன் கலை அம்சத்தை- அழகியலை- அரைகுறைப்படுத்தக் கூடாது.

இலக்கியத்தின் கலைத்துவம் அழுத்தம் பெற்று அதன் பூரண வடிவத்தையும் கொண்டுவர வேண்டும்: நூற்றுக்கு நூறு அதில் கவனஞ்செலுத்தப்பட வேண்டும் என்று விதிக்கிறது. அதே சமயத்தில் உள்ளடக்கம் பற்றிய உருவவாத வித்தாந்தத்தின் கருத்துக்களை, இலக்கிய சம்பந்தமான அதனுடைய கோட்பாட்டை யதார்த்தவாத சித்தாந்தம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

தொடரும்

## செல்வம் எழுதும் தொடர் நாடகம்

## காட்சி 1 இன் தொடர்ச்சி

1வது ஆள்- மற்றவர்களுடைய பேப்பர்களை விடுங்கோ, நாங்களும் எங்கடை சங்கத்திற்கு பேப்பர் தொடங்கினோம். அதேன் தொடர்ந்து ஒழுங்காய் வராமல் இருக்கு என்பதை இப்ப ஆராய்வோம்.

6வது ஆள்- அதை ஆரம்பித்தவர்களில் ஒருவன் என்ற வகையில் நான் சில கருத்துக்களை சொல்லலாம் என எண்ணுகின்றேன். அப்பத்திரிகைக்கு "துவக்கு" என்று பெயர் வைத்ததே எல்லாவற்றையும் புதிதாய் தொடக்கி வைப்போம் என்று...

9வது ஆள்- அழிவில் இருந்தும் அறியாமைகளில் இருந்தும் இங்கு புதிதாய் பிறப்போம்-இனி எல்லாவற்றையும் புதிதாய் தொடங்குவோம் என்ற உற்சாகத்துடன் "துவக்கு" என்று பெயரிட்டோம்.

11வது ஆள்- ஆனால் அப்பத்திரிகை எல்லாவற்றிற்கு முடிவு கட்டும் துவக்கு என்ற அர்த்தத்தையே எங்களுக்கு தந்தது.

2வது ஆள்- நீ உன்ரை கருத்தை அதிலை எழுத விடேல்லை என்றுதான் இப்படி சொல்கின்றாய்.

1வது ஆள்- நீ எங்கடை காசிலை உன்ரை அங்கலாய்ப்பை அதில எழுதினனி

2 வது ஆள்- நீ முதலிலை மரியாதையாய் கதைக்க பழகு

தலைவர்- நீங்கள் இரண்டு பேரும் தொடர்ந்து இப்படியே கதைச்சுக் கொண்டு இருப்பீர்கள் என்றால் உங்கள் இருவரையும் வெளியேற்ற வேண்டிவரும்.

தனிவாக ஒரு குரல்- சொல்லாதையுங்கோ செய்யுங்கோ

3வது ஆள்- என்னெண்டு தெரியேல்லை இப்ப உலகம் முழுக்க இருக்கிற ஈழத் தமிழருக்கு பேப்பரும் சஞ்சிகையும் குடிசைக் கைத்தொழிலாய் போச்சு- கவிதையும் கட்டுரையும்தான் போராட்டமாய் போச்சு.

4வது ஆள்- ஊரிலை நோட்டிசை தவிர வேறு ஒன்றையும் வாசித்தறியாதவன் எல்லாம் பேப்பர் விடுகின்றார்கள். மித்திரன் பேப்பருக்கு உதவி நிருபராய் இருந்தவங்கள் இயக்க சஞ்சிகை அடிக்கிறாங்கள்.

www.tamilarangam.net

# ரொறன்ரோவில் யாழ்ப்பாணம்



அக்கறையில்லே அவர் இல்லாவிட்டால் பேப்பர் நடக்காது என்ற நினைப்பில் நாங்கள் பிழைதான் விட்டு விட்டோம்.

12வது ஆள்– நீ ஏன் துவக்குக்கு உதவி செய்யேல்லே? நீ ஏன் செய்யேல்லே என்று கேட்கிறீர்கள். நான் கடைசியாக வந்த துவக்கில் அவர் எழுதின கவிதையை வாசிக்கிறேன்– நல்லாய் கேட்டு சிந்தித்துபோட்டு சொல்லுங்கோ நாங்கள் செய்யறது சரியோ என்று.

உன்னால் என் வாழ்வு
துயர் பட்டு போனதடி
எப்படியிருக்க வேண்டியவன்
இப்படியானேன்.

வார்த்தைகளை கூராக்கி
ரத்தம் கசியக் கசிய பிருண்டு
உறைய விடாதே
கசியும் ரத்தத்தில்
உன் தாகம் தீர்த்துக் கொள்

தோற்றுப் போனவனுக்கு
வாழ்க்கைப் பட்டேன்
என உறவை
அழைத்து அழு

தேடு என் தவறுகளை
தேடியபடி இரு
சளைக்காதே ஓயாதே
ஓய்ந்தால் கிட்டாது
உன் உயிரின் தரிசனம்

என் தவறுகளில்
ஒளிந்திருக்கிறது
உன் வாழ்வின் சுடர்
தொடரும்

2வது ஆள்– ஏன் அண்ணை அப்படி?

4வது ஆள்– நாங்கள் விடயத்தை மறந்து எங்கையோ போறோம் என்று நினைக்கிறோம்.

9வது ஆள்– ஏன் எங்கடை பேப்பர் நிண்டது? கேக்கிற உன்னைப் பார்த்து கேக்கிறேன், தொடங்கேக்கை –பணம் தாறன்– பேப்பர் வித்து தாறேன்– விளம்பரம் சேத்து தாறன் என்று சொல்லிப் போட்டு– பேந்து ஏன் ஒழிச்சு திரிஞ்சனி–

11வது ஆள்– எனக்கு "துவக்கிலே" வந்த ஆக்கங்கள் பிடிக்கேல்லே. அதுதான் முக்கிய காரணம். பொதுவான பிரச்சனைகளுக்காக தொடங்கப்பட்ட பத்திரிகை தனிப்பட்ட தாக்குதல்களை செய்தது– எங்களுக்கு அதாவது தமிழருக்கு வந்த பல பிரச்சனைகளுக்கு காரணம் – தங்கடை பிரச்சனைகளை மக்களுடைய பிரச்சனையாக்கிய தலைவர்களால் வந்தது– துவக்கிலும் அது விட்ட குறை, தொட்ட குறை.

12வது ஆள்– "துவக்கு" பற்றி என்ரை கருத்தை சொல்லுகின்றேன்– முந்தி எங்களோடு இருந்து இப்போ இல்லாமல் இருக்கும் தோழர் ஏதோ தன்ரை மனைவியோடை பிரச்சனைப்பட்டு ஏதோ வேகத்தில் அதை கவிதையாய் எழுதி தர அது அவர்ரை குடும்பத்தையும் பாதிக்கும் என்று யோசியாமல் பிரசுரித்து விட்டார்கள்.

இடை மறித்து

10 வது ஆள்– அவர் ஏதோ கோபத்தில் தன் தனிப்பட்ட வாழ்வு பற்றி எழுதித் தாரூர், இதால் அவர் குடும்பம் சிதைந்தாலும் எங்களுக்கு

## அறுசுவை..

★ ★ ★

கனடிய பொருளாதாரத்தில் தமிழர்கள் உண்மையாகவே பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கனடாவின் பொருளாதார மந்த நிலை முடிவடைந்து விட்டதாக ரொறன்ரோவின் இரண்டு பத்திரிகைகள் முன் பக்கச் செய்தி வெளியிட்டிருக்கின்றன. என்னவென்று பார்த்தால், இந்த மாதம் மட்டும் ஆயிரம் பேருக்கு மேல் அரச உதவிப் பணம் பெறுவதை நிறுத்தி விட்டார்கள் என்றும் இது கடந்த பத்தாண்டுகளில் பெரிய தொகை என்றும் பத்திரிகைகள் விளாசியிருக்கின்றன.

எனக்கென்றால் ஒரு சந்தேகம். இங்கே அரச உதவிப் பணத்தை பலவேறு வழிகளில் எடுத்துக் கொண்டிருந்த தமிழர்கள் பலர், தற்போது அரசாங்கம் இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதைக் கண்டு நிறுத்தியிருப்பார்கள். இந்த தொகை ஒரு மாதத்தில் ஆயிரத்தை தாண்டியிருக்கும். இதைப் போய் ஏதோ பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட்டு மந்த நிலை மறைந்து சுபீட்சம் வருவதாக எழுதியிருக்கிறார்கள் போலும். எங்கே போய் முட்ட...


**சபாலிங்கம் கொலையைக் கண்டித்து**

**கண்டனக் கூட்டம்**


**தமிழர் வகைதுறை வளநிலைய மண்டபத்தில்**
**7.5.94 சனிக்கிழமை**
**மாலை 5 மணிக்கு நடைபெறும்.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

**ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது**

**பரீட்சித்துப் பாருங்கள்**

**Try First**

**பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்**


239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

**சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!**

# Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS



VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.



## NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.

Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada



## CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி படிவுகளாகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி படிவுகளை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றவையும் கிடைக்கும்.



## DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் றொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறிஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ. ஆர். கே
# மார்க்கட்

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**

**(416) 421 3429**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

வருமான வரிப் பத்திரங்களை பூர்த்தி செய்து
கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
CD, Audio மலிவு விலையில்

# A.R. K MARKET




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மா வாசம்



அருணன்

இந்தப் பெண்ணும்பெரிய ஆசுபப்த்திரியில் 231 ஆம் இலக்க அறைக்குப் போவது எனக்கு இப்போ பெரிய பிரச்சனையில்லை இன்றுடன் மூன்றாம் நாளாய் இங்கே வருகிறேனே.

எல்லாம் தெரிந்து கொண்டபின் வழிகாட்டிகளை அலட்சியப்படுத்துவது எல்லாரதும் இயல்புதானே. நானும் அம்புக்குறி வழிகாட்டிகளை அலட்சியப்படுத்திக் 231 இனுள் உள்ளிட்டேன்.

என் முதுகுப்புறத்தைத் தொடர்ந்து கொண்டு என் தலைமகளையும் காவிக்கொண்டு என் நடுவில் தங்கச்சியும் அவ் அறையுள் புகுந்து கொண்டாள்.

1,2,3! மூன்றும் கட்டிலில் சரிந்திருந்த என் மனைவி எங்களைக் கண்டு கண், மூக்கு, வாய் கன்னம் எல்லாம் பூரித்த வண்ணம் சிரமப்பட்டு எழுந்திருக்க முயன்றாள்.

பூரிப்பு இருக்காதா பின்னே! இந்த ஆசுபத்திரி நாற்றத்துக்குள், சுற்றிவர புன்கையே தரா இறுக்கமான அந்நிய முகங்களின் நடுவே படுத்துக் கிடப்பதென்றால் சிறை வைக்கப்பட்ட உணர்வுதான்.

கூப்பிட்ட போதும் கடமைக்காகவும் இடைக்கிடை புன்னகையை அதிகமாய் அப்பிக் கொண்டுவரும் செவிலியர். தான் ஏதோ நிம்மதி என்பதுதான் அவள் நிலைமை. இதை நான் உணராமல் இல்லை. என்ன செய்வது இந்த சிறை வாசம் தவிர்க்க முடியாதுள்ளதே.

இன்று அவள் "துண்டு வெட்டிக்" கொண்டு வீட்டுக்கு வருகிறாள் என்பதுடன் எம் மூத்த மகளை மூன்று நாளாய்க் காணமல் இன்று கண்டதும் அப் பூரிப்பில் அவள் கண்கள் தங்கச்சியின் கையில் இருக்கும் மகளிலேயே மொய்த்துக் கொள்கின்றன.

மகளும் இமைவெட்டாமல் தாயையே பார்க்கிறாள். மூன்று நாட்கள் பார்வையின் இடைவெளி

என் மனைவியை அவசர அவசரமாய் ஆசுபத்திரிக்கு கூட்டிச் சென்ற அந்த இரவு மகள் அழுதுவிட்ட அழுகை... இன்று அவள் பார்வை பனிக்கிறது. கண்களில் பிரகாசம் கூடுவது எனக்குத் தெரிகிறது. அது வேறொன்றுமல்ல, அன்றய கண்ணீரின் மீதி விழிவெண் படலத்தை கழுவிக்கொள்ளுது அது எனக்கும் புரிகிறது.

"குட்டி அம்மா! அம்மாட்டை ஓடி வாங்கோ"

என் மனைவி சிறுபிள்ளையாகி மகளை இரண்டு கைகளையும் நீட்டிக் கூப்பிடுகிறாள்.

மகளும் "அம்மா" என்றபடி பாயப் போவது போல் திமிறிக்கொண்டு கைகளை நீட்ட தங்கச்சியும் குறிப்பு அறிந்து மகளை தாயின் கட்டிலில் இறக்கி விடுகிறாள்.

என் மனைவி மகளை இறுக்கிக் கட்டிப்பிடித்துக் கொண்டே "என்ரை குட்டி அம்மா, அம்மா, பிள்ளையை விட்டுட்டுப் போட்டா எண்டு அழுதனீங்களே?" என்றபடி மாறி மாறி முத்தங்கள் கொடுத்துக் கொண்டே இருக்கிறாள்.

"இனி அம்மா, குட்டி அம்மாவை விட்டிட்டுப போகமாட்டேன்" என் மனைவியின் கண்கள் கலங்கிப் போய்விட்டது.

என் மகள் குட்டி அம்மா சந்தோசமும் வெப்பியாரமுமாய் திணறிப்போனாள். அவள் தொண்டை அடைத்துக் கொள்ள சிரிக்க முயல்கிறாள்.

சிறு பிராயமென்றாலும் பாசம் என்பது எவ்வளவு வலிமையாய் பிஞ்சு உள்ளங்களில் கூட இப்படி இதற்கு மேல் என்னால் சொல்ல முடியவில்லை. அதுதான் அதன் வலிமை.

என்கண்களும் கலங்கிப் போயின. இதை மறைக்க அல்லது மாற்ற என குட்டி அம்மாவை நான் தூக்கிக் கொள்கிறேன். மனைவி மீண்டும் குட்டி அம்மாவை பிரிந்து கொண்டாள்.

'குட்டி அம்மா' பாவம் அவள் என்ன செய்வாள்? ஓ, இவ்விடத்தில் ஒன்றைச் சொல்ல வேண்டும். குட்டி அம்மா என்பது என் மகளின் இயற்பெயரல்ல. அது வேறு. இது செல்லப் பெயர். நாங்கள் மலையாளப் படங்களை கூடுதலாய்ப் பார்ப்பதாலோ என்னவோ குட்டி அம்மா செல்லப் பெயராச்சோ, எனக்குச் சரியாய்ச் சொல்ல முடியவில்லை

"சின்னன் எங்கே?" என் தங்கச்சி இவ் உணர்ச்சி மயத்தை உடைக்கிறாள்.

'இப்ப நீங்கள் வரக் கொஞ்சம் முந்தித்தான் ஏதோ ரெஸ்ற் எண்டு கொண்டு போட்டினம்" என் மனைவி.

'கனநேரமாகுமோ திரும்பத் தர?"

"இல்லை இப்ப தந்து விடுவினம் சின்ன ரெஸ்ற் தான். ரெஸ்ற் பொசிற்றிவ் எண்டால்தான் நாங்கள் வீட்டை போகலாம்."

மகள் குட்டி அம்மா தாயின் முதுகுப்புறமிருந்து கொண்டு தாயைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தாள்.

தாதி குழந்தையை வண்டிலில் வைத்துத் தள்ளிக் கொண்டுவந்து தந்துவிட்டு எல்லாம் சரி என்றாள். தங்கச்சி குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோய் குட்டி அம்மாவிடம் "தங்கச்சி" எனக் காட்டினாள்.

குட்டி அம்மா சந்தோசச் சிரிப்புடன் "பம்பி" என உச்சரித்தாள் மெதுவாக.

அவள் தம்பி! என்பதையே அப்படிச் சொல்கிறாள். குழந்தை எது என்றாலும் அவள் தம்பி என்றே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லுவாள் அவளுக்கு ஒன்றரை வயதுதானே இதையெண்டாலும் சொல்லுருளே! இதற்கிடையில் தங்கச்சி கையில் இருந்த குழந்தை.. அதுதான் என் இரண்டாவது மகள் அழத்தொடங்கிவிட்டாள்.

"பசிக்குதாக்கம்" என்று தங்கச்சி என் மனைவியிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டாள் வெளியேறினுள்.

மனைவி பால் கொடுக்கத் தொடங்கிவிட்டாள். புட்டிப்பால் அல்ல.

இதையெல்லாம் இடை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த குட்டி அம்மாவிடம் மாறுதல் வரத் தொடங்கியிருந்தது.

தாயை கட்டியணைத்திருந்த அவள் கைகள் தளர்ந்தன.

மெதுவாக தாயின் முன்பக்கம் வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டாள் குழந்தையையும் தாயையும் மாறி மாறி பார்த்துக்கொண்டாள். தாயின் வயிற்றையும் பார்த்தாள்.

இக் குழந்தை பெற்றுக் கொள்ளும் வரை பெருத்திருந்த தாயின் வயிற்றை கட்டிப்பிடித்து "பம்பி" என்று முத்தம் கொடுக்கும் குட்டி அம்மாவின் செய்கையை எண்ணிக் கொண்டேன்.

குழந்தை பால் குடித்து முடிந்ததும் கட்டிலில் படுக்க வைத்து விட்டு என் மனைவி புறப்பட ஆயத்தங்கள் செய்தாள்.

குட்டி அம்மா தன் தங்கச்சியை (அவள் எண்ணப்படி பம்பி) கிட்ட நெருங்கி உற்றுப் பார்த்து விட்டு குழந்தை முடிவைத்துக்கொண்ட கைகளை விரிக்க எத்தனித்தாள்.

"மூக்கு" "காது". "கண்ணு" என்று குழந்தையின் அங்கங்களை இனங்கண்டு சொல்லிக்கொண்டாள். அவள் கண்ணை கண்ணு என்றுதான் சொல்லுவாள் மூக்கும், காதும் "உ' இல் முடிய கண் மட்டும் ஏன் 'உ' இல் முடியக்கூடாது என அவள் நினைத்திருக்கலாம்.

'பிள்ளையைப் பாத்துக் கொள்ளுங்கோ. பெரியவள் கண்ணுக்கை கிண்ணுக்கை குத்திப்போடுவாள்" என் மனைவி என்னை அக்கறை கொள்ளச் சொன்னுள்

"நான் பாத்துக் கொண்டுதான் இருக்கிறேன்" எனது சிந்தையான பதில்.

குட்டி அம்மா தாயை ஒருக்கால நிமிர்ந்து பார்த்துவிட்டு "கால்" "கை" எனச் சொல்லிக் கொண்டு அடுத்து "பொக்குள்" எனச் சொல்லிக்கொண்டு தொடப்போக என் மனைவி பாய்ந்து அவள் கையை பிடித்து 'குட்டியம்மா தங்கச்சிக்கு நோகும்" என்று சொல்லி விட்டு குழந்தையைத் தூக்கி உடுப்புகள் போட்டு வெளிக்கிடுத்தினுள்.

எல்லோரும் புறப்பட ஆயத்தம் செய்தோம். என் தங்கச்சி சின்னவளைத் தூக்கினுள். என் மனைவி "குட்டியம்மா அம்மாவோட வாங்கோ" என பெரியவளின் கையைப் பிடிக்க அவள் உதறிவிட்டு "அப்பா" எனக் கூறிக்கொண்டு என்னிடம் வந்தாள். நான் கையைப் பிடித்து நடத்த வந்தேன்.

வீட்டுக்கு வந்தோம். குழந்தையை தொட்டிலில் போட்டோம் மனைவி சாப்பிட்டுவிட்டு அசதியாய் இருப்பதாய் சொல்லிக் கொண்டு படுத்துவிட்டாள். குட்டி அம்மா அப்பாவுடனேயே ஒட்டிக்கொண்டாள். எப்போதும் தூக்கி வைத்திருக்கவே அடம்பிடித்தாள் புதுப் பழக்கமாக

தங்கச்சி வந்ததில் தன்னைக் கைவிட்டுவிடுவோமோ என நினைத்திருக்கலாம். யாரறிவார்?

தாய் படுக்கும்போது தாயுடனேயே உரசிக்கொண்டு படுத்துக்கொள்ளும் பெரிய மகள் இன்று அப்படி செய்யவில்லை இதற்கிடையில் நாங்கள் ஆசுப்பத்திரியில் இருந்து வந்திருப்பதை அறிந்து பக்கத்து வீட்டு 'அனரி' வந்தா என் மனைவியின் தூக்கம் குழம்பிப்போனது.

அதுகளுக்கு தொந்தரவாய் இருக்குமென்று நினைக்காது அறிந்த உடனே பார்க்க வரவில்லை என்ற குறை வரக்கூடாது என்று அவ நினைத்திருக்கலாம்.

நாங்களும் எங்கள் அலுப்பை காட்டிக்கொள்ளாது உபசரித்தோம். குழந்தையைக் காட்டினும். இப்படியே நண்பர்கள் உறவினர் வந்தனர். பிள்ளைப்பேற்றைப்பற்றி எல்லோரும் கேட்டனர். சொன்னேன் சுகமாய் பிறந்ததே நல்லதென்றனர்.

எனக்கு விளங்கவே இல்லை. என் மனைவி வலியில் கத்தியதையும் பாய்ந்து சாகப்போகிறேன் என்று வேதனையில் கத்தியதில் இருந்து குழந்தை பெற்றுக்கொள்வது எவ்வளவு வேதனை என நான் உணர்ந்து கொண்டதை சுகமாய் பெற்ருச்சு எனச் சொல்லிக் கொண்டதை எனக்கு விளங்கவே இல்லை.

எல்லோரும் வர வர என் "ரெக்கோட்டை" போட்டேன். அதே சொல்லி வைத்தது போல் அதே பதில் சொன்னுர்கள்.

குழந்தையைக் காட்டினும். மூத்தவளையும் ஒருக்கால் பார்த்தனர், தங்களுக்குப் பட்டதைச் சொன்னனர். இரவு வந்தது வீடு அமைதியானது.

மூத்த மகளை சாப்பாடு தீத்த என்று என் மனைவி கூப்பிட்டபோதும் அவள் மனைவியிடம் வரவில்லை "மாமி" என்று கூறிக்கொண்டு என் தங்கையிடமே சாப்பிட்டாள். படுத்து உறங்கவும் மனைவியிடம் வரவில்லை. பால் போத்தலை எடுத்துக் கொண்டு மாமியின் அறைக்கே கடந்த மூன்று நாட்கள் போல இன்றும் போய் விட்டாள்.

படுக்கை அறைக்கு வந்த என்னிடம் என் மனைவி வெப்பியாரத்துடன் முறையிட்டாள்.

'மூத்தவள் என்னட்டையிருந்து விலகி விலகிப் போருள். கூப்பிட வாருளில்லை, மாமி மாமி எண்டு மாமியோடைதான் ஒட்டுருள். படுக்கவைக்க அம்மாதான் வேணும் எண்டிருந்தபிள்ளை இப்ப மாமி எண்டு போகுது"

அவள் கண்கள் கலங்கிப் போனது

"சும்மா அழாதையும். மூண்டு நாளாய் அம்மா பக்கத்திலே படுக்காததாலே இண்டைக்கும் தங்கச்சியிற்றை போட்டாள். நாளைக்கு பகல் முழுக்க உம்மோடை இருக்க அவள் பழையபடி உம்மட்ட வருவாள்."

ஆறுதலுக்காகச் சொன்னுலும் அந்தத் தாக்கம் என்னிடமிருந்ததே அகலவில்லை.

"இதுதான் அடுத்தடுத்து பிள்ளைகள் பெறக்கூடாது. பிள்ளைக்கு விபரம் தெரியாமல் இருக்கைக்கை அதுக்கு எங்கை தங்கச்சி பிறந்ததாலே தான் புறம்பாயிட்டன் எண்டு நினைக்குது" என் மனைவி.

"பிள்ளைகள் எண்டால தன்னை எல்லாரும் செல்லமாய் வைச்சிருக்க வேணுமெண்டுதான் எல்லாப் பிள்ளையளும் நினைக்குங்கள்" இது நான்.

மனைவி குறுக்கிட்டாள் "இல்லை, அவள் அம்மா வாசத்தை மறந்திட்டாள் மூண்டு நாளாய் அவளுக்கு என்ரை வாசம் இல்லாமல் போனதாலே என்ரை வாசத்தை மறந்திட்டாள்" மனைவி அழுதாள்.

அம்மா வாசம் என்ற படிமம் எனக்கு உணர முடியாவிட்டாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்க முடிந்தது. நான் ஸ்தம்பித்துப் போனேன். ஒன்றுமே சொல்லவில்லே.

"நீங்கள் தான் சொன்னனீங்கள், ஒண்டரை இரண்டு வருச இடைவெளியிலே பிள்ளையள் பெத்தால் பெறுவதும் சுலபம் வளக்கிறதும் லேசு பிள்ளையள் ரெண்டுக்கும் அண்டஸ்ராண்டிங் இருக்கும். பிள்ளையள் இரண்டுக்கும் வயது வித்தியாசம் இருந்தால் வேற வேற காலத்து ஆக்கள் போல விலகிப் போகுமெண்டு நீங்கள் தான் சொன்னனீங்கள்"

"ஓம் சொன்னனன் அதிலே என்ன பிழை? நீருந்தானே ஏற்றுக் கொண்டனனீர்?" நான்

"ஓம் அப்ப எனக்கு சரி எண்டுதான் பட்டுது. இப்ப பாத்தீங்களே?"

"நீர் நினைக்கிறது பிழை பெரியவளுக்கு சின்னவள் வந்தது ஒரு அதிர்ச்சி தான். பழகினல் சுகமாய் போயிரும்.

"எனக்கு இன்னொரு பயமாய் கிடக்குது" மனைவி

"என்னது"

"ரெண்டாவதும் பிறந்ததாலே மூத்தவளுக்கு நாங்கள் வைச்ச பாசமும் இரண்டாய் பிரிஞ்சு குறைஞ்சுவிடுமெண்டு"

"பைத்தியம்" நான் சிரித்தேன்.

"சிரிக்காதையுங்கோ, நீங்களுந்தானே சொனனீங்கள் அண்டைக்கு ஆஸ்பத்திரியிலே"

"இல்லே நான் கேட்டனுன் பாசம் ரெண்டாய் பிரிஞ்சி போகுமோ எண்டு. இப்ப தெரியுது பிரியாதெண்டு"

"நீங்கள் சும்மா மழுப்பாதீங்க"

"இல்லே எங்கடை அம்மா அப்பா எல்லாம் எத்தனை பிள்ளைகள் பெத்திட்டினம் பாசம் பிரிஞ்சதாய் தெரியுதா?"

"யார் கண்டார்கள்"

மனைவி மௌனமாக அவள் எல்லாவற்றையும் அசை போடுகிருள் போல இருக்குது அல்லது என்னுடன் கதைக்க அசதியோ எது எனினும் நான் தப்பினேன்.

கட்டிலில் சாய்ந்தேன் முன்னுல் மணிச்சாடியுள் மணிக்கூடு ஓடிக் கொண்டிருந்தது. எனது சிந்தனை அதில் ஒன்றியது. அது ஒரு தத்துவம் சொன்னது செக்கன் முள், நிமிடமுள் மணி முள் என மூன்று முட்கள் இவை தனித்தவை இவை மூன்றும் ஒரே ஆணிவேரில் மையங்கொண்டிருக்கும் மூன்று முட்களும் வெவ்வேறு சொல்லிக்கொண்டாலும் மையத்திற்கு இவற்றுக்கு பேதம் கொள்ளத் தெரியாது. தாய்ப்பாசம் போல.

அந்த மணிக்கூட்டின் கால் மூன்று குண்டுகளைச் சுமந்து அரைவட்டமாய் அந்தரத்தில் ஆடிக் கொண்டிருந்தது. அது வேருெர் தத்துவம் சொன்னது என் மனமோ அத்தத்துவத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டது. என் மனம் என் மனைவியின் கேள்விகளுக்கு விடைகள் தேடிக் கொண்டிருந்தது.

என் மனைவி கேட்டபடி பாசம் பங்கு போடப்படக் கூடியதா? இந்தப் பூமியை நிறைத்துள்ள காற்றுப்போல், அள்ளி இறைக்கவும் மீண்டும் நிரம்பக்கூடியதுதான் பாசம். கண்டு பிடித்துவிட்டேன்.

அடுத்த கேள்வி ஏன் மூத்தவள் இளையவளின் பிறப்பினுல் தாயிடமி ருந்து ஏன் விலகிக் கொள்கிருள்? இக் கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டு சிந்தனையை சாணைபிடித்தேன்.

நான் முன்பு மனைவிக்கு சொன்னபடி அதிர்ச்சிதான். அதுதான் என்ன அதிர்ச்சி? சிந்தனை விடை காணு விட்டாலும் என் பழைய ஞாபகம். ஒரு ஏதோ சொல்ல வருவதுபோல் இருந்தது. சந்தர்பங் கொடுத்தேன்.

நான் பள்ளிக்கூடத்தில் படிக்கிற காலத்திலே ஆசிரியர் வர மாணவர் நாம் எழுந்து நிற்பது வழமை ஒருநாள் எல்லோரும் எழுந்தபோது எனக்குப் பின் இருந்த என் நண்பன் என் கதிரையை அரக்கிவிட்டு கொஞ்சம் உயரங்குறைந்ததை பதிலாய் வைத்ததால் என் பழைய கதிரை உயரத்தின் ஞாபகத்தில் இருக்க முயல அது தாழ்ந்து இருந்தது. அதிர்ச்சியைத்தந்தது. ஆனுல் விழவில்லை அதில் உயரம் கூடியது இருந்தாலும் அதே அதிர்ச்சி வரும்தான்.

இதுதான் என் மகளின் மாற்றத்துக்கான பதில் எனக் கண்டுபிடித்து நாளை இதைச் சொல்லி மனைவியை சமாளிக்கலாம் என எண்ணிக் கொண்டே அந்த ஆழ் தூக்கத்துள் மெல்ல அமிழ்ந்து கொண்டேன்.

என் மகள் நித்திரை கொண்டு கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பினுள் நான் முறுவலித்தபடி எழுந்து என்னவென்று கேட்டேன். மூத்த மகள் அழுதபடி நின்ருள் அவள் வயது ஏழு, எட்டு இருக்கும்,

"நான் வீட்டை விட்டு போகிறேன்" மகள் அதிர்ச்சியில் நான் என்ன? மகள் கதவு வரை சென்றுவிட்டு மீண்டும் "நீங்கள் தங்கச்சியிலே தான் பாசம் என்னிலே இல்லே நான் போறன்" என்ருள்.

மறைந்து விட்டாள்.

நான் விரைந்து உடுப்பை மாற்றிக்கொண்டு துரத்திக் கொண்டு ஓடுகிறேன்.

"குட்டி அம்மா நில் அப்பான்ரை சொல்லேக்கேள்"

"இல்லே நான் உங்களுக்கு தேவையில்லே" திரும்பிக் கத்தியபடி வீட்டுக்கு முன் ரோட்டைக் கடந்து அடுத்த பக்கம் போய் விட்டாள்.

"நில்லம்மா நான் சொல்லுறதைக் கேள் நீ எங்கட செல்லமல்லோ" கூவியபடி நான் பாய்ந்து ஓட....

கிறீச்ச்..... டமால் என்னை கார் அடித்துத் தூக்கி எறிய

"அம்மா" எனக் கத்தியபடி நான் குப்புற விழுகிறேன்.

"அப்பா" என்றபடி குட்டி அம்மா என்னிடம் ஓடி வருவது தெரியுது

"ஐயோ கார்" நான் சொல்ல முடியாமல் இருக்குது.

அதற்கிடையில் எதிர்பக்கம் வந்த கார் ஓடி வந்த குட்டி அம்மாவை மோதி மகளை தூக்கி எறிய

"ஐயோ அம்மா"

திடுக்கிட்டு எழும்பிப் பார்த்தேன். இருட்டு

என் கை கால்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டன இருதயம் விறைத்து போனது போல் இருந்தது.

மெதுமெதுவாய் கண் தெரிகிறது.

சற்றுத் தள்ளி என் மனைவியை அணைத்தபடி என் ஒன்றரை வயது குட்டி அம்மா அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

மகள் எப்படி இங்கு வந்தாள்? எனக்கு சிந்திக்க முடியவில்லை உடம்பு வியர்த்திருந்தது மட்டும் உணர்ந்து கொள்ள முடிந்தது.

நிர்சலனம் என்று சொல்வார்களே அப்படி என் மகளும் மனைவியும் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

இளைய மகள் ஒரு முறை அருண்டு விட்டு மீண்டும் உறங்கிக் கொள்வது தொட்டிலில் விழும் வெளிச்சத்தில் தெரிகிறது.

நான் மட்டும் பதைபதைப்புடன் கட்டிலில் விறைத்தபடி அமர்ந்திருக்கிறேன்.

உடலின் உதறல் மெல்ல தணிந்து வருகிறது. இதயத்தின் விறைப்பு மெல்ல இளகுவதை உணர்கிறேன் நான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மௌனமாக அழும்...

கலந்தாலோசித்து முடிவுக்கு வருமாறு நீதிபதி வலியுறுத்தியுள்ளார்.

தீர்ப்பு வழங்கி நீதிமன்றம் கலைகிறது. வக்கில் டயான் மார்ட்டினின் மார்பில் முகம் புதைத்து அருந்ததி அழுதார். டயான் அருந்ததிக்கு ஆறுதல் சொல்கிறார். அருந்ததி முன்பு தனக்காக வாதாடிய வக்கீல் வரவில்லையா என கேட்கின்றார். பாக்டேல் சமுகநிலையத்தில் பணிபுரியும் சுதா குமாரசுவாமியையும் கட்டியணைத்து முகம் புதைத்து தனக்கு யாருமில்லை என விம்மி விம்மி அழுத அருந்ததியை பார்த்து நானும் அழுதேன். அருந்ததி அந்த துயரமான சம்பவத்தையே நினைத்து . நினைத்து உருகிக் கொண்டிருக்கின்றார். எனக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. என்னை அறிமுகம் செய்து கொண்டபின்பு நான் அனுப்பிய கதைபுத்தகங்களை வாசித்ததாக கூறினார். ஏன் என் கடிதங்களுக்கு பதில் எழுதவில்லையென கேட்டேன். தான் யாருடனுமே கதைக்க விரும்பவில்லை தனிமையாக இருக்கவே விரும்புகின்றேன் என பதிலளித்தார். கைப்பணி வேலைகள் ஏதாவது செய்வீர்களா? என கேட்டதற்கு குறிப்பிட்ட நாட்களில் சில மணித்தியாலங்கள் ஒதுக்கப்படுமாம். அந்நேரத்தில் தான் ஸ்வெட்டர் பின்னுவதாகவும் ஒரு ஸ்வெட்டர் பின்னி முடியும் தருவாயிலிருக்கின்றது என்றார். உங்களுக்கு அங்கு நண்பிகள் உண்டா? என்றேன். "இருக்கின்றார்கள் சில சமயம் கதைப்பேன். சில சமயம் பேசாமலிருப்பேன் அண்மையில் என்னுடனிருந்த 6 பேரை கிங்ஸ்டனுக்கு அனுப்பி விட்டார்கள்" என்றார்.

தான் தன் அம்மா அப்பாவுடன் வெகு காலமாய் கதைக்கவில்லையென்றார்.

தான் வெளியே வந்தாலும் வகுப்புகளுக்கோ வெளியிலோ போகமுடியாது. பத்திரிகைகள் எல்லாம் என் படத்தை பிரசுரித்து விட்டன. இனி மக்கள் என்னை இவள் தான் அருந்ததி என வித்தியாசமாக பார்ப்பார்கள். நான் தனிமையாக இருக்கவே விரும்புகின்றேன் என்றார்.

அருந்ததியை தனிமையாக விட்டு விடுவோம். அவரது கடந்த காலத்தை மீண்டும் மீண்டும் கிளறி அவருக்கு மனவேதனையை மேலும் மேலும் அதிகப்படுத்தாமல் விட்டுவிடுவோம். எத்தனையோ அருந்ததிகளின் வாழ்வு நான்கு சுவர்களுக்குள்ளும் வெளியே வராமல் மௌன ஊர்வலம் நடத்தி வருகின்றன. இத்துயரங்கள் எல்லாம் என்று நீங்கும்? கௌரவங்களுக்காக சுவர்களுக்குள்ளே மரணித்துக்கொள்கின்றனவோ?

பாக்டேல் சமுகசேவையில் பணிபுரியும் சுதா குமாரசாமி அருந்ததியை தொடர்ந்து சந்தித்து ஆறுதல் கூறி அவருக்கு நிறைய வாசிப்பதற்கான புத்தகங்களை கொடுத்து ஆலோசனை உதவிகளையும் செய்து வருகின்றார். இவரைப் போன்று இன்னுமொரு பெண்மணியும் அவரை சந்தித்து ஆறுதல் சொல்லிவருகின்றார். இவர்களைப்போன்ற நல்ல இதயங்களுக்கு நாம் என்றும் நன்றியுடயவர்களா யிருப்போம்.

## வாழ்ந்து விடு மகளே

தேசம் தொலைவதில்லை
ஆத்மாக்கள் அழிவதில்லை
வாசம் மலரைவிட்டு வண்டுடனே சென்றிடுமா?
கதறி அழுவதனால் காலங்கள் நிற்பதில்லை
கண்மணியே மொனிக்கா கலங்காதே

நிதமும் பிரிந்திருந்து நிஜமாக பிரிவாகி
சதமும் நினைந்திருந்து சாகா நினைவாகி
சந்திக்கும் ஒருநாள் திரும்பி வராதாகி
கையறு நிலையோ மகளே கலங்காதே

பதினாறு வயதினிலே பாழான நோய் உனக்கு
தோளிற் சுமந்தேன் என சொல்லி அழுகின்றாய்
பூமாலை நீ எனக்கு
பொழுதெல்லாம் சுமந்திருப்பேன்
பாசத்தினால் மகளே கலங்காதே

ஆனாலும் என்னருமை மகளே
என் நெஞ்சு தாங்காது
சுமந்த சுமை உன் பிரிவால்
மண்ணோடு தேகம் காற்றோடு மூச்சு என்னும்
மேல்நாடு சேர்ந்தாலும் ஆன்மா ஆன்மாதான்

பாஸ்போட்டும் இல்லை பயணச்செலவும் இல்லை
காற்றோடு வந்து உனது கதறல் கண்டறிந்தேன்
வாழ்வின் நியதியிது
மாண்டார் மீண்டதில்லை
வாழ்கின்றேன் உன்னயலில் வருந்தாதே

அன்பே தான் இன்பம் அன்பே தான் உலகென்று
அழைக்கின்றார் பாமரர்கள்
அதை நம்ப வேண்டாமே
அன்பே தான் பிரிவிலே ஆறாத்துயரமம்மா
ஆதலினால் ஒட்டாமல் வாழ்ந்துவிடு

நீ பயிலும் இடமெல்லாம் நான் பயின்று வருகின்றேன்
நீ செய்யும் செயலெல்லாம் நான் கண்டு மகிழ்கின்றேன்
நின் வீட்டில் வசிக்கின்றேன் நீ அதனை உணராயோ
அப்பாவின் அருள் உனக்கு வாழ்ந்து விடு.

உன் கண்ணில் கண்ணீரா
என் ஆவி பதறுதடா உன் நெஞ்சின் நெடு மூச்சு
என் ஆவி பொசுக்குதடா கண்ணீரை அடக்கிவிடு
நிம்மதியாய் உலாவவிடு
என் ஆசி உன்னுடனே வாழ்ந்து விடு.

குறமகள் கனடா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**

# கனடாவில் Recession ஐ விரட்டியடித்த தமிழர்கள்

## அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூரியஸ் ஜீ

போன வாரம் சீக்கிய பத்திரிகையாளரைச் சுட்ட சீக்கிய தீவிரவாதி நாடு கடத்தப்பட்டது பற்றி எழுதியிருந்தேன். ஆனால் இந்த வாரம் பாரிஸில் சபாலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். புகலிடங்கள் புலியிடங்களாகி வருவதன் தொடர்ச்சி இது. ஈழப் போராட்ட ஆரம்ப காலத்திலேயே சிறைப்பட்டு வதைபட்டு வந்தவர் பின்னாளில் பிரான்சில் வசித்து வந்தார். ஈழப்போராட்டத்தில் கலந்துகொண்டு பின்னர் குடியும் குடித்தனமுமாக வாழ்ந்தவர்கள் மத்தியில் தொடர்ந்தும் தமிழுக்கான தனது பணியைச் செய்து வந்தவர் அவர். ஆசியா பதிப்பகத்தின் மூலமாக பல நூல்களைப் பதிப்பித்தவர். இதில் ஒன்று தான் நான் அடிக்கடி மேற்கோள் காட்டுகின்ற 'யாழ்ப்பாண வைபவமாலை'.

வரலாற்றை மறைப்பதற்காக 'அடிமைச் சின்னங்களை அழிக்கின்ற' எண்ணத்தில் கோட்டையை இடிப்பவர்கள் மத்தியில் வரலாற்று நூல்களின் தேவையை உணர்ந்து அவற்றை பதிப்பித்தவர் அவர். ஈழப் போராட்டம் பற்றிய பல தகவல்களை ஆவணப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்து அதற்கான செயற்பாடுகளில் இறங்கியிருந்தவர். கவிதை நூல்கள், புத்தளம் முஸ்லிம்களின் வரலாறு, ஜலண்டில் தராக்கி எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பு என்று பல்வேறு நூல்களை வெளியிட்டவர். தற்போதும் பல்வேறு தகவல்களைத் திரட்டி தொகுத்து ஆவணப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்.

முன்பு ஒரு தடவை தாயகத்தில் வந்த கட்டுரை ஒன்று தொடர்பாக உடனடியாக பதில் ஒன்றை அனுப்பியிருந்தார். அதில் குட்டிமணி, தங்கத்துரையைக் காட்டிக் கொடுத்ததன் பின்னணியில் யார் இருந்தார்கள் என்ற விடயம் கேள்விக்குட்படுத்தப்பட்டிருந்தது.

இன்று இந்தப் படுகொலைக்கு தாங்கள் சம்பந்தமில்லை என்று திலகர் மறுத்திருக்கிறார். எங்கப்பன் குதிருக்குள் இல்லை?

துப்பாக்கிகள் சரித்திரம் எழுதுகின்றன. சரித்திரம் எழுதுபவர்களுக்கு இனி இங்கே என்ன வேலை என்ற கணக்கில்...!

வரலாற்றைத் திரிக்கலாம். புது வரலாறு எழுதலாம். இப்படியான தனிமனிதப் படுகொலைகள் வரலாற்றில் மறைந்து விடப் போவதில்லை.

அதுசரி. இந்த 'வழிகாட்டுகின்ற வரலாறு' என்பது என்ன? உண்மையான வரலாறு? அல்லது இப்படி யாரோவால் திரிக்கப்பட்டு, சிதைக்கப்பட்ட வரலாறு?

வரலாற்று நாயகர்களான ஸ்டாலின் முதல் எல்லாருமே இன்று தோலுரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற வரலாறு எப்போது தான் வழிகாட்டுமோ?

★ ★ ★

இந்த வரலாற்றுத் திரிப்புகளுக்கு அப்பால் செய்தியைத் திரிப்பதற்கு இந்த 'ஈழநாட்டில்' பத்திரிகைகளும் உள்ளன. சபாலிங்கத்தை டெலோ இயக்கத்தின் தீவிர ஆதரவாளர் என்றும் வெளிநாடுகளில் தீவிரமாக விடுதலைப்புலிகளை விமர்சித்து வருபவர் என்றும் சர்ச்சைக்குரிய நூல்களை வெளியிட்டவர் என்றும் 'இயக்கியச் சந்திப்பு' (எழுத்துப்பிழை என்னுடையதல்ல) என்ற போர்வையில் புலி எதிர்ப்பு நடத்துவதையுமே தனது பிரதான தொழிலாகக்கொண்டிருந்தார் என்றும் புலி எதிர்ப்பாளர்கள் இக்கொலைக்கு புலிகளே காரணம் எனப் பிரசாரம் செய்வதாகவும் பிரான்சில் வெளிவருகின்ற பத்திரிகையை இங்கே ஒட்டி வெளியிடுகின்ற ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.


முதலாவது அடிப்படை மனிதாபிமானம். எதிரியாக இருந்தால் கூட மரணத்தில் கௌரவம் காப்பது பண்பு. இது கூடத் தெரியாதவர்களுக்கு ஒரு பேனை, பத்திரிகை. மற்றது ஒரு கொலைக்கு நியாயம் தேடுவது. புலி எதிர்ப்பு நடத்துவதையே தொழிலாகக் கொண்ட ஒருவர் என்று சொன்னால் அப்படியான ஒருவரைக் கொலை செய்வதற்கு புலிகள் அல்லாதவர்களுக்கு என்ன தேவை இருக்கிறது? எனவே புலிகள் தான் கொலையைச் செய்திருக்கலாம் என்று முடிவாகிறதே!

உண்டியல் தூக்கி, அதில் சேர்ந்த பணத்தை கபளீகரம் செய்ததற்காக உலகத்தமிழர் விரட்டிய பின்பும் புலிகளை விழுந்து விழுந்து ஆதரிப்பதற்கான காரணம் இப்போது புரிகிறது. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்ற கணக்கில் புலிகளை ஆதரிப்பது நடக்கிறது. எழுத்து விபசாரம் என்பது இதுதான். பணத்திற்காக தர்மம், நியாயங்களை மறந்து எதையும் செய்யத் தயாராக, எதையும் விற்கத் தயாராக இருப்பது!

அதுசரி, பொறுப்பாசிரியர்கள் இதற்கு என்ன சொல்லப் போகிறார்கள்? அவர்களும் இந்தக் கருத்துக்களுடன் உடன்படுகிறார்களோ என்னவோ? தங்கள் பத்திரிகை எரிக்கப்பட்டதும் 'தகுமோ? முறையோ?' என்றவர்களாச்சே!

★ ★ ★

சொன்னால் நம்ப மாட்டீர்கள். மேற்படி பத்திரிகை வெளியிட்ட செய்தியை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்னொரு பத்திரிகை/யாளர் தவறான தகவல் என்று மறுத்திருக்கிறார். மேற்படி பத்திரிகையின் செய்தி தவறானது. திரிக்கப்பட்டது என்றும் புலி எதிர்ப்பையே தனது தொழிலாகக் கொண்டவர் என்று தவறான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்றும் இந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. அத்துடன் படுகொலைக்கு அரசியல் பின்னணி உண்டென்று நிருபிக்கப்பட்டால், அது புலம் பெயர்ந்த ஈழத் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் ஒரு புதிய பரிமாணம் ஏற்பட்டுள்ளது என்பதன் அறிகுறியாகவே கருதப்பட வேண்டும் என்ற குறிப்பும் உள்ளது. பாராட்டுக்கள்! (வசிட்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் அல்ல!)

இப்போது வாசகர்கள் தான் முடியைப் பிய்க்கப் போகிறார்கள். எதை நம்புவது என்று?

★ ★ ★

இல்லாத மானத்திற்கு வந்த நஷ்டம் பற்றி சென்ற வாரம் எழுதியிருந்தேனா? அது பற்றி..

மொன்றியலில் 1986ல் தென்னாபிரிக்க ஆயர் ருற்று வந்திருந்தார். அவர் ஒரு கதை சொன்னார்.

ஒரு தடவை மாநாடு ஒன்றில் சாட் நாட்டின் அமைச்சரும் தென்னாபிரிக்க அமைச்சரும் சந்தித்துக் கொண்டார்களாம். அப்போது சாட் அமைச்சரை அறிமுகப்படுத்திய போது அவர் தான் சாட் நாட்டின் கடற்படைக்கு பொறுப்பான அமைச்சர் என்று கூறினார்கள். தென்னாபிரிக்க அமைச்சருக்கோ சிரிப்பு. 'இதென்ன, சாட் நாட்டிற்கு நான்கு புறமும் தரையிருக்கிறது. அங்கு கடல் என்பதே இல்லை. பிறகெப்படி அங்கு கடற்படை இருக்க முடியும்' என்று கேட்டார் அவர். சாட் அமைச்சரோ சிரிக்காமல் 'உங்கள் நாட்டில் நீதியமைச்சர் இருக்க முடியும் என்றால், ஏன் எங்கள் நாட்டில் கடற்படைக்கு அமைச்சர் இருக்க முடியாது?' என்று பதிலுக்குக் கேட்டாராம்.

அந்த நாடுகளில் இப்படி இருக்கும் என்றால்.. மானம் இருப்பதில் என்ன சந்தேகம்?

★ ★ ★

தென்னாபிரிக்காவில் எனக்கு ஒரு மாஜி பெண் நண்பி ஒருத்தி இருந்தாள். இது பத்து பன்னிரண்டு வருடத்திற்கு முந்திய கதை.. நண்பி என்றால் பேனா நண்பி தான். அழகான கையெழுத்து அவளுக்கு. அவள் தான் colored இனம் என்று எழுதியது விளங்காமல் மண்டையை உடைத்துக் கொண்டேன். பிறகு தான் தெரியும், அது கலப்பு இனத்தவர்கள் என்று. பிறகு தொடர்புகள் விட்டுப் போய் விட்டன. இன்று அவளும் மகிழ்ச்சியில் துள்ளுவாள் என்று நினைக்கிறேன்.

★ ★ ★

இந்த மாஜிக் காதலிகள் விவகாரம் ரொம்ப மோசம். விசயம் தெரியாமல் மாஜிக் காதலி சூர்ப்பநகா ஆங்கிலம் படித்த பத்தாண்டு நிறைவைப் பற்றி சென்ற வாரம் எழுதியதில் குடும்பத்தில் கலவரம். பெரும் பேஜாராய் போய் விட்டது. தண்டச்சோற்று தடியா, உனக்கு இவ்வளவு கொழுப்பா? என்று அபிதகுஜாம்பாள் பட்டினி போட்டு விட்டாள். வழமையில் பாணும் பழமும் கைகளில் ஏந்தி, பவள வாயில் புன்னகை சிந்தி கோலமயில் போல வரும் அவள் என்னைப் பட்டினி போட்டு வதைத்து விட்டாள். என் வயிற்றெரிச்சலை யாரிடம் சொல்வேன்?

என் தலையில் இவளைக் கட்டி வைத்த என் ஆத்தா.. அங்கயற்கண்ணியம்மாள் எனக்கு எழுதிய கடிதத்தை வாசித்துப் பார்த்தேன். இவளைக் கட்டினால் பத்தினியாய் இருப்பாள் என்று எழுதியிருந்தது. இவளைக் கட்டினால் பட்டினியாய் இருப்பாய் என்பதைத் தான் எழுத்துப் பிழையாய் எழுதினாளோ என்னவோ..

★ ★ ★

தற்போது பாலும் பழமும் கைகளில் ஏந்தும் பாவையர் கைகளில் இடியப்பமும் பாணும் துள்ளி விளையாடுகிறது. கணவன்மார் பாடு அரோகரா! கடைகளில் ரோஸ்ட் பாணும், இடியப்பமும், தோசையும் அப்பமும் சுடச்சுட கிடைப்பதால் வீட்டில் சமையல் குறைகிறது. கடைகளில் வீடியோக் கசட்டுகளுடன் சாப்பாட்டுப் பார்சலும் ஒன்றாகப் பெற முடிகிறது. தனியே சோத்துக்கடைக்குப் போய் (ஐ மீன், றெஸ்ரோறன்ட்!) சாப்பாடு வாங்குவதில் அசௌகரியங்கள், வெட்கங்கள் உள்ளன. கடை என்றால் இரண்டாம் ஆளுக்குத் தெரியாது. பாண் விசயம் வேறு. ஆனால் கடையில் வாங்கிய இடியப்பம், தோசைகளை

## அறு(சு)வை

தாங்கள் செய்ததாக கூறி சுத்துகின்ற பெண்களும் உண்டாம். உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு என்பது இதைத் தானோ?

உண்மையில் பெண்கள் மட்டுமே முறிந்து முறிந்து சமைக்க, உடம்பை அசைக்காமல் பியருடன் வீடியோ பார்த்து விட்டு 'முழுங்குகிற'வர்களுக்கு சரியான தண்டனை தான். ஆண்களின் அடக்குமுறையிலிருந்து பெண்ணினத்துக்கு விடுதலை வாங்கித் தந்த இந்த 'சாப்பாட்டுத் தயாரிப்பாளர்களுக்கு' ஜே!

★ ★ ★

இந்த ரெடிமேட் சாப்பாடுகள் எம் பெண்மணிகளுக்கு விடுதலை வாங்கித் தந்தது ஒருபுறம். கனடிய நிறுவனம் ஒன்று பெண்மணிகள் கேக் தயாரிப்பதற்காக செலவிடும் நேரத்தைப் பார்த்து விட்டு, ரெடிமேட் கேக் மிக்ஸ் ஒன்றை தயாரித்து வெளியிட்டது. ஆனால் அந்த மிக்ஸ் விற்பனை பெரிய சாதனை ஒன்றையும் படைக்கவில்லை. காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், பெண்கள் கேக் தயாரிக்கும் போது, அவர்கள் தங்கள் குடும்பத்தின் மீதான கரிசனை முக்கியமானதால் நேரம் அவர்களுக்கு பெரிதாகப்படவில்லை. குடும்பத்தின் மீதான அன்பு, அக்கறையைக் காட்ட, பொறுமையாக நேரம் எடுத்துச் செய்வதில் தான் அவர்களுக்குத் திருப்தி என்பதை பின்னர் எடுத்த கருத்துக் கணிப்புகள் காட்டினவாம்.

கியூரியஸின் ஆச்சி, அப்பமோ தோசையோ சுடுவதற்காக எடுத்துக் கொண்ட சிரமங்கள்.. அப்பப்பா.. இது ஒரு முழு நாள் வேலை. அதில் உண்மையில் தோசையில் இருந்த ருசியை விட எங்கள் மீதான அன்பும் அக்கறையும் தான் அதிகம். காலை எழுந்து பல் விளக்காமல் அந்த தோசையில் கியூரியஸ் உப்பு அளவு பார்த்துச் சொன்னால் தான் அவருக்குத் திருப்தி. எனக்கும் பல் தீட்ட வேண்டிய அவசியமில்லையே என்ற திருப்தி.

★ ★ ★

இந்த சாப்பாட்டு வினியோகஸ்தர்களுக்கு இடையிலான போட்டியில் ஒரு வினியோகஸ்தர்கள் தங்கள் கடையில் விளம்பரமாய் போட்டிருந்தார்களாம். 'எங்களது பார்சலில் உள்ள இடியப்பங்கள் 25. அவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்சலில் உள்ளது 20' என்ற மாதிரி ஒப்பிட்டு. கடைக்கு கடை விதம் விதமான சாப்பாடுகள். சில கடைகளில் மற்றவர்களின் பார்சல்களை விற்ருல் சில வினியோகஸ்தர்கள் தங்கள் உணவுப் பொருட்களை அங்கே விற்பனைக்கு வைக்க மாட்டார்களாம்.

இருந்தாலும் ஸ்காபரோ விற்பனை நிலையம் ஒன்றில் சுடச் சுட ரேஸ்ட் பாண் மாலை நேரங்களில் கிடைக்கும். அதை வாங்கி தனியே உண்பதில் உள்ள சுவையே தனி. இந்த பாண் முன்னரே கிடைத்திருந்தால், நான் அபிதகுஜாம்பாள் கழுத்தில் தாலியைக் கட்டி அவஸ்தைப்பட்டிருக்க மாட்டேனே. பட்ட பின்னுலே வருகின்ற ஞானம் யாருக்கும் உதவாது?

★ ★ ★

செவிக்குணவில்லாத போழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்.. கடைகளில் வயிற்றுப்பசிக்கு பாண் போல, மூளைப்பசிக்கு திருக்குறள் உண்டு. திருக்குறள் இருக்கா என்று கேட்டால், திருக்கை ருல் என்று விளங்குகின்ற கடைக்காரர்கள் அதிகம். ஆனுல் இப்போது வீரமணி குழுவினர் திருக்குறளின் 1330 குறள்களையும் பாடல்களாகப் பாடி ஐந்து கசட்டுகளில் வெளியிட்டுள்ளார்கள். இந்த கசட்டுக்களை ஏ.கே.இன்டர்நாஷனல், 4 வேட் அவனியு, லான்ஸ்டவுன் பாதாள ரயில் நிலையத்திற்கு அருகில் பெற்றுக் கொள்ளலாம். கியூறியஸின் அறு(சு)வையில் வாசித்ததால் தான் இந்த கசட் பற்றி அறிந்தோம் என்பதைக் குறிப்பிடுங்கள். ஏனென்ருல் கியூறியஸின் விளம்பரங்கள் இலவசமாக வாசகர்களை சென்றடைகின்றன அல்லவா!

★ ★ ★

இலவசமாக விளம்பரம் சென்றடைகின்றன என்பது பற்றி... இலவசமாக வருகின்ற சூரியன் பத்திரிகையின் வருகை பலரின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது. 'தமிழ் மக்களுக்கு சேவை செய்கின்ற பத்திரிகைகளின்' விளம்பர வருமானத்தில் பாதிப்பு ஏற்படுமே என்பதால்.

கடை ஒன்றில் வேலை நடைபெறும் போது அதை மறைப்பதற்காக ஒட்டப்பட்ட பத்திரிகை சூரியன் என்றுகிண்டலாக இன்னெரு பத்திரிகை ஆசிரிய தலையங்கம் பகுதியில் எழுதியிருந்ததுடன் படமும் பிரசுரித்திருந்தது. 'எமது விளம்பரங்கள் இலவசமாக சென்றடைகின்ற வாசகர்களை' என்ற அறிவித்தலுடன்.

கண்ணுடியில் ஒட்டுகின்ற பேப்பர் காசுக்கு வாங்கித் தான் ஒட்ட வேண்டும் என்று விதிமுறை இருக்கிறதோ என்னவோ? ஆனுல் இப்படி ஒட்டத்தான் லாயக்கு என்ற பிரமையை ஏற்படுத்த மற்றப் பத்திரிகை முயல்கிறது. 'உரிமை கோருதல்' என்பது இப்படித் தான். விற்பனையில் முன்னிற்கும் பத்திரிகை என்ற உரிமை கோருதல் தற்போதைய சூரிய உதயத்தால் சிக்கலாகி விட்டது.

அத்துடன் இலவசப் பத்திரிகை விளம்பர டொலர்களை விழுங்கி விடும் என்ற பயம் தந்த பாதிப்பாகவும் இருக்கக் கூடும்.

★ ★ ★

இப்போது உரசு பத்திரிகை இலவசமாக வரப் போவதாக தகவல் அடிபட்டது. எதிர்பார்த்தது தான். தேங்காய் தலையில் விழுந்து ஈர்ப்பு சக்தியைக் கண்டுபிடித்திருக்கிருர்கள். காசுக்கு கொடுத்தால் யாரும் வாங்க மாட்டேங்கிருர்கள். இலவசமாய் கொடுப்போமே என்ற எண்ணம் ஒன்று. மற்றது இலவசமாய் கொடுத்தால் விளம்பரம் அதிகம் கிடைக்கும் என்ற எண்ணம்.

இனி போகிற போக்கில் வெளிவருகின்ற எல்லாப் பத்திரிகைகளுமே இலவசமாகத்தான் வெளிவரும் போலிருக்கிறது. அத்தோடு ஒவ்வொன்றும் ஆளுக்காள் அழகிகள் வெளியிடவும் கூடும். யாராவது ஒருவர் வழிகாட்டினுல் பின்னுல் போகின்றவர்கள் தானே. ஈழ'நாடும்' அழகி, ஈழம்'உரசும்' அழகி, மஞ்சரிக்கும் அழகி என்று ஆளுக்காள் படம் போடப் போகிருர்கள்.

குமுதத்தில் டாவி டிக்ஷில் வந்தது மாதிரி.. அழகி: கொலை செய்யப்படும் பெண்களுக்கு தமிழ் பத்திரிகைகள் வழங்கும் பெயர்.. என்பது போய், அழகி: கனடிய தமிழ் பத்திரிகைகளுக்கு போஸ் கொடுப்பதற்காக மட்டும் சேலை உடுப்பவர்கள்.. என்று வரப் போகிறது.

சேலை உடுப்பதால் மட்டும் பண்பாடு காக்கப்படுமோ?

33ம் பக்கம் பார்க்க..

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினுல் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

**வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.**

**உங்கள் ஆக்கங்கள். பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும் ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.**

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும்**
Georgicka communications
**பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


SIVA'S
TRADING CO LTD
321-2739

ஸ்காபரோ நகரின்
தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

அனைத்துப்
பொருட்களும்
மலிவுவிலையில்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்